# யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்

# ‘நமசிவாய நாதம்’






மலர் - 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

M. Aananthakumaran

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலயம்

# நமசிவாய நாதம்

## மலர் – 1

## 2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

**இராகம் : மோகனம்** **தாளம் : ஏகம்**

நமசிவாய வாழ்கவே, நமசிவாய வாழ்கவே நமசிவாய வாழ்கவே
அறியாமை இருளகற்றி அறிவொளியை நிதம்பரப்பி
செறிவான கல்வியூட்டும் செழுங்கலை தெய்வமான
நமசிவாய வாழ்கவே, நமசிவாய வாழ்கவே, நமசிவாய வாழ்கவே

ஈழமாதா இதயமாம் இனிய யாழ் நகரத்தில்
இன்ப நல்கு கொட்டடியின் இனிய ஞான சூரியன்
கல்வி, ஞான, கவின்கலை கருத்தொளிரும் சிந்தனையும்
செவ்விதம் உடற்பயிற்சி செம்மை சேர்நலம் பெறவே
நமசிவாய வாழ்கவே, நமசிவாய வாழ்கவே நமசிவாய வாழ்கவே

சத்தியம், சிவம், சுந்தரம் நித்திய வாழ்வு ஈன்றிடும்
உண்மை, நன்மை, அழகுசேர் உயர் பொருள் இல்லமாம்
சாந்துணையும் கல்வியெனும் தாகமதை ஊட்டியே
திக்கனைத்தும் புகழ்மணக்கும் சிந்தைக்கினிய அன்னையாம்
நமசிவாய வாழ்கவே, நமசிவாய வாழ்கவே, நமசிவாய வாழ்கவே

**இயற்றியவர்**


**கு.சண்முகநாதன்**

**(அதிபர்)**

**1991**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் அமைவிடம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் அறிமுகம்



**சை**வமும் தமிழும் தழைத்தோங்கும் முகமாக மேன்மை தகு நமசிவாய செட்டியார் அவர்களால் 1928ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 79 வருடங்களாக சேவையாற்றுகின்ற நமசிவாய வித்தியாலயத்தின் ஒரு மைற் கல்லாக ''நமசிவாய நாதம்'' என்னும் இம் மலர் ஆடல் வல்லான் நடராசப் பெருமான் திருவருளினால் மலர்ந்து வெளியாகி உங்கள் கைகளிலே நாதமாய் ஒலித்துக் கொண்டு இருக்கின்றது.

இது நமசிவாயச் செட்டியாரின் குறிக்கோளின் படி. கடந்த எழுபத்தொன்பது வருடங்களாக சமுதாயத்துக்கு ஆற்றிய பணிகளையும், கடந்த காலத்தில் பணியாற்றிய சிறந்த முதல்வர்களால் வித்தியாலயம் பெற்றுக்கொண்ட சேவைகளையும். வித்தியாலயத்தின் வரலாற்றை ஆவணப்படுத்துகின்ற ஒரு முதல் நூலாக இந்த நாதத்தை தங்கள் கைகளில் தவழவிடுகின்றோம்.

அத்துடன் வித்தியாலய மாணவர்களின் வளர்ச்சியை காட்டுவதற்காக மாணவர்களால் ஆக்கப்பட்ட கட்டுரை, சிறுகதை, கவிதை என்பவற்றுடன் மாணவர்களுக்கு பயன் தரக்கூடிய ஆசிரியர் ஆக்கங்களும் மலரை அலங்கரிக்கின்றன.


இவ்வாறு அமைந்திருக்கின்ற இம் மலர் மேலும் மேலும் உயர் பணி ஆற்றுவதற்கு வழிகாட்டும் ஒரு துணையாகவும் வித்தியாலய வரலாற்றை நிலை நிறுத்துகின்ற ஒரு ஆவணமாகவும் நின்று நற்பயன் தரும் என இம் மலர்க்குழு நம்புகின்றது.

**மலர்க்குழு சார்பில்**
**தி.சோமசேகரம்** (S.L.P.S.2-I)
**பிரதி அதிபர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவின் ஆசிச் செய்தி



உயர் திரு தலைமை அதிபர், ஆசிரியர்கள், மாணவ, மாணவியருக்கு, எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகர் குருவருளும், திருவருளும் கிடைக்கப் பிரார்த்திப்போமாக!

"நமசிவாய நாதம்" என்னும் நூல் வெளியிடுவதை அறிந்து பெருமகிழ்வடைகிறேன். எமது கொட்டடிப் பிரதேசத்தில் சைவ மாணவர்களின் கலாச்சாரமும், ஒழுக்கமும் குலையாது கல்விப் பணி ஆற்றிவரும் இப்பாடசாலை "நமசிவாய" எனும் திருவைந்தெழுத்தைக் கொண்டமைந்துள்ளமை இதற்குச் சான்றாகும்.

எமது ஆலயத்திற்கு அண்மையுள்ள நமசிவாய வித்தியாலயத்தின் வளர்ச்சியை நான் அருகிருந்து அறிந்து வருகிறேன். இம்மலர் வெளியீடானது இப்பாடசாலையின் முதல் வெளியீடாகும். இது போன்று இன்னும் பல ஆக்கங்களை வெளியீடு செய்து மாணவரின் ஆக்கங்களை வெளிக்காட்டி எமது பிரதேசத்தில் உயர்ந்த ஒரு பாடசாலையாக வளர வீரகத்தி விநாயகர் என்றும் துணை நிற்பார் என ஆசி கூறுகிறேன்.

பிரதம குரு
சிவப்பிரம்ம ஸ்ரீ கிரியாதிலகம்
**க.ச.சிவசாமிக்குருக்கள்**

வில்லூன்றி தேவஸ்தானம்.
கொட்டடி.
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.கல்விப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி

## பொலிவுடன் விளங்கும் ஆலயம்



இறைவனின் மந்திரத்தை பெயராகக் கொண்டு இயங்கிவரும் யாழ். கொட்டடி நமசிவாயம் "நமசிவாய நாதம்" எனும் மலரினை வெளியிடுவது குறித்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். இப்பாடசாலை ஏழைச் சிறுவர்களுக்கான கல்வியைச் சமநிலையுடன் இவ்வளவு காலமாக வழங்கிவருவதால் அது தன் தொண்டாற் சிறப்புற்று மேலோங்கி நிற்கின்றது. அதிபர் திரு. சு. நடராஜலிங்கம் காலத்தில் அவரால் செயற்படுத்தப்பட்டு பாடசாலை பொழிவுடன் விளங்குவதைக் காண மகிழ்ச்சியாக உள்ளது. இவர் தமது காலத்தில் பௌதீக வளங்களையும் மனித வளங்களையும் தனது அயராத உழைப்பினாற் பெற்று மாணவர்கள் மகிழ்வுடன் கற்க வழிசெய்துள்ளார். இவருக்கு ஆக்கமும் ஊக்கமுமாக இப்பாடசாலை ஆசிரியர்கள் தமது தோள் கொடுத்து செயற்திட்டங்களை பூரணப்படுத்தியுள்ளனர்.

மாணவர்களின் கல்வி விருத்தியையே நோக்காகக் கொண்டு உழைத்தமையால் தமது இலக்கை இப்பாடசாலை எட்டக்கூடியதாக உள்ளது. இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு உரமூட்டுவதாக இம்மலர் வெளியீடு அமைகிறது. இதற்கான அதிபரின் முயற்சி மெச்சத்தக்கது. மாணவர்களின் ஒழுக்க மேம்பாட்டில் இவரது பங்களிப்பு சிறப்பானதாகும். பாடசாலை வளர்ச்சி என்பது பொதுப் பரீட்சை அடைவுகளை காட்டியாகக் கொண்டது. இப்புள்ளி விபரங்கள் இப்பாடசாலையின் வளர்ச்சியைக் காட்டுவதாக உள்ளது. இம்மலர் வெளியீட்டின் மூலம் இப்பாடசாலை இன்னும் பல வளங்களைப் பெற்று பொலிவுடன் வாழ வாழ்த்துகிறேன். இதற்காக அயராது உழைத்த அதிபரையும், ஆசிரியர் குழாத்தையும் பாராட்டுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**வே. தி. செல்வரத்தினம்**
யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரும்
யாழ். மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நமசிவாய நாதம்' சஞ்சிகை வெளியீடு தொடர்பாக வழங்கப்பட்ட ஒரு சிறப்புச் செய்தி

நமசிவாயம் என்ற பெரியாரினால் 1928 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 'நமசிவாய' நாமத்தினால் இயங்கிக் கொண்டிருக்கும் இவ்வித்தியாசாலை தனது 79வது அகவையில் முதல் முயற்சியாக இம் மலரை வெளியிடுவது பாராட்டிற்குரியது.

யாழ்ப்பாண நகரத்தின் மையப் பகுதியில் பல வருடங்களாகக் குறைந்த வசதிகளுடன் இயங்கி வந்த இவ்வித்தியாசாலை இரண்டாயிரமாம் ஆண்டுகளில் கட்டட, தளபாட வசதிகளையும் ஆசிரிய வளத்தையும் பெற்று படிப்படியான வளர்ச்சியைக் கண்டுள்ளதுடன் இப்பிரதேச மாணவரின் கல்விச் செல்வத்தையும், சமூக விழுமியங்களையும் வளர்த்து வருகிறது. இன்று மனநிறைவுடன் கல்வி பயிலும் மாணவர்கள், மனச் சாட்சியுடன் கடமைபரியும் ஆசிரியர்கள், பாடசாலையை முழுமையாக வழிநடாத்தும் அதிபர்கள் பாடசாலை நிருவாகத்துடன் ஒத்துழைக்கும் பழைய மாணவர், பெற்றோர், நலன் விரும்பிகள் யாபேரினதும் செயற்பாடே இவ் வித்தியாசாலையின் வளர்ச்சிக்கும், இப்படியான சிறந்த ஒரு முயற்சிக்கும் அடிநாதமாக விளங்குகிறது.

தொடர்ந்தும் இக் கல்லூரி தனது சமூகத்திற்குச் சிறந்த சேவையாற்றுவதுடன் சமூகத்திற்கு இது போன்ற பல மலர்களை மலரச் செய்து சிறப்புற இயங்க இறையருள் வேண்டி வாழ்த்துகிறேன்.

**திருமதி. எஸ். மகாலிங்கம்**
முன்னாள் யாழ்ப்பாண வலயக் கல்வி பணிப்பாளரும்,
முன்னாள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலயம் இப் பெயரைப் பலரின் வாய்மூலம் பல தடவை கேட்டிருக்கின்றேன். ஏதே ஒரு விமர்சனத்திற்காக, ஏதோ ஒரு உதாரணத்திற்காக இப் பெயர் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இப்பாடசாலையுடன் நெருக்கமான பரீட்சயம் எதுவும் எனக்கு ஏற்பட்டிருக்கவில்லை.

கடந்த ஆண்டில் ஏற்பட்ட தீவக மாணவர்கள் இடப்பெயர்வுடன், இப் பாடசாலைக்கும் எமது வலயத்திற்கும் இடையில் நெருக்கமான உறவுகள் ஏற்பட்டன. தீவகத்தின் நுழைவாயிலில் உள்ள பாடசாலைகளிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்கள் யாழ்ப்பாண நகரப் பாடசாலைகளில் அனுமதிக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. அப்போது "கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் எம் மாணவர்களை அனுமதிப்பார்களா?" தீவக அதிபர்கள் பலரும் என்னிடம் கூறினர். அப்போது இப்பாடசாலை தொடர்பான எனது மனப்பதிவு நன்கு அமைந்துவிட்டது.

தொடர்ந்து எம் மாணவர்களின் அனுமதி கோரி இப் பாடசாலைக்குச் சென்ற மாணவர்கள் அனைவருக்கும் அனுமதி வழங்கப்பட்டமை, பாடசாலையின் வளங்களை எம் மாணவர்களும் பயன்படுத்த அனுமதித்தமை, பாடசாலையின் அகப்புற நிகழ்வுகளில் எம் மாணவர்களையும் அனுமதித்தமை, எல்லாவற்றிற்கும் மேலாக எமது மாணவர்களையும், அப்பாடசாலை மாணவர்களையும் சரிநிகர் சமனாக நடத்தியமை போன்ற உயரிய செயற்பாடுகளினால் இப் பாடசாலை மீதான எமது மதிப்பு பன்மடங்கு உயர்ந்துவிட்டது.

பாடசாலை என்பது ஒரு சமூக நிறுவனம் என்பது கல்வியியலாளர் கூற்று. அவ்வகையில் சமூகத் தேவைகளை நோக்கி இப் பாடசாலையின் செயற்பாடுகள் அமைந்துள்ளமை என்னால் கண்டு உணரப்பட்ட விடயமாகும். இப் பாடசாலையின் இவ்வகையான சிறப்பிற்கு நல்ல உயரிய உள்ளம் படைத்த இப்பாடசாலையின் அதிபர் அவருக்கும், பக்கபலமாக நிற்கும் பிரதி அதிபர், சிறப்பாகப் பணியாற்றவெனத் தம்மை அர்ப்பணித்த ஆசிரியர்குழாம், இவர்களுக்குத் துணைநிற்கும் பெற்றோர் மற்றும் நலன் விரும்பிகள், இவர்கள் யாவரினதும் நல்லெண்ணங்களை வெளிப்படுத்தும் வகையில் இந்த "நமசிவாய நாதம்" வெளிவருவது பாராட்டத்தக்கது.


இப் பாடசாலை தனக்கேயுரிய தனித்துவமான இலக்குகளுடன் மென்மேலும் வளர்ச்சிப் பாதையில் முன்னேற இம் மலர் ஒரு ஊக்குவிப்பாக அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**A.ராஜேந்திரன்**
**தீவக வலயக் கல்விப் பணிப்பாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



**யாழ்.** நகரின் மையப் பகுதியில் இயங்கிவரும் கொட்டடி நமசிவாய வித்தியாசாலை தனக்கென ஒரு சஞ்சிகையை வெளியிட்டுவைப்பது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. 'நமசிவாய நாதம்' என்ற பெயருடன் உயரிய உள்ளடக்கமும், உருவப் பொலிவும் கொண்டதாக இச்சஞ்சிகை வெளிவருவது பாராட்டத்தக்கது.

நான் பல்கலைக்கழக விரிவுரையாளர் என்ற நிலையிலிருந்து இந்த வாழ்த்துரையை வழங்குவதை விட இக்கல்லூரியின் பழைய மாணவன் என்ற உரிமையுணர்வுடன் வழங்குவதிலேயே மனநிறைவு அடைகின்றேன்.

1959ம் ஆண்டளவில் ஆறாம் தரத்தில் மாணவனாக இப்பாடசாலையில் சேர்ந்த போது திரு. படைவீரசிங்கம் என்ற பேராளன் தலைமைவாத்தியாராக இருந்தார். ஆஜானுபாகுவான தோற்றம், பாலினும் வெள்ளிய தேசிய உடை, நிமிர்ந்த பார்வை, கடமையும் கண்ணியமும் கொண்ட நடத்தை. இவைதான் திருவாளர் படைவீரசிங்கம். அவரிடம் பலதடவை பிரார்த்தனையின்போது தண்டனை பெற்றதுமுண்டு. அவரை நினைத்தால் இப்போது கூட பயஉணர்வு உடலெல்லாம் பரவுகிறது.

இத்தகைய சிறிய பாடசாலைகள் எத்தனை அளவுக்கு சாதனை செய்யக் கூடியன என்பதை எண்ணி பல சமயங்களில் பிரமித்துள்ளேன். இத்தகைய பாடசாலைகளின் தொடர்பு. பள்ளிப்படிப்பு என்பனவெல்லாம் இத்துணை பெரிய வாழ்வியல் முன்னேற்றங்களைத் தரக்கூடிய வலிமை பெற்றவை என்று எனக்கு அந்த பதினொராவது வயதில் தெரிந்திருக்கவில்லை. எனக்கு அன்போடு பாடம் புகட்டிய ஆசிரியர்களை எண்ணி மகிழ்கிறேன் நாட்டின் பிரச்சினைகளில் இவர்களில் பெரும்பாலானோர் கொழும்பிலோ வெளிநாட்டிலோ தங்கிவிட்டனர்.

எனக்கு அடித்து அடித்து தமிழ் போதித்த பழனிச்சாமி மாஸ்டர், பேசிப் பேசி ஆங்கிலம் படிப்பித்த ஐயர் மாஸ்டர் அழகும் அடக்கமும் அன்பும் கொண்ட சரஸ்வதி ரீச்சர் (புகழ் பூத்த STR அவர்களின் பாரியார்) கடுமையும் கட்டுப்பாடும் கொண்டு சமயம் படிப்பித்த சிற்றம்பலம் சேர், புவியியலும் ஓவியமும் படிப்பித்த தியாகராசா மாஸ்ரர் இவர்கள் எல்லோரும் என்னை உயர்த்திய உத்தம ஆசான்கள். இவர்கள் ஒன்று சேர மீண்டும் சந்திக்க மனம் விரும்புகிறது. ஆனால் இது சாத்தியமா?


மாணவர் மீது உண்மையான இரக்கமும் பாசமும் அக்கறையும் கொண்டவர்கள் கடமையை கண்ணாக மதிப்பவர்கள், நாங்கள் நன்றாக வளரவேண்டும் என்று சொல்லிச் சொல்லிக் கற்பித்த கடமை வீரர்கள். எங்கள் குடும்பங்களில் பெறமுடியாத பலவற்றை இவர்களிடமிருந்து மாத்திரமே பெற்றேன். வாழ்வு பற்றிய ஒரு பிடிப்பு, தெளிவான கண்ணோட்டம் ஏற்பட வழிகாட்டினர், இலட்சியத் துளிர் அரும்புவதற்கு அறிவு நீர் ஊற்றியவர்கள் இவர்கள்தான். இவர்களை எனக்கு அறிமுகப்படுத்தியதாலேயே இப்பாடசாலையின் பால் எனக்கு ஒரு ஆத்மார்த்த விரும்பமும் பற்றும் வளர்ந்திருந்தது.

இப்பாடசாலையில் அப்போது எட்டாம் வகுப்பு வரை மாத்திரமே கற்க முடியும். நகர்ப்புற வறியவர்களுக்கான பாடசாலையாகவும் வசதி மிக்க வாழ்வு என்ற வெளிச்சத்துள் வரமுடியாத சிறார்களுக்கானதாகவே இப்பாடசாலை அப்போது விளங்கிற்று.

அப்போது தோட்டவேலை என்ற பாடம் செயல்முறையாக போதிக்கப்பட்டது. பலர் சேர்ந்து துலாவில் நீர் இறைப்போம், செம்மண்ணில் அளைவோம், பயிர்களில் ஏற்படும் மாற்றம் கண்டு குதூகளிப்போம், சிறுபிள்ளைகளின் இந்த வேளாண்மை வீடு வந்து சேர்வதேயில்லை இவையெல்லாம் பள்ளி வாழ்வில் பரவசம் ஏற்படுத்திய அனுபவங்கள், பட்டறிவு. இதுவும் கல்விதானே!

பிரார்த்தனை மண்டபத்தில் கேட்ட நற்சிந்தனைகளில் சில முள்ளாகத் தைத்தன, சில ரோஜா மலர்களாக இதமளித்தன. வாழ்வில் சில பிடிமானங்கள், இலட்சியங்கள் ஏற்பட இந்த சின்னஞ்சிறு சிந்தனைகள் உதவியதை இத்தனை வருடங்களுக்குப் பின்பு இப்போது உணர முடிகின்றது.என்னைப் போல் எத்தனை எத்தனை சிறுவர் சிறுமியரைக் கரைசேர்த்துள்ளது இந்த நமசிவாய வித்தியாசாலை என்ற ஞான ஓடம். இப்பாடசாலை எனது வாழ்வில் தந்த ஞான ஒளி வாழ்வில் உயரவும் சிறந்த பணிபுரியவும் வழிகாட்டும் பேரொளியாக விளங்கியது.

இத்தகைய பெருமையும் வரலாறும் கொண்ட இப்பாடசாலை மேலும் பலநூறு ஆண்டுகளுக்கு நிலைத்து நிற்க வேண்டும், செழித்து வளர வேண்டும். இத்தகைய வளர்ச்சியை வெளியுலகுக்கு தெரியப்படுத்தும் ஒளிப்புள்ளியாக 'நமசிவாய நாதம்' விளங்க வேண்டும் என வாழ்த்தி மகிழ்கிறேன்.



**மா. சின்னத்தம்பி**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியல்துறை,
யாழ்ப்பாண பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



1928ம் ஆண்டு தொடக்கப்பட்ட இப்பாடசாலையின் முதலாவது நூலாக "நமசிவாய நாதம்" என்ற இந்நூல் வெளிவருகிறது. மாணவர்களின் பல்வேறு வகையான பல ஆக்கங்களைத் தாங்கிவரும் இந்நூல் மாணவர்களின் எழுத்தாற்றலுக்குப் பெரும் உதவி செய்திருக்கிறது. தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையிலும், காகிதாதிகளின் விலையேற்றத்தாலும் பல சஞ்சிகைகள் முடங்கியுள்ள நிலையில் துணிவுடனும் பொலிவுடனும் நமசிவாய நாதம் வெளிவருவது போற்றுதற்குரிய விடயமாகும். பல்வகைச் சிறப்புடன் வெளிவரும் இந்நூல் எதிர்காலத்தில் வருடந்தோறும் வெளிவந்து மாணவர்களின் எழுத்தாற்றலை வளர்க்க வேண்டும்.

நமசிவாய வித்தியாலயத்தின் அதிபராகத் திரு. சுப்பிரமணியம் நடராஜலிங்கம் 2001 ஆம் ஆண்டு முதல் மிகவும் சிறப்பாக கடமைபுரிந்து வருகிறார். இவரது காலத்தில் இப்பாடசாலை என்றுமில்லாதவாறு வளர்ச்சி கண்டது பிள்ளை நேயப் பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்ட இப்பாடசாலை யாழ்ப்பாண வலயத்தில் உள்ள மிகச் சிறந்த பாடசாலைகளில் ஒன்றாகத் திகழ்ந்தமையால் யப்பான் நாட்டின் ஜெய்க்காத் திட்டத்தின் கீழ்த் தெரிவானது. இத்திட்டத்திற்குத் தெரிவாவதானால் சகல துறைகளிலும் முதன்மை நிலை வகித்தல் வேண்டும். யாழ்ப்பாண வலயத்துள் தெரிவான பத்துப் பாடசாலைகளில் இதுவும் ஒன்று என்பதால் இப்பாடசாலை சகல கல்வி நடவடிக்கைகளிலும் முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தமையை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

இப்பாடசாலையை முதன்மை நிலைக்கு இட்டுச் சென்ற பெருமை திரு. சு. நடராஜலிங்கத்தையே சாரும். அவர் இதற்கு முன்பு கடமைபுரிந்த பாடசாலைகளினதும் கல்வித் தரத்தை உயர்த்த அயராது அரும்பணியாற்றியவர். "நமசிவாய நாதம்" மூலம் இவரது பணியின் உயர்வு புலனாகிறது.

நன்றி


**கே.வி. குணசேகரம்**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்**
**யாழ்ப்பாணம் - நல்லூர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணக் கல்விக்கோட்ட அதிபர்கள் சங்கத் தலைவரின்

# வாழ்த்துச் செய்தி



யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலய அதிபர் உயர்திரு சு. நடராஜலிங்கம் அவர்களின் மணிவிழாவையொட்டி வெளியிடப்படுகின்ற "நமசிவாய நாதம்" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். தளராத மன உறுதியுடனும் அர்ப்பணிப்புடன் கூடிய சேவை மனப்பாங்குடன் அரும் பணியாற்றி பாடசாலையின் நற்பெயரை உலக அரங்கிலே வெளிக்கொணர்ந்து. கல்வித் துறையிலும் இணைப்பாடவிதானசெயற்பாடுகளிலும் சிறந்த முத்திரையொன்றைப் பதித்து, தொடர்ந்தும் பாடசாலை வளர்ச்சிப் பாதையில் முன்னேற்றமடைவதற்கான அடித்தளத்தையிட்டு, வளர்ச்சிப்பாதையை அகலத்திறந்து வைத்துச் செல்கின்ற பெருமை அன்னாரையே சாரும், இப் பாடசாலையில் பல அதிபர்கள் முன்னைய காலங்களிலே பணியாற்றியிருந்த போதிலும் இவருடைய சேவைக்காலத்திலேயே பாடசாலை பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. பௌதீக வளத்தாலும், கவின் நிலையிலும் ஏனைய வளங்களாலும் சிறப்புற்றுக் காணப்படுகின்றது என்றால் மிகையல்ல,

மனிதநேயம், புரிந்துணர்வு, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, சகிப்புத்தன்மை, அன்பாகப் பேசி மகிழ்விக்கும் சுபாவம், சிரித்த முகத்துடன் வரவேற்று உபசரிக்கும் திறன் போன்றவை அன்னாரின் சிறந்த குணங்களாகும். எமது பாடசாலையான யா/ வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவனான திரு. சு.நடராஜலிங்கம் அவர்களை எனது சிறந்த நண்பன் என்று கூறுவதில் உவகை அடைகிறேன். அவருடன் கூடிப்பழகிய நாட்கள் குறைவாக இருந்தாலும் நீண்டகாலம் பழகிய அனுபவம் பெற்றுள்ளேன். படபடப்பின்றி, ஆரவாரமின்றி, அமைதியாக, சரியான முடிவுகளை எடுக்கும் திறன் அவரிடம், நான் கண்ட விசேட அம்சமாகும். எமது கல்விக்கோட்டத்திலுள்ள 23 அதிபர்களிலும் இவர் வித்தியாசமானவர். பெரியவர், சிறியவர், இவர், அவர், என்று ஏற்ற இறக்கமில்லாமல் சகலரையும் ஒரே மாதிரியாக மதித்து பழகும் சுபாவம், கலகலப்பாகப் பேசி மகிழ்விக்கும் திறன் என்பன இவருக்கே உரித்தானவை என்று கூறுவதில் அதிபர் சங்கத் தலைவன் என்ற ரீதியில் மகிழ்வடைகின்றேன்.

இவர் 36 ஆண்டுகள் ஆசிரிய சேவையில் 17 ஆண்டுகள் அதிபர் சேவை புரிந்துள்ளார். இவர் ஆற்றிய பணிக்கு நன்றி கூறுவதுடன் இவர் ஓய்வு காலத்தின் பின்னரும் கல்விப் பணியும் சமுகப்பணியும் ஆற்றக்கூடிய உடல் ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் அன்னாருக்கு வழங்க எல்லாம் வல்ல வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானை வணங்குவதோடு இவரது குடும்பமும் சீரும் சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு வாழ வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**திரு.நா.வன்னியசிங்கம்**

அதிபர்

யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தினால் இன்று வெளியிடப்படும் "நமசிவாய நாதம்" எனும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

எனது கல்வி வாழ்க்கையை எழுத்தறிவித்து, நல்லறிவு புகட்டி, நல்லொழுக்கம் போதித்த ஆசான்கள் யாவரினதும் நினைவிற்கு தலைவணங்குகிறேன்.

1928 ஆம் ஆண்டில் நமசிவாயச் செட்டியார் அவர்களால் சைவச்சிறார்களின் கல்வி மேம்பாட்டிற்காக இப் பாடசாலை தாபிக்கப்பட்டது. 75 வருடங்களுக்கு மேலாக கொட்டடி மக்களின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்து, இன்று போதிய வளங்களைப் பெற்று மிளிர்கின்ற இப் பாடசாலை அன்று தொட்டு இன்றுவரை பல பிரமுகர்களை, கல்விமான்களை, ஒழுக்கசீலர்களை உருவாக்கியுள்ளது.

இப் பாடசாலையின் பழைய மாணவனும் முன்னாள் ஆசிரியரும், உப அதிபருமாக கடமையாற்றிய எனக்குக் கடந்த காலத்தை நினைவு கூர்வதுடன் எனது பாடசாலையை வாழ்த்தும் சந்தர்ப்பம் கிட்டியமை பெரும் பேறென்றே நான் கருதுகின்றேன்.

1988 / 89 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நடைபெற்ற வன் செயல்களினால் விமானக்குண்டு வீச்சின் போது முற்றாகவே அழிக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்ட இப்பாடசாலை தற்காலிமாக வேற்று வீடுகளிலும், பாடசாலை முற்றங்களிலும் நடைபெற்று வந்த போதும் நல்லிதயங் கொண்ட வெளிநாட்டு அமைப்புக்கள் மூலம் சிறந்த முறையில் கட்டடங்கள், தளபாடங்களைப் பெற்று மீண்டும் எழுந்தது.

இன்று வளமான நூலகம், புதுப்பிக்கப்பட்ட மண்டபம் மேலும் அழகுபடுத்தப்பட்ட பாடசாலைச் சூழல் என்பவற்றிக்கு காரணமான இன்றைய அதிபர் திரு.சு.நடராஜலிங்கம் அவர்கள் பாராட்டுக்குரியவர்கள். அதே நேரம் பாடசாலை அழிவுற்ற நிலையில் தமது விடாமுயற்சியினாலும் அயரா உழைப்பினாலும் மாடிக்கட்டத்தை உருவாக்கிய அன்றைய அதிபர் திரு.அ.காசிநாதன் , உபஅதிபர் திரு.ஆ.பொ.குலசிங்கம் ஆகியோரை இந்நன்நாளில் நினைவு கூருகின்றேன்.

எண்பதுகளின் பிற்பகுதியிலும், தொண்ணூறுகளின் முற்பகுதியிலும் முதன்முதலில் மத்திய கல்லூரி மைதானத்தில் தொடங்கப்பட்ட இப்பாடசாலை விளையாட்டுப் போட்டி ஏனைய பாடவிதான, இணைபாடவிதான செயற்பாடுகளில் இணைந்து தோளோடு தோள் நின்று நகரப் பாடசாலைகளுக்கிணையாக கொட்டடி நமசிவாய வித்தியாலய வெற்றிகளிற்கு அயராது உழைத்த ஆசிரியர் ஆசிரியைகள் இன்றும் மனதே நீங்கா இடம் பெற்றுள்ளனர்.

தொடர்ந்தும் இப் பாடசாலை வீறுநடை போட்டு சகல துறைகளிலும் மேம்பட்டு வருகின்றது. பௌதிக வளங்களில் மேலும் நிறைவெய்தவும் கல்விப்பணி தழைத்தோங்கவும் மாணவச் செல்வங்கள் தமது பாடசாலைப் பெயரினை நிலைநாட்டத்தக்கதாக சாதனைகள் புரியவும், எல்லாம் வல்ல எம்பெருமான் பாதகக்கமலங்களை இறைஞ்சி வாழ்த்தி வணங்குகின்றேன்.

**திரு.ந.சிவராஜா**
**முன்னாள் பிரதி அதிபர்**
**(1991 - 1999)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



**1928** ம் ஆண்டு நமசிவாயச் செட்டியார் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட வித்தியாலயம். இன்று பன்முகப்பட்ட வளர்ச்சியுடன் நகரில் கம்பீரமாக காட்சி அளிப்பதை இட்டு, மனமகிழ்ச்சி அடைகின்றேன். இவ் வித்தியாலயத்தில் கற்றவர்கள், கற்பித்தவர்கள் உலகமெங்கும் பரந்து சீரும் சிறப்புடனும் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். சிறந்த அதிபர்களையும், ஆசிரியர்களையும் இவ் வித்தியாலயம் கண்டிருக்கின்றது. தற்பொழுது பதவி ஏற்றிருக்கின்ற அதிபர் திரு.சு. நடராஜலிங்கம் அவர்களின் ஆற்றலினால் வித்தியாலயம் பல மாற்றங்களோடு வளர்ச்சி கண்டிருக்கின்றது. இதைவிட அவர் ஓய்வு பெறும் காலத்தில் வித்தியாலயத்தில் "நமசிவாய நாதம்" என்ற மலர் வெளியிடப்படுவதையிட்டு பேருவகையடைகின்றேன். வித்தியாலயத்தின் பெயர் கொட்டடி நமசிவாய வித்தியாலயம். அதிபருடைய பெயர் நடராஜலிங்கம் மலரினுடைய பெயர் நமசிவாய நாதம்.

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரோ" என்பது சிவ தத்துவம் நடராஜா் ஆடிக்கொண்டிருப்பதனால் உலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதேபோல் நமசிவாயன் நாதம் தாங்கிய கொட்டடி நமசிவாய வித்தியாலயத்திலும், அதிபர் நடராஜலிங்கம் அவர்களின் இயக்கத்தினால் தான் வித்தியாலயம் என்றுமில்லாதவாறு, கல்வியாலும், கலையாலும், சீரிய பல வளங்களுடன் மேன் நிலையால் உயர்ந்து சென்று கொண்டிருக்கின்றது. இதைவிட நமசிவாய என்பது பஞ்சாட்சரம் இறைவனுடைய திருநாமம். அத்திருநாம வடிவிலே தான் நடராஜரின் பஞ்சகிருத்திய குரு நடனம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதனை அறிந்தவர் அறிவர்.

எனவே வெளிவரவுள்ள நமசிவாய நாதம் எங்கும் ஒலிபரப்ப வேண்டும். அதனால் அனைவரும் சிறப்புப் பெற வேண்டும். நாதத்தின் ஓசை கல்வியின் வெற்றியை யுக்தியாக்கும் நமசிவாய நாதத்தை உச்சரித்து எழுதும் ஆர்வலர்கள், மாணவர்கள், எல்லோரின் மொழியும் நிலமும் நிமிர்வுபெற தொடர் எழுத்துக்களால் தோகை விரித்து ஆடுதல் வேண்டும். யுக கவிஞனின் நாத ஓசை யுக வரிகளால் வித்தியாலயத்தின் புகழை உலகப் பந்தில் பொறிக்க இம் மலரில் எழுதியுள்ள அத்தனை நெஞ்சங்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள். ஒவ்வொருவரினது படைப்புக்களும் நாதத்தை மெருகூட்டி இருக்கின்றன. கல்வியாளர்களின் வாழ்த்துக்கள் நாதத்திற்கு பலம் சேர்த்துள்ளன. கவின் பெறு கலைகள் களிநடம்புரியும் யாழ்ப்பாண மண்ணிலே தொன்று தொட்டு இன்றுவரை மங்காத புகழுடனே, மாண்புடனே மிளிருவது யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலயம். இவ் வித்தியாலயத்திற்கு பெருமை சேர்ப்பதற்கு, "நமசிவாய நாதம்" வெளிவருகின்றது. வெளிவரும் மலரை மனதார வாழ்த்துகிறேன்.

**சி.துரைராசா**
முன்னாள் ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமகிழ்ந்து வாழ்த்துகிறேன்



சைவப் பாரம்பரியத்துடன் நமசிவாயச் செட்டியாரால் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை எண்பது ஆண்டுகளை அண்மித்து நிற்பதை எண்ணிப் பெரு மகிழ்வடைகிறேன்.

இப் பாடசாலையின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய சான்றோர் பலர். அதே போன்று இப் பாடசாலையின் வளர்ச்சியில் பங்குகொண்டு உழைத்த அதிபர்களும், ஆசிரியர்களும், சம காலத்தில் இவர்களுடன் இணைந்து பங்காற்றி வருபவர்களும் பாராட்டத்தக்கவர்கள்.

"நமசிவாய நாதம்" எனும் தனது முதலாவது மலரை வெளியிடும் இவ் வேளையில் இப் பாடாசலையின் இம் முயற்சியானது பாராட்டிற்குரியது. இம் முயற்சிக்கு வித்திட்ட அதிபர் சு.நடராஜலிங்கம் அவர்களின் பணி பாராட்டிற்குரியது. மேலும் இம் மலர் விழாக் குழுவின் தலைமைப் பொறுப்பேற்ற பிரதி அதிபர், மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் இம் மலர் சிறப்புற அமைய பங்களிப்புச் செய்த பெற்றோர், நலன் விரும்பிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவிப்பதுடன், இம் மலர் சிறப்புற மன மகிழ்வுடன் வாழ்த்துகிறேன்.

**திருமதி.சந்திரமலர் - பரமநாயகம்**
பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்
யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழுத் தலைவரின் வாழ்த்து



எமது ஈழவள நாட்டின் வரலாற்றுப் புகழ் மிகும் யாழ்.கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தின் "நமசிவாய நாதம்" என்னும் 1ம் மலரை வெளியிடும் மலர் குழுவின் தலைவர் என்ற முறையில் இம் மலர் சிறப்புற எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

இவ் வித்தியாலயமானது தனக்கு என ஒரு பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. இது ஆங்கிலேயர் காலத்தில் மதமாற்றம் ஆங்கில ஏகாதிபத்தியம் போன்றவற்றால் எமது மதமும் மொழியும் சிதைவடையத் தொடங்கிய காலத்தில் நமசிவாயச் செட்டியார் அவர்களால் இப்பாடசாலை 1928ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை சைவசமயத்துக்கும் மொழிக்கும் அரும் சேவையாற்றி வருகின்றது. மேலும் இப் பணியை தொடர்ந்து ஆற்றுவதற்கு இம் மலர் வெளியிடும் சந்தர்ப்பத்தில் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

இவ் வித்தியாலயமானது பல புகழ் பூத்த அதிபர்களின் செயற்பாடுகளால் வளர்ச்சி உற்று இன்று ஒரு பெயர் பெற்ற வித்தியாலயமாக திகழ்கின்றது. மேலும் பல செயற்பாடுகள் செய்து. சிறந்த ஒரு சமுதாயத்தை உருவாக்கும் பாடசாலையாக திகழ வேண்டும் என்று எல்லாம் வல்ல நல்லூர்க்கந்தனை வேண்டி மலர் சிறப்படைய வாழ்த்துகின்றேன்.

தி.சோமசேகரம் (SLPS 2 -I)
மலர் குழு தலைவரும்,
பிரதி அதிபரும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் அகத்தில்...



யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தின் சேவையில், (2001.06.01ல்) அக் காலத்தில் கல்விப் பணிப்பாளராகவும், மிக அண்மைக் காலத்தில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் அகவையில் ஓய்வு பெற்ற திருமதி. செ.மகாலிங்கம் அம்மா அவர்களின் ஆலோசனையின் பேரில் 2001.06.01 இல் அதிபராக நியமிக்கப்பட்டேன். அவ்வேளையில் பாடசாலையின் கல்வி வளர்ச்சியில், அதன் பௌதிக வளங்களின் பற்றாக்குறை, வள ஆளணிகள் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை. காணப்பட்டது. எனக்கு முன்பிருந்த அதிபர்கள் இப்பாடசாலையின் அபிவிருத்திக்கு முயற்சி செய்த போதும் பின்வரும் ஒதுக்களால் அவை கைகூடவில்லை இப்பாடசாலையின் அமைவிடம் அங்கு வாழ்கின்ற மக்களின் வாழ்வாதார நிலை நாட்டின் அசாதாரண சூழ்நிலை, என்பன பாடசாலையின் வளர்ச்சிக்குச் சாதகமான தன்மையைக் கொண்டிருக்கவில்லை. இதனால் மக்களின் மனநிலை இறுக்கமாகக் காணப்பட்டது. கொட்டடிக் கிராமம் யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் உள்ள மிகவும் பின்தங்கிய கிராமம் ஆகும்.

இங்கு வாழ்கின்ற மக்கள், மீன்பிடித்தொழில், கூலித்தொழில், வியாபாரம் போன்ற தொழில்களில் ஈடுபடுவதால் வருமானத்தின் அளவு வாழ்க்கைக்குச் சுமையாக அமைகின்றது. வருமானம் ஈட்டுவதற்காக கணவன், மனைவி இருவரும் கூலி வேலை செய்பவர்களாகவும் சிறுவர்களும் குடும்பக் கஷ்டத்தைப் போக்க நடைபாதை வியாபாரிகளாகவும், கூலித்தொழில் செய்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இப் பிரதேச மக்கள் ஆரம்பத்தில் பயவுணர்வு உள்ளதால் அரச உத்தியோகஸ்தர்கள் தங்களது கடமைகளை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டவில்லை. இதனைச் சீர் செய்து பாடசாலையையும். அதன் உட்கட்டமைப்பையும் மாற்றி அமைக்க வேண்டிய பொறுப்பு என் மீது சுமத்தப்பட்டது.

"கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்ற முதுமொழிக்கு இணங்க கல்வியின் தேவை முன்வைக்கப்பட வேண்டியதாயிற்று. பாடசாலையின் நிதி பூச்சிய நிலையில் இருந்தது. "வெறுங்கை முழம் போடாது" என்பார்கள் நாம் முழம் போடவேண்டியவர்களாக்கப்பட்டோம்.

ஆசிரியர்களின் தேவைகள் நிவர்த்தி செய்யப்பட்டு தன்நம்பிக்கையும், கூட்டுப் பொறுப்பும் கடமையைச் செய்யும் பொறுப்பும் உள்ளவராக மாற்றியமைக்கப்பட்டனர். ஆசிரியர்களும், மாணவர்களும் குடும்ப அங்கத்தவர்கள் போல இணைந்து செயற்பட்டு வருகின்றோம்.

இப் பிரதேசத்தில் வாழும் பிள்ளைகளின் பெற்றோர்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்களாக உள்ளனர். இவர்களிடம் மனம் இருக்கிறது. பொருளில்லை. இதனால் இவர்களது நிதியுதவி மிகக் குறைந்த அளவில் காணப்படுகிறது. இந் நிலையில் கல்விக்கு உதவி வழங்கும் நிறுவனங்களான UNICEF, [ JAJCA JAPAN நிறுவனம் ] Save the Children, GTZ கல்வித் திணைக்கள தலைவர் மற்றும் அதிகாரிகளின் உதவியால் பாடசாலையில் மீள் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் வளர்ச்சிக்குத் திருப்பு முனையாக அமைந்த விடயம் Unicef நிறுவனத்தின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட பிள்ளை நேயப்பாடசாலையின் ஆரம்ப நிகழ்வான அதிபர்களுக்கான செயலமர்வில் ஏற்பட்ட விழிப்புணர்வும், ஆசிரியர்களுக்கான செயலமர்வின் மூலம் ஏற்பட்ட மாற்றமும் எமது பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிலும், கவின் நிலைச் செயற்பாட்டிலும் வளர்ச்சியை ஏற்படுத்தியது.

இக்காலத்தில் ஜப்பானிய நிறுவனத்தின் JAICA திட்டத்தின் மூலம் 5S முறை அமுல்படுத்தப்பட்டது. இதனை ஐ விதி எண்ணக்கரு என அழைப்பர். செய்தி, செய்டோன், செய்சே, செயிற்கற்சூ, செய்கெட்சு, செயிற்சுகே முறை மூலம் கவரப்பட்டு இம்முறையில் எனக்கு நம்பிக்கை ஏற்பட்டது. இந் நிறுவனத்தின் ஆய்வின்படி யாழ்.மாவட்டத்தில் ஐந்தாவது இடத்தில் எனது பாடசாலை தெரிவு செய்யப்பட்டமை எனக்கு புதுப்பொலிவும் புத்தாக்கத்தையும் ஏற்படுத்தியது. இதன் வளர்ச்சியால் சர்வதேச நிறுவனங்களின் கண்களில் எனது பாடசாலை பார்வைக்குத் தென்பட்டது.

அண்மையில் தீவுப்பகுதியில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்த அல்லைப்பிட்டி, மண்கும்பான், பாடசாலை மாணவர்களின் கல்வியைத் தொடர எனது பாடசாலையில் இணைப்புச் செய்தபடியால் அதனை வரவேற்று மாணவர்க்குக் கல்வி வழங்குவதில் திருப்தி அடைந்தேன் இதற்கு உறுதுணையாக யுனிசெவ் அமைப்பு, சிறுவர் பாதுகாப்பு நிதியம் சகல உதவிகளும் செய்தன.

எமது பாடசாலையின் பிரதி அதிபராக இருந்த திருமதி.சிவகடாட்சம் அவர்களின் ஆலோசனையும், வழிகாட்டலுடனும் ஏனைய ஆசிரியர் குழாத்தின் ஒருமித்த கருத்தினால் ஒரு கலையரங்கு புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. இக் கலையரங்கின் திறப்பு விழா நிகழ்வதை ஒட்டி அகமகிழ்கின்றேன்.

எனது சேவையின் ஓய்வுறும் நிலையில் 'நமசிவாய நாதம்' எனும் மலரை வெளியிடுவது இப் பாடசாலையின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதொன்றாகும். இவ் ஆக்கத்திற்கு அரும்பாடுபட்டு உழைத்த பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள், ஆசியுரை வழங்கியோர், பெருநிதி வழங்கியோர், நூலை வெளியிட உதவிய அச்சக உரிமையாளர்கள், படப்பிடிப்பாளர்கள், பாடசாலை ஊழியர்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைப் பகிர்ந்து கொள்கிறேன்.

வளமான கல்வி வாழ்க்கைக்கு வழிகாட்டும்

**திரு.எஸ்.நடராஜலிங்கம்**
அதிபர்.

மாணவனாக இருக்கும்போது உனது பாடங்களை நன்றாகப்
படிக்கவேண்டும். இல்லறம் நடத்தும்போது
குடும்பப்பொறுப்புக்களையும், வேலைப்பொறுப்புக்களையும் ஏற்று
வேலை செய்ய வேண்டும். வேலையிலிருந்து ஓய்வு பெறும்போது
அந்த நிலைக்குத் தகுந்தவாறு கடமைகளைச் செய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை வளர்ச்சிக்கு ஏணிப்படிகளாக இருந்த அதிபர்கள்

* ஸ்தாபகர் – நமசிவாயச்செட்டியார் – 1928

01. திரு. வீரகத்திச்சட்டம்பியார்

02. திரு. கணபதிப்பிள்ளை

03. திரு. படைவீரசிங்கம் – – 31.05.1963

04. திரு. வீ. செல்லத்துரை – 01.06.1963 – 01.01.1971

05. திரு. த.ஆறுமுகம் – 02.01.1971 – 28.01.1981

06. திருமதி. அ. துரைசிங்கம் – 29.01.198 – 31.01.1986

07. திரு. அ.காசிநாதர் – 01.02.1986 – 09.01.1991

08. திரு. சு. சண்முகநாதன் – 10.01.1991 – 11.02.1998

09. திருமதி. செ.பத்மநாதன் – 12.02.1998 – 31.05.2001

10. திரு.சு.நடராஜலிங்கம் – 01.06.2001 –

பாவமும், புண்ணியமும் நாம் செய்யும்
செயல்களிலேயே உள்ளன. செய்யும்
செயல்கள் ஒவ்வொன்றையும்
தெய்வார்ப்பணமாகச் செய்து வந்தால் அவை
புனிதத் தன்மை பெற்றுவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அதிபர்




திரு. சு. நடராஜலிங்கம் (SLPS-2-I)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பிரதி அதிபர்**

திரு.தி.சோமசேகரம்

(SLPS-2-I)



**உப அதிபர்**

திருமதி.ப.சிவகடாட்சம்



தற்காலிகமாக இயங்கும்

யா/அல்லைப்பிட்டி பராசக்தி

வித்தியாலயம்

பாடசாலை அதிபர்

திரு.K.ஸ்ரீஸ்கந்தராஜா

(SLPS-2-I)



முகாமைத்துவக்

குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாடசாலை ஆசிரிய ஆளணியினர்

| | |
|---|---|
| 1. திரு. சுப்பிரமணியம் நடராஜலிங்கம் | SLPS அதிபர் தரம் (2-I) |
| 2. திரு. தியாகராஜா சோமசேகரம் | SLPS அதிபர் தரம் (2-I) |
| 3. திருமதி. பத்மமலர் சிவகடாட்சம் | விஞ்ஞானப் பயிற்சி |
| 4. திரு. கயிலாசம்பிள்ளை தேவேந்திரன் | கலைப்பட்டதாரி |
| 5. திரு. கந்தையா இரகுபதி | ஆரம்பப் பயிற்சி |
| 6. திரு. பஞ்சாட்சரம் இராமகிருஷ்ணன் | ஆங்கிலப் பயிற்சி |
| 7. திரு. செல்லன் நடேசகாந்தன் | கலைப்பட்டதாரி |
| 8. திரு. விசுவலிங்கம் உதயகுமாரன் | கலைப்பட்டதாரி |
| 9. திருமதி. சிவபுரத்தரசி கிரிதரன் | ஆரம்பப் பயிற்சி |
| 10. செல்வி. ஜெயந்தி ஐயாத்துரை | கலைப்பட்டதாரி |
| 11. திருமதி. வசந்தி சத்தியபாலன் | விஞ்ஞானப் பயிற்சி |
| 12. திருமதி. தேவகி கணேசானந்தன் | கணிதப் பயிற்சி |
| 13. செல்வி. சிவசக்தி சின்னத்துரை | கலைப்பட்டதாரி |
| 14. திருமதி. சசிகலா தங்கவேல் | மனையியல் பயிற்சி |
| 15. திருமதி. குணபாலதேவி சுகுமார் | ஆரம்பப் பயிற்சி |
| 16. திருமதி. சுஜந்தி ரவீந்திரநாதன் | விஞ்ஞானமானி |
| 17. திருமதி. நகுலேஸ்வரி துரைசிங்கம் | சமயப்பயிற்சி |
| 18. செல்வி. பேஜினா பிறிடா செல்வநாயகம் | கிறிஸ்தவப் பயிற்சி |
| 19. செல்வி. ரேவதி பரமநாதன் | ஆரம்பப் பயிற்சி |
| 20. திருமதி. உதயந்தி கனகராஜா | சங்கீத பட்டதாரி |
| 21. திருமதி. வதனா ரகுநாதன் | வணிகமானி |
| 22. திருமதி. ஜெயமலர் சிவலிங்கம் | ஆரம்பப் பயிற்சி |
| 23. திருமதி. சுதர்சினி யோகசுந்தம் | சங்கீதப் பயிற்சி |
| 24. திருமதி. சித்திராதேவி நல்லநாதன் | வணிகமானி |
| 25. திருமதி. கமலாம்பிகை தேவமகேஸ்வரன் | வணிகமானி |
| 26. திருமதி. அனற்றாபி ஆனந்தராஜா | தமிழ் பயிற்சி |
| 27. செல்வி. கம்ஷத்வனி பேரின்பநாயகம் | கலைப்பட்டதாரி |

### முகாமைத்துவ உதவியாளர்

திருமதி. மேகலா மனோகரன் — வணிகமானி

### காரியாலய உதவியாளர்

திருமதி. கிரிஷாவதி யோகராஜா

### தொண்டர் ஆசிரியர்

செல்வி. நிஷாந்தினி வரதராஜா

திரு. சின்னத்துரை றபேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாலய ஆளணியினர் - 2007



**இருப்பவர்கள் : இடமிருந்து வலம்**

1.திரு.ப.இராமகிருஷ்ணன் 2.திரு.செ.நடேசகாந்தன் 3.திருமதி.சி.கிரிதரன் 4. திருமதி.ந.துரைசிங்கம் 5. திரு.சு.நடராஜலிங்கம் (அதிபர்) 6. திரு.தி.சோமசேகரம் (பிரதி அதிபர்) 7. திருமதி. ப.சிவகடாட்சம் 8.திருமதி.மே. மனோகரன் 9. திரு.வி. உதயகுமார். 10. திரு.சி.ரபேந்திரன்.

**நிற்பவர்கள் : இடமிருந்து வலம் — 1ம் வரிசை**

1.திருமதி.தி.யோகராஜா 2. திருமதி.ஜெ.சிவலிங்கம் 3.திருமதி.க.தேவமகேஸ்வரன் 4.திருமதி.ச.தங்கவேல் 5. திருமதி.வ.சத்தியபாலன் 6.திருமதி.சு.யோகசுந்தரம் 7. திருமதி.தே.கணேசானந்தன் 8. திருமதி.உ.கனகராஜா 9. செல்வி.ஜெ.ஜயாத்துரை 10. திருமதி.அ.ஆனந்தராஜா

**நிற்பவர்கள் : இடமிருந்து வலம் — 2ம் வரிசை**

1.செல்வி.ரே.பரமநாதன் 2. திருமதி.வ.ரகுநாதன் 3. செல்வி.க.பேரின்பநாயகம் 4. செல்வி.நி.வரதராஜா 5. திருமதி.சு.ரவீந்திரநாதன் 6. திருமதி.ம.மோகனசுந்தரம் 7.திருமதி.கு.சுகுமார் 8.செல்வி.கி.செ.பேஜினாபிரீடா 9. சி.சிவசக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலயம்

## "நமசிவாய நாதம்" மலர் வெளியீட்டுக் குழு

| | | |
|---|---|---|
| திரு. ச. நடராஜலிங்கம் | – | அதிபர் |
| திரு. தி. சோமசேகரம் | – | பிரதி அதிபர் |
| திரு. வி. உதயகுமார் | | |
| திரு. ப. இராமகிருஷ்ணன் | | |
| திருமதி. சி. கிரிதரன் | | |
| செல்வி. ஐ. ஜெயந்தி | | |
| திருமதி. வ. சத்தியபாலன் | | |
| திருமதி. ந. துரைசிங்கம் | | |
| திருமதி. உ. கனகராஜா | | |
| செல்வி. செ. பேஜினா பிறீடா | | |

- வாழ்க்கை ஒரு சவால் அதனைச் சந்தியுங்கள்
- வாழ்க்கை ஒரு பரிசு அதனை ஏற்றுக்கொள்ளுங்கள்
- வாழ்க்கை ஒரு கடமை அதனை நிறைவேற்றுங்கள்
- வாழ்க்கை ஒரு விளையாட்டு அதனை விளையாடுங்கள்
- வாழ்க்கை ஒரு விநோதம் அதனைக் கண்டறியுங்கள்
- வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் அதனைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்
- வாழ்க்கை ஒரு பயணம் அதனைப் புகழுடன் முடித்து விடுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க் குழு



**இருப்பவர்கள் — இடமிருந்து வலம்**

1. திருமதி.ந.துரைசிங்கம் 2. திரு.தி.சோமசேகரம் 3. திரு.சு.நடராஜலிங்கம் (அதிபர்) 4. திருமதி.சி.கிரிதரன் 5. திருமதி.அ.ஆனந்தராஜா

**நிற்பவர்கள் — இடமிருந்து வலம்**

1. திரு.வி.உதயகுமார் 2.திருமதி.வ.சத்தியபாலன் 3. செல்வி.பேஜினாபிரீடா 4. செல்வி ஜெ.ஜயாத்துரை 5.திருமதி. உ.கனகராஜா 6. திருமதி.ப.சிவகடாட்சம் 7. திரு.ப.இராமகிருஷ்ணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்



| | | பக்கம் |
|---|---|---|
| ★ | பாடசாலைக்கீதம் | |
| ★ | பாடசாலை அமைவிடம் | |
| ★ | நூல் அறிமுகம் | |
| ★ | ஆசியுரைகள் | |
| ★ | அதிபர் அகத்தில் | |
| ★ | அதிபர்கள் விபரம் | |
| ★ | ஆசிரிய ஆளணி | |
| ★ | மலர்க்குழு | |
| ★ | பாடசாலையின் தோற்றமும் வளர்ச்சியும் | 1 - 3 |
| ★ | பாடசாலையில் JAICA கொள்கைகளும் ஏற்படுத்திய மாற்றமும் | 4 - 5 |
| ★ | நீங்கா நினைவுகள் | 6 |
| ★ | எனது பார்வையில் அதிபர் | 7 |
| ★ | இலட்சிய மூச்சுடன் கொட்டடியில் இணைந்த ஆசான் | 8 |
| ★ | சைவ சமய வாழ்வில் பெண்களின் பணி | 9 - 10 |
| ★ | பள்ளி மாணவர்களின் உள, சமூக நலனை மேம்படுத்தல் | 11 - 12 |
| ★ | தொகை நிலை, தொகா நிலைத் தொடர்கள் | 13 - 14 |
| ★ | நோய்தீர்க்கும் மூலிகைகள் | 15 - 17 |
| ★ | நோய் தீர்க்கும் தாவரங்களின் தாவரவியல் பெயர்கள் | 18 |
| ★ | கணக்கியல் எண்ணக்கருக்கள் | 19 - 20 |
| ★ | இசைக்கருவி உருவாக்கமும் அதன் பயன்பாடும் | 21 |
| ★ | School Curriculum Context in Teaching English as a Second Language | 22 - 25 |
| ★ | சிறுகதை - புகையிலை மட்டுமா எரிந்தது | 26 - 28 |
| ★ | மாணவர் ஆக்கங்கள் | 29 - 42 |
| ★ | STRUCTURE OF THE NATINAL INTITUTE OF EDUCATION | 43 |
| ★ | நன்றி நவிலல் | 44 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் தோற்றமும் வளர்ச்சியும்



இலங்கையின் மணிமுடியாம் யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் அயல்நிலை கிராமமாக அமைந்துள்ளது கொட்டடியாகும். இக் கிராமத்திற்கு கொட்டடி எனும் பெயர் வரக் காரணமாக அமைந்தது. அதன் அமைவிடமாகும். எழுத்து மூலச் சான்றுகள் இன்றி இப்பிரதேச மக்களின் செவிவழிக் கதைகள் மூலம் அறியப்படுவதாவது,

கோட்டையடிப் பிரதேசத்தில் அமைந்தபடியால் 'கோட்டையடி' எனும் சொல் காலப்பகுதியில் மருவி கொட்டடி என வந்தது எனவும், பண்டைக் காலத்தில் பண்ணைக் கடலை அண்டிய இப்பிரதேச மக்கள் தோணிகள், மரக்கலம் மூலம் பொருட்களை ஏற்றி இறக்கினார்கள் எனவும் அவ்வேலைகளில் பெண் தொழிலாளர்களை ஈடுபடுத்தி கல், மண் போன்ற பொருட்களை ''கொட்டடி கொட்டடி'', எனக் கூறியதால் இப் பெயர் அமைந்தது எனச் சிலரும் ஊகிக்கிறார்கள்.

இக் கிராமத்தை அக்காலத்தில் C.S. கந்தையாச் செட்டியார் என்பவரே (C.S.K) நிர்வகித்து வந்தார். அவருக்கு நமச்சிவாயச் செட்டியார் எனும் மகன் ஒருவர் இருந்தார். அவர் இங்குள்ள மக்களுக்கு பெருமளவு தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்து மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். இதனால் இப்பிரதேச நிலச்சுவான்தர் ஆகவும், வளமும், புகழும் மிக்கவராகவும் விளங்கினார்.

1928ற்கு முன் வெறும் பனைஓலையால் வேயப்பட்டு கிறிஸ்தவ மிஷனரியால் நிர்வகிக்கப்பட்டு வந்த இப்பாடசாலை அக்காலப்பகுதியில் இப்பிரதேசத்தில் ஏற்பட்ட மதப்பூசல் காரணமாக எரிக்கப்பட்டது.

இதனால் இப்பிரதேச சிறார்கள் கல்வியை மேம்படுத்தும் முகமாக 1928 இல் நமசிவாய செட்டியாரால் ''நமசிவாய வித்தியாலயம்'' ஸ்தாபிக்கப்பட்டது. இக் காலப்பகுதி தொடக்கம் 1961இல் அரசாங்கம் இப் பாடசாலையைப் பொறுப்பேற்கும் வரை சகல பரிபாலனமும் நமசிவாயச் செட்டியாராலேயே மேற்கொள்ளப்பட்டது. இப்பாடசாலையின் முதல் அதிபராக திரு.வீரகத்திச்சட்டம்பியார் விளங்கினார். அவரைத் தொடர்ந்து திரு.கணபதிப்பிள்ளை அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார். இவர்களைத் தொடர்ந்து திரு.படைவீரசிங்கம் என்பவர் தலைமை ஆசிரியராக இருந்தார்.

1961இல் அரசாங்கம் பாடசாலையைப் பொறுப்பேற்றபோது தேக்க மரப்பலகையால் அடைக்கப்பட்ட ஒரு பெரிய மண்டபத்திலேயே வகுப்புக்கள் நடைபெற்றன. இக் காலப்பகுதிகளில் அயலில் உள்ள சகல மாணவர்களும் தமது ஆரம்பக் கல்வியை இப்பாடசாலையிலேயே பயின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. 1961 வரை பாடசாலை அதிபர் 'தலைமை ஆசிரியர்' எனவும் ஆசிரியர் - 'பெரிய வாத்தியார்' எனவும், ஆசிரியைகள் பாசமாக 'அக்கா' எனவும் அழைக்கப்பட்டனர். தொடர்ந்த காலப்பகுதிகளில் அதிபர்களாக இருந்த திரு.வி. செல்லத்துரை, திரு.த.ஆறுமுகம், திருமதி. அ.துரைசிங்கம் என்போர், பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும் பணியாற்றியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1988/89 ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில் நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் காரணமாக விமானக் குண்டு வீச்சால் இப்பாடசாலையின் கட்டடம் பலத்த சேதமாக்கப்பட்டது. எனினும் தெய்வீகச் செயலாக, சுவாமி அறைப் படங்களுக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து இப் பாடசாலை தற்காலிகமாக வேறு பாடசாலைகளில் இயங்கி வந்த சந்தர்ப்பத்தில் அப்போதிருந்த அதிபர். திரு.அ.காசிநாதர், மற்றும் ஆசிரியர்களின் பணப்பங்களிப்புடன் தற்போது இருக்கும் ஆரம்பக் கல்விக் கட்டடம் திருத்தியமைக்கப் பட்டது. அவ்வேளை ஆசிரியை திருமதி.பூமகள் நடராஜா என்பவரால் தற்போதுள்ள சுவாமி அறை கட்டிக் கொடுக்கப்பட்டது. தொடர் முயற்சியாக அதிபர்.திரு.காசிநாதர், உபஅதிபர் ஆ.பொ.குலசிங்கம், ஆசிரியர்.திரு.றொசாயிறோ என்பவர்களின் முயற்சியால் 'றெட்பானா' உதவியுடன் 2 மாடிக் கட்டடம் கட்டித் தரப்பட்டதுடன் தளபாடங்களும் அன்பளிப்புச் செய்யப்பட்டது. (22.08.89)

"ஏசியன் பவுண்டேசன்" நிறுவனத்தால் 3 மாடிக் கட்டடம் கட்டித் தரப்பட்டதுடன் அவர்களும் தளபாடங்கள் வழங்கி இப் பாடசாலையை பௌதீக வளமுள்ள பாடசாலையாக மாற்றியமைக்க உதவினர். பின் G.T.Z நிறுவன உதவியால் 1989ல் சுற்றுமதில் கட்டப்பட்டது. இப் பாடசாலை மாணவர்களுக்கு குடிநீர் வழங்கும் வசதி கருதி இக் காலப்பகுதியில் எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளராக இருந்த திரு.ந.நமசிவாயம் (சிவகுமார் ஸ்ரோஸ்) என்பவரால் தற்போதுள்ள தண்ணீர்த் தாங்கி அமைத்துத் தரப்பட்டது.

எமது பாடசாலை ஆரம்ப காலங்களில் தரம் - 8 வரை மட்டுமே உள்ள பாடசாலையாக இயங்கி வந்தது. பின் வந்த காலங்களில் க.பொ.த.சாதாரண தரம் வரை கல்வி புகட்டும் பாடசாலையாக மாற்றப்பட்டு தற்போது வகை II ஐச் சேர்ந்த பாடசாலையாக விளங்குகிறது. இப்பாடசாலையில் க.பொ.த சாதாரண தரம் வரை கல்வி கற்ற மாணவர் உயர் தரக் கல்விக்காக எமது அயற் பாடசாலைகளான யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரிக்கும், மத்திய கல்லூரிக்கும் கல்வி கற்கச் செல்கிறார்கள்.

1991இல் அதிபராகக் கடமையேற்ற திரு.கு.சண்முகநாதன் அவர்களால் பாடசாலை கீதம் இயற்றப்பட்டதுடன், பாடசாலை இலட்சினையும் வடிவமைக்கப்பட்டு "சாந்துணையும் கல்" என்ற வாசகம் பொறிக்கப்பட்டது. இவரது காலத்திலேயே பாடசாலைக் கொடியும் மாணவிகளுக்கான கழுத்துப்பட்டியும் நீலம், வெள்ளை நிறம் கொண்டதாக வடிவமைக்கப்பட்டது.


தொடர்ந்து மாணவரை விளையாட்டுத் துறையில் உள்ளீர்க்கும் நோக்குடன் பிரதி அதிபர் ந. சிவராஜாவுடன் இணைந்து சத்தியம் (சிவப்பு), சிவம் (மஞ்சள்), சுந்தரம் (பச்சை) என மூன்று இல்லங்கள் தோற்றுவிக்கப்பட்டதுடன் அவை முறையே உண்மை, நன்மை, அழகு எனப்பொருள் பொதிந்த சொற்களாக அமைந்தமை சிறப்பிற்குரியது அத்துடன் இவரால் எமது பாடசாலைக்கு என ஒரு கலையரங்கு அமைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இக் காலப்பகுதியில் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். இதன் விளைவாக எமது மாணவர்கள் தமிழ்த்தினப்போட்டிகளிலும், கோட்டமட்ட வலயமட்ட விளையாட்டுப் போட்டிகளிலும் சிறப்பான சாதனைகளை நிலைநாட்டினர். இச் சாதனைகளுக்கு ஊன்று கோலாக இருந்த அதிபர், பிரதி அதிபர், சமகாலத்தில் கடமையாற்றிய ஆசிரியர்களின் பங்களிப்பு போற்றுதற்குரியது.

1995இல் எற்பட்ட இடப்பெயர்வால் எமது பாடசாலை தென்மராட்சியில் உள்ள வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் ஐந்து பாடசாலைகளுக்கு தலைமைப் பாடசாலையாக இயங்கியது.

1998இன் பின் திருமதி செ.பத்மநாதன் காலத்தில். G.T.Z ன் உதவியுடன் மாணவர் ஆசிரியர்களுக்கான நவீன மலசலகூடம் அமைத்துத் தரப்பட்டது. அத்துடன் மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாட்டின் புதிய பரிமாணமாக 2000ஆம் ஆண்டில் ஜிம்னாஸ்ரிக் போட்டியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


1989ல் ரெட்பாணா நிறுவன பிரதிநிதியால் எமது இரண்டுமாடிக் கட்டிடம் திறந்து வைக்கப்பட்ட போது





SEMP உலக வங்கித் திட்டத்தின் கீழ் பாடசாலைக் கல்வி அமைச்சர் சுரனிமல ராஜபக்ஷ அவர்கள் 30.05.2002ல் எமது நூலகத்தை திறந்து வைத்த போது


திரு. மா. சின்னத்தம்பி (சிரேஷ்ட விரிவுரையாளர் கல்வியியல் துறை, யாழ். பல்கலைக் கழகம்) அவர்களால் எமது நூலகத்திற்கு புத்தகங்கள் அன்பளிப்புச் செய்த போது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாடசாலை இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்



1993ம் ஆண்டு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இல்லமெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியின் போது

எமது மாணவிகளின் பாண்ட் வாத்தியக்குழு (இந்து கலாச்சார அமைச்சர் திரு. தி. மகேஸ்வரன் அவர்களால் வாத்தியக் கருவிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டது).





கல்வியியல் கல்லூரியில் இடம்பெற்ற 'அழகெழல்' போட்டியில் வெற்றிபெற்ற எமது மாணவிகள்.

எமது பாடசாலை மாணவிகளின் வலைப்பந்தாட்ட அணி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மாணவர்கள் பங்கு பற்றி கீழ்ப் பிரிவில் வலய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொள்வதற்கும், 2001ஆம் ஆண்டில் ஜிம்னாஸ்ரிக் போட்டியில் கீழ்ப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று எமது பாடசாலையின் புகழை நிலை நிறுத்த அதிபர் திருமதி. செ.பத்மநாதன் அவர்களின் ஊக்குவிப்பு காரணமாக அமைந்தது எனலாம். இவ்வேளையில் எமது மாணவர்களுக்கு ஜிம்னாஸ்ரிக் பயிற்சியைக் கொடுத்து வெற்றிக்குக் காரணமாக விளங்கிய பயிற்சியாளரை நன்றியுடன் நினைவு கூருகிறோம்.

2001ஆம் ஆண்டு அதிபராகப் பொறுப்பேற்ற திரு.சு.நடராஜாலிங்கம் அவரது அயராத முயற்சியும் வெளியகத் தொடர்புகளில் அவரது பங்களிப்பும் காரணமாக இன்று அழகும் பொழிவும் பெற்று விளங்கும் நூலகம் எமக்கு கிடைத்தது வரப்பிரசாதமாகும்.

இவரது வெளியகத் தொடர்பின் காரணமாக யுனிசெவ் நிறுவன பிள்ளைநேயப் பாடசாலைத் திட்டத்தில் எமது ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான விளையாட்டு முற்றம் அமைத்துத் தந்ததுடன், அம் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் கற்றல் உபகரணங்களையும் வழங்கியது. இந் நிறுவனத்திலிருந்து எமது பாடசாலைக்கு இவ் உதவியை பெற்றுத் தர முன்னின்ற அனைவரையும் இந்நேரம் நன்றியுடன் நினைவு கூருகிறோம்.

மேலும் அதிபர் திரு.சு.நடராஜலிங்கம் அவர்களின் முயற்சியின் பயனாக கால மாற்றத்திற்கேற்ப மாணவர்களுக்கு கணனி அறிவை வழங்கும் நோக்குடன் பழைய மாணவர், உதவியுடன், கணனிகள் பெறப்பட்டு கணனி அறை அமைத்ததுடன் திணைக்கள உதவியுடன் நவீன மனையியல் கூடமும், இன்று புதுப்பொலிவுடன் விளங்கும் எமது ஆரம்பக் கல்வி செயற்பாட்டுடனான வகுப்பறைகளும் புனரமைக்கப்பட்டன. அது மட்டுமன்றி நடராஜர் கலையரங்கு அழகுற மாற்றியமைக்கப்பட்டதுடன் இன்று எமது பாடசாலைத் தோற்றத்திலும் அழகுத் தன்மையை ஏற்படுத்த அல்லும் பகலும் பாடுபட்டார்.

விளையாட்டுத் துறையிலும், ஏனைய இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் எமது பாடசாலை மாணவர்கள் ஏனைய பிரபல பாடசாலை மாணவர்களுடன் போட்டி போடக் கூடிய நிலையில் வளர்ச்சி பெற்று விளங்குகின்றனர். இதற்கு முன்னுதாரணமாக 2003ஆம், 2004ஆம், 2005ஆம் ஆண்டுகளில் கோப்பாய் கல்வியியல் கல்லூரியில் இடம்பெற்ற "அழகெழல்" போட்டியில் பிரபல பாடசாலைகளுடன் போட்டியிட்டு 2ம், 4ம் இடங்களைப் பெற்றுள்ளனர்.

எமது பாடசாலை வளர்ச்சியில் இன்னுமொரு பரிணாமத்தை ஏற்படுத்தியது JICA செயற்திட்டத்தில் 10 பாடசாலைகளில் எமது பாடசாலையும் ஒன்றாக 2006இல் தெரிவு செய்யப்பட்டமை யாகும். இதன் பின் எமது பாடசாலை வளர்ச்சியில் 5 S முறையிலான முகாமைத்துவம், ஒழுங்கமைக்கப்பட்ட வகுப்பறை, அழகான பச்சைத் தோட்டம், கண்டறியும் முறையிலான விஞ்ஞானக் கற்பித்தல், குழு நிலைச் செயற்பாடு, பிள்ளைகளைக் கவரும் முறையிலான ஆரம்பப் பிரிவு வகுப்பறை கற்பித்தல் என பல வளர்ச்சிப் படிகளைக் கண்டுள்ளது.

அனைத்து வழிகளிலும் எமது பாடசாலையை வளர்ச்சிப் படியில் இட்டுச் செல்ல பாடுபட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வித் திணைக்களம், நலன்விரும்பிகள், அரசசார்பற்ற நிறுவனங்களை இவ்வேளையில் நன்றியுடன் நினைவு கூருவதுடன் இப்பாடசாலை மென்மேலும் பல வளர்ச்சிகளைப் பெற்று பாரினில் பல சாதனையாளர்களை உருவாக்கி பெருமை பெற வாழ்த்துகிறோம்.

**நன்றி**

**தொகுத்தவர் :- செல்வி.ஜெயந்தி ஐயாத்துரை**
**ஆசிரியை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையில் JICA கொள்கைகளும் ஏற்படுத்திய மாற்றமும்

**1990** ஆம் ஆண்டில் ஜப்பானால் அறிமுகப்படுத்தப்பட்ட 'ஐ விதி' எண்ணக்கரு (Japanese Management 5 S Concept) முறையாகும். நிறுவனமொன்றினை திட்டமிட்டு, முறைசார்ந்த வகையில் சிறப்பாக நடத்திச் செல்வதன் மூலம் வினைத்திறனையும், பயன்பாட்டையும், பொருளின் தரத்தையும் மேம்படுத்த அறிமுகப்படுத்தப்பட்டதே 'ஐ விதி' எண்ணக்கருவாகும். மேலைத்தேய கலாச்சார தாக்கத்தினை கொண்டே நவீன முகாமைத்துவ நுட்பமுறை தற்போது உலகின் நாலா பக்கங்களிலும் நற்பலனையும் சிறந்த பெறுபேறுகளையும் காணக்கூடியதாக உள்ளது. இவ்விதி ஆரம்பகாலத்தில் தொழிற்சாலைகளில் மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் வெற்றியே காரியாலயங்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ் எண்ணக்கரு 5 S எண்ணக்கரு என அழைக்கப்படுகின்றது.

யப்பானிய நிறுவனம் எமது பாடசாலைக்கு உதவ முன்வந்தமை எமக்கு கிடைத்த பெரு வெற்றி என்றே கூறலாம் எமது பாடசாலை நகரை அண்டிய பாடசாலையாக இருந்தாலும் வருமானம் குறைந்த பெற்றோரின் பிள்ளைகளே கல்வி பயில்கின்றனர். அவர்களின் வாழ்க்கைச் செலவை நிவர்த்தி செய்ய முடியாத போது பிள்ளைகளின் கல்வியில் அக்கறை குறைவாகவே காணப்படுகின்றது. இத்திட்டம் கிடைத்த வேளையில் இத் திட்டம் பற்றிய பூரண அறிவின்மையால் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் இத்திட்டத்தினுள் வர பின்வாங்கினர். ஆனால் அதிபர் பெற்றோர், ஆசிரியர், சந்திப்புக்கள் போன்ற முன்னெடுப்புக்கள் காரணமாக அனைவரையும் கவர்ந்த 5 S திட்டத்திற்கு மாறத் தொடங்கினர்.

இதன் முதலாவது எண்ணக்கரு - செயிரி - (Seiri Sort out Unnecessary I tams in the Work Place) இதன்படி எமது பாடசாலையில் தேவையற்ற விடயங்களைத் தெரிந்து அவற்றை அப்புறப்படுத்துவது என்பது இதன் கருத்தாகும். எமது பாடசாலையில் தேவையற்ற கடிதக் கோவைகள் பயன்படுத்த முடியாத தளபாடங்கள், புதுப்பிக்க முடியாத இயந்திர உபகரணங்கள் போன்ற பொருட்கள் பாடசாலையின் இடவசதியைப் பாதிப்பது மட்டுமன்றி உள்ளகச் சூழலுக்கும் அச்சுறுத்தலாக இருந்தமையால் அவை செய்ரி எண்ணக்கருவிற்கமைய அப்புறப்படுத்தப்பட்டது. இதன் அடிபபடையில் எமது பாடசாலையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு கோவைகள் செப்பனிடப்பட்டு, ஒழுங்கு படுத்தப்பட்டு புதிய முறைகள் உள்வாங்கப்பட்டது. இத்திட்டத்தின் பின்னர் பாடசாலையின் கட்டமைப்புக்குள் அடங்கும் முன்பக்கத் தோற்றம், அதிபர் அலுவலகம், வகுப்பறைகள், விஞ்ஞான கூடம், கணனி அறைகள், நூலகம், பச்சைத் தோட்டம், மனையியல் கூடம், மலசலகூடம், அத்தனையும் ஒழுங்கமைப்புடன் இணைக்கப்பட்டு, மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர், பாடசாலை அயற் சமூகம், நலன் பேணும் நிறுவனங்கள் மூலம் பாடசாலை வலையமைப்பு போன்று தொழிற்பட ஏதுவாக Jaica உதவியது என்றே கூறலாம்.

Jaica வின் இரண்டாவது விதி செய்டோன் (Seiton - Arange Necessary I tems in good order so that they can be easily picked for use) இதன்படி பாடசாலையின் நாளாந்த கருமங்களை மேற்கொள்கையில் அத்தியாவசியமானவற்றை ஒரு ஒழுங்கு முறைப்படி அமைத்துக் கொள்வதையே இது குறிக்கின்றது. கடிதக் கோவைகள், சுற்று நிருபங்கள், பதிவுகள், உபகரணங்கள், களஞ்சியப் பொருட்கள் என்பவற்றை ஒழுங்காக வைத்துக்கொள்வது இதன் மூலம் எமது பாடசாலையில் பின்பற்றப்பட்டதால் காரியாலயம், பாடசாலைச் சூழல் என்பன கண்ணைக் கவரும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டு கவின் நிலை பேணப்பட்டது. இது எல்லோரும் விருப்பப்படும் சூழலாகவும் அமைந்தது. இதன் மூலம் காலதாமதம், நேர வீண் விரயம் என்பன ஏற்பட வாய்ப்பில்லாது போகும். ஒவ்வொரு பொருளுக்கும் இடமொன்று அல்லது நிலையமொன்று இருக்க வேண்டியதைப் போல ஒவ்வொரு பொருளும் உரிய இடத்தில் வைக்கப்பட வேண்டுமென்பது 'செய்டோன்' கருத்தாகும்.

5 S ன் மூன்றாவது விதி செய்சோ (Seiso - Clean your work place Completely so that there is no dust on the floor Machines and equipment) இதன்படி பாடசாலையை சுத்தமாக வைத்திருப்பது பற்றியும் அலுமாரிகள், உபகரணப் பயன்பாட்டில் படியும் தூசுகள், அழுக்குகள் முற்றாக அகற்றப்பட வேண்டியது நாளாந்த கடமை எனக் கூறப்படுகின்றது. இத்திட்டத்தின் மூலம் பல நன்மைகளைப் பெறக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




→ JICA யாழ் மாவட்ட இணைப்பாளருடன் அதிபர்.



பாடசாலை JICA முகாமைத்துவக் குழுவினர் ←



→ JICA திட்ட வகுப்பறையில் அதிபர் மாணவர்களுடன்



JICA திட்டத்தில் இடைநிலைப் பிரிவு வகுப்பறை கற்பித்தல் செயற்பாடு. ←



→ விஞ்ஞான செயன்முறையில் மாணவர்கள்



தொழில்நுட்ப செயன்முறையில் மாணவர்கள். ←



→ Green Garden / Jica Project

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JAFFNA NATIONAL COLLEGE OF EDUCATION

"AZHAKEZHAL"["அழகெழல்"] competition - 2004

Organized by

AESTHETIC UNION

Name: Sharmila kamalanathan

School: J/Koddady Namasivaya vidyalayam

Competition: Folk dance

Division: Grade 4 & 5

This Certificate is awarded for obtaining the...Third.........prize In the District Level.

Co-odinater

President
[Jaffna N.C.O.E]

04.09.2004.
Date

Secretary

Chief Guest
Secretary
Prov.Ministry of Edu.
N.E.P

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை கவிநிலைப்படுத்தப்பட்டு சுத்தம் பேணப்படுவதால் எல்லோரையும் கவரக்கூடியதாக அமைந்துள்ளது. சிறந்த கட்டமைப்பிற்கேற்ப, ஒழுங்குபடுத்தப்பட்ட அலுவலகம் பாடசாலை வரைபடம், கோவை ஒழுங்குபடுத்திய காட்சி, ஆசிரியர் வருகை காட்சிப்படுத்தல், வகுப்பறை, ஏனைய அறைத்திறப்புக்கள் திறப்புத்தாங்கியில் கொழுவப்பட்டிருத்தல், பள்ளி நேர முகாமைத்துவம் பேணப்படுகின்றமை என்பவற்றால் கவிநிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆலோசனை பெட்டி வைக்கப்பட்டுள்ளமையால் அடிக்கடி எமது தேவைகள், குறைபாடுகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.

வகுப்பறையினை நோக்கும்போது பாடசாலைப் பைகள் தொங்க விடப்பட்டு காட்சியளிப்பதோடு மாணவரது கொப்பி, புத்தகங்களுக்கு நிறக்குறியீடுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. மாணவர்கள் விரைவு, சுறுசுறுப்பு, நேரமுகாமைத்துவம், கற்றலுக்குரிய முன்னாயத்தம், பேணப்படுகின்றதோடு, தமது வகுப்பறைக்கு மேசைச்சீலை குழுமுறை ஒழுங்குபடுத்தல், பூச்சாடி, பூந்தோட்டம், அமைத்து பேணுவது என்பவற்றில் மாணவர் பொறுப்புடன் செயல்படுத்தப்படுவதால் வகுப்பறைகள் கவிநிலைப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் மாணவர் பாடசாலை வருகை அதிகரிப்புடன் குறித்த நேரத்துக்கு வருகை தருதல், சுத்தம் பேணல் என்பன வெகுசிறப்பாக உள்ளன.

விஞ்ஞான கூடத்தில் உபகரணங்கள் ஒழுங்குபடுத்தி அடையாளமிடப்பட்டு பட்டியல் படுத்தப்பட்டுள்ளன. இதனால் மாணவர் சிரமமின்றி செயற்பாடுகளின் போது செயலட்டைக்கேற்ப சுயமாக இயங்கி பரிசோதனைகளில் ஈடுபட்டு குழுரீதியாக அறிவைப் பெற்று ஒற்றுமையாகச் செயற்படக்கூடியதாக உள்ளனர்.

நூலகத்தில் நூல்கள் தரம் பிரிக்கப்பட்டு பாடரீதியாக அடுக்கு பெயர் குறிக்கப்பட்டுள்ளது. மாணவர் தமக்குத் தேவையான நூல்களைத் தாமே பெறுவதால் நேரமுகாமைத்துவம் பேணப்படுவதுடன், ஒழுங்குபடுத்துதல், பேணுதல், தரப்படுத்தி இனங்காணல் என்பவை இலகுவாக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப பிரிவில் மாணவர்களுக்கு விரும்பிக் கற்கக் கூடிய சூழல், சித்திரக்கண்காட்சி, வகுப்பறை ஒழுங்கமைப்பு, ஆசிரியர் அரவணைப்பு ஏற்பட்டமையால் வரவு அதிகரித்துள்ளது.

100 Box செயற்பாட்டினை மாணவர்கள் நாளாந்தம் காலையில் செய்வதனால் எண்கள் தொடர்பான அடிப்படைக் கொள்கைகளை இலகுவில் விரைவில் செய்யக்கூடியதாய் உள்ளது. இதில் முதன்மை மாணவர், காட்சிப்பலகையில் வகுப்பு ரீதியாக எழுதப்படுவதால் மாணவர்களிடம் ஊக்குவிப்பு ஏற்பட்டு அறிவு, மனப்பாங்கு வளர்க்கப்படுகின்றது.

பாடசாலை சுத்தம் பேணப்படுவதுடன், மாணவர் தாமே வகுப்பு ரீதியாக குப்பைகளைக் கூடையில் சேகரித்து, குப்பைத்தொட்டியிலிட்டு அகற்றும் நிலை பேணப்படுகிறது. பாடசாலையில் தேவையற்றவை அகற்றப்படடு, சுற்றாடல் சுத்தம் பேணப்படுவதால், அழகாகக் காட்சியளிக்கின்றது.

மாணவர்கள் சீருடை அணிந்து காலைப் பிரார்த்தனைக்கு வருகை தருவது, ஆலயத்தின் முன்றலில் தியானத்தில் ஈடுபடும் போது அமைதி பேணுவது, ஆலயத்தைத் தூய்மையாக அழகுபடுத்தும் மனப்பாங்கு என்பவற்றில் மாணவர் சிறப்பான முன்னேற்றம் கண்டுள்ளனர். உடற்பயிற்சியில் இசைக்கேற்ப மாணவர் செயற்படுவது உற்சாகம், மனமகிழ்ச்சி கொடுப்பதாக உள்ளது.

பச்சைத்தோட்ட உருவாக்கத்தினால் மாணவர் தமக்குத் தேவையான தாவரப் பாகுபாடு, தாவர இனங்கள் தெரிவு செய்தல், மூலிகைகளை இனங்காணல் என்பவற்றால் அவர்களின் அறிவு வளர்கிறது. இப் பச்சைத் தோட்டமானது மாணவர், ஆசிரியர்கள், அதிபர் பூரண ஒத்துழைப்பினால் கிடைத்த வெற்றியாகும்.

மாணவர்கள் இச் செயற்திட்டத்துடன் இணைந்து கொண்டமையால் கவனச்சிதறல்கள் வீட்டுப் பிரச்சினைகளை மறந்து சந்தோசமாகவும், ஆர்வமாகவும் கல்விச் செயற்பாட்டில் செயற்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. அதுமட்டுமல்ல, அதிபர், ஆசிரியர் பெற்றோர், கூட்டுறவு மேன்மை அடைந்துள்ளது. முழுமையாக நோக்கும் போது பாடசாலைக் கவின்நிலையில் பலவகையான மாற்றங்கள் ஏற்படுவதோடு மாணவர் கல்வியில் மேன்மேலும் அக்கறை காட்டினால் இத்திட்டத்தில் முன்னேற்றம் அடைய சிறந்த வாய்ப்பு ஏற்படக் கூடியதாய் உள்ளது. யப்பான் நிறுவனத்தின் “KAIZAN” என்னும் கருத்துக்கமைய **“எல்லோரும் பங்கெடுத்தால் முன்னேற்றம் காப்பது நிச்சயம்”**

**ஆக்கம் - திருமதி ப.சிவகடாட்சம்**
**உப அதிபர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவுகள்



எண்பத்தொடு மூன்றில்,
ஆசிரியத்துவப் பயிற்சி நிறைவு,
கூட்டுப் புழுவிலிருந்து,
சிறகடிக்கும் வண்ணத்துப் பூச்சியாய்...

அறிவினில் தெளிவுடன்,
உளத்தினில் உரமுடன்,
கண்களில், கருத்தினில்,
தேடல்... தேடலுடன்,
மானுடவர்க்கத்தை,
உருவாக்கும் சிற்பியென
உளத்தில் இறுமாப்புடன்,
கால் பதித்தேன்!

முதற்பாடசாலை,
கொட்டடி நமசிவாயம்,
ஓ! சிறிய பாடசாலை,
பிரிக்காத வகுப்பறைகள்.
வளமற்ற சூழல்,
சீருடை இல்லை,
கழுத்துப்பட்டி இல்லை,
காற்றிறங்கிய பலூனாய்
கூம்பிச் சோர்ந்தது மனம்!
பிள்ளை படிக்குமா?
கற்பித்தல் சிறக்குமா?
மரியாதை கிடைக்குமா?
சமூகம் மதிக்குமா?
எத்தனை கேள்விகள்?
விடையில்லா வினாக்கள்!

பதினைந்தாண்டுகள்
பயிற்றினேன்! பயின்றேன்!
அத்தனை வினாக்களும்
அருகித் தேய்ந்தது!
வினாக்களின் விடையாய்
பள்ளி வாழ்க்கை அமைந்தது
ஆசு - இரியர் ஆன
ஆசிரியராகும்,
மகிமையை இங்கு கற்றேன்!
அறிவூட்டும் பாலர்க்கு,
அன்னையுடன் தந்தையாகும்
அநுபவம் இங்கு பெற்றேன்!
பௌதிக வளம் தான்
பாடசாலை அல்ல,
என்பதை இங்கு கற்றேன்!
பாட விதானத்துள்
இணைப்பாடவிதானம்
இணைதலை இங்கு கற்றேன்!
அதிபர், ஆசிரியர்
அனைவரும் ஓர் மனமாய்
அமையும் நற்சேவை கற்றேன்

விஞ்ஞானம் மட்டுமல்ல
மெஞ்ஞானமும் இணைந்து
மிளிரும் நல்வாழ்க்கை பெற்றேன்!
ஆடலுடன் பாடலுமாய்
அரங்கேறும் நாடகத்தின்
அமைவு திறன் இங்கு கற்றேன்!

இயல் இசை நாடகத்தில்
இங்கு தமிழ்ச் சுவைகாணும்
இயல்பினை இங்கு பெற்றேன்!

ஈடில்லா நட்புடன்
இணைந்து செயலாற்றும்
வன்மையை இங்கு கற்றேன்!

நிர்வாகத்திறன் பெற்று
நீதியாய் பணிபுரியும்
நேர்மை சேர் நுட்பம் பெற்றேன்!

எத்தனை துறையுண்டோ
அத்தனை துறையிலும்
கால் பதித்த நாட்கள் அவை!
மனிதத்தை உருவாக்கும்
மகத்தான சேவையில்
மகிழ்ந்திருந்த நாட்கள் அவை!
நடேசர் பாதத்தில்,
நமசிவாயப் பள்ளியில்
கனிந்திருந்த நாட்கள் அவை!
கோடான கோடி பொன்
கொடுத்தாலும் குவலயத்தில்,
மீள வாராத நாட்கள் அவை!
இணையில்லா பெருமையுடன்
நடேசர் அருள் பெற்ற
நமசிவாயம் இனிது வாழி!
கல்வி சேர் ஒழுக்கம்
கறையிலா மாண்பு பெற்ற
கலங்கரை விளக்காய்வாழி!
எத்தனை நலம் உண்டோ
அத்தனை நலம் பெற்று
ஈடின்றி உயர்ந்து வாழி!
பல்லாண்டு பல்லாண்டு
பல்லாயிரம் ஆண்டு
பரிதியின் ஒளியாய் வாழி!



**கௌரி - கணேசலிங்கம்**
முன்னாள் விஞ்ஞான ஆசிரியை
பகுதித் தலைவர் (1983 - 1998)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பார்வையில் அதிபர்

திருவாளர் சு. நடராஜலிங்கம் அவர்கள் எமது கல்லூரியின் அதிபராக கிடைக்கப் பெற்றமை ஓர் பெரிய வரப்பிரசாதமாகும்.

எமது பாடசாலைக்கு 2001ல் புதிய அதிபர் வருகிறார் என்றதும் நாம் எல்லோரும் புதிய அதிபர் எப்படி இருப்பாரோ என எண்ணி மனக்கலக்கம் அடைந்திருந்தோம். ஏனெனில் 90ல் இருந்து நமசிவாய வித்தியாலயத்திற்கு வந்த அதிபர்கள் எல்லோருமே ஒழுக்க சீலர்களாகவும் கடவுள் நம்பிக்கை உடையவர்களாகவுமே நான் கண்டிருந்தேன். அதே போன்று புதிய அதிபரைக் கண்டதுமே அவரது சிவந்த நிறமும், இளமைத் தோற்றமும், குணஇயல்பும் எங்கள் எல்லோருக்கும் ஓர் திருப்தியை அளித்தது.

தனது குடும்பத்தில் மூத்தவராக இருந்தாலும் இளையவர் போன்ற தோற்றமுடைய எங்கள் அதிபர் நிர்வாகத்தை திறம்பட நடாத்தி வந்தார். எந்த ஒரு பொறுப்பையும் தானாக எங்கள் மீது திணிக்கமாட்டார் நீங்களே விரும்பி பொறுப்புக்களை எடுத்துக் கொள்ளுங்கள் என பொறுப்பை பகிர்ந்து அளித்து எம் மூலமே கடமைகளைச் செய்ய வைத்துவிடுவார்.

பாடசாலைக்கு என கிடைக்கும் பணவிடயங்களையும் எல்லோரும் அறிந்துகொள்ளும் வண்ணம் ஆசரியர்களிடமே பொறுப்பளித்து விடுவார். எந்த ஒரு விடயமாயினும் சரியானது எனில் நாங்களே செய்து முடித்துவிட்டு கூறினால் சரியான விடயமானால் நீங்களே செய்து கொள்ளலாம் என பெரிய மனத்துடன் கூறுவார்.

JICA செயற்திட்டத்தின் கீழ் 2006ல் பாடசாலையை மிக உன்னதமான நிலைக்கு கொண்டு வந்தவர் எமது அதிபர். அயல் பாடசாலைகள் மட்டுமல்ல வேறு பல பாடசாலைகளிலும் கொட்டடி நமசிவாயத்தின் தற்போதைய சிறப்பான உன்னதமான நிலை பேசப்பட்டு வருகின்றது அதுமட்டுமல்ல எமது கல்விப் பணிப்பாளர் கூட பல கூட்டங்களிலும் எமது பாடசாலையின் வளர்ச்சி பற்றி கூறியுள்ளார். இவ்வாறான பெருமை எல்லாம் எமது அதிபராலேயே எமக்குக் கிடைக்கப் பெற்றது.

இவற்றுக்கு எல்லாம் மேலாக மிகவும் கருணையுள்ளம் கொண்ட எமது அதிபர் அல்லைப்பிட்டியில் இருந்து வந்த ஆசிரியர்களையும் மாணவர்களையும் முழுமனதுடன் வரவேற்று பாடசாலையில் இடம் கொடுத்து இன்று வரை ஆதரித்து வைத்துள்ளார்.

ஆசிரியர் கலாசாலையில் இருந்துவரும் ஆசிரிய மாணவர்கள் வந்து போகும் போது இவ்வாறான அன்புள்ளம் கொண்ட கடமை, கண்ணியம், கட்டுப்பாடுள்ள ஒரு அதிபரின் கீழ் கடமையாற்றும் நீங்கள் கொடுத்து வைத்தவர்கள் எனக் கூறிச் செல்வார்கள்

ஒரு குடும்பம் போன்று செயற்படும் எமது பாடசாலையில் எந்த ஒரு ஆசிரியரதும் நன்மை தீமை இரண்டிலும் கலந்துகொண்டு நெருங்கிய உறவினர் போலவே நடந்து கொள்வார். எமது கடமைகளை நாம் சரிவரச் செய்தால் எம்மைப் பாராட்டவும் தயங்கமாட்டார். பூவுடன் இணைந்த நார்போன்று நாமும் மணம் வீசி ஆசிரியத் தொழிலுக்கு பெருமை சேர்ப்போம்.

குழந்தை உள்ளமும் வனப்பும் நிறைந்த, எமது அதிபருக்கு அகவை 60 வந்துவிட்டது இளைப்பாறுகிறார் என்பதை எண்ணும் காலம் மனம் திக்கற்று நிற்கிறது. எனினும் எனது அயலவராக இவர் இருக்கிறார் என்பதில் நான் பெருமையுடன் மகிழ்வும் அடைகிறேன்.

**திருமதி. சிவபுரத்தரசி கிரிதரன்**
**ஆசிரியை (ஆரம்ப பிரிவு)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சிய மூச்சுடன் கொட்டடியில் இணைந்த ஆசான்

நிமிர்ந்த நன்நடை, நேர்கொண்ட பார்வை, எல்லோரையும் இலகுவில் கவர்ந்திழுக்கும் வசீகரமான தோற்றம் கொண்ட இவர்தான் எங்கள் உள்ளம் கனிந்த என் பெருமதிப்பிற்குரிய திரு.சுப்பிரமணியம் - நடராஜலிங்கம் ஆவார். அவர் தனது சொல்லாலும் செயலாலும் என்னை மட்டுமல்ல பலரைக் கவர்ந்த பண்பாளர். சொல் ஒன்றும் செயலொன்றுமாக வாழும் இச் சமுதாயத்தின் மத்தியில் அவர் தனது சொல்லிலும் செயலிலும் உறுதியாக நின்ற பண்பு போற்றுதற்குரியது. எனக்கும் அதிபர் திரு.சு.நடராஜலிங்கம் அவர்களுக்கும் இருந்த முற்பிறவித் தொடர்போ என்னவோ அவர் இந்த வித்தியாலயத்தின் அதிபராக கடமையில் இருந்த பொழுது நானும் அங்கு ஆசிரியராகப் பணி புரியும் வாய்ப்புக் கிட்டியதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இருந்தும் அவர் பணியில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும்போது நானும் கூடவே அவருடன் இல்லையே என்பதையிட்டு என் மனம் சற்று வேதனையடைகின்றது.

அவர் ஆற்றிய பணிகளில் நூலக விரிவாக்கம், கணனி அறிவை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுத்தமை, ஜெய்க்கா திட்டத்தில் உள்வாங்கப்பட்டமை பெற்றோர், ஆசிரியர் கலந்துரையாடல், பாட ரீதியான மன்றங்களை இயங்கச் செய்தமை, புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த.சாதாரணப் பரீட்சைகளில் பல மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றமை, தமிழ்த்தினம், அழகெழல் போட்டிகளில் மாணவர்கள் பரிசில்கள் பெற்றமை குறிப்பிடத்தக்கவையாகும். இவர் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும் ஆத்ம நண்பனாக, வழிகாட்டும் ஆசானாக, அன்புகாட்டும் தந்தையாக இருந்து நிர்வாகத்தை சிறப்புற நடத்தியமை குறிப்பிடத்தக்கது. நல்ல உள்ளங்கள் நிச்சயம் வாழ்த்தப்படவேண்டும். எனவே அவரும் அவரது குடும்பத்தினரும் பல்லாண்டு பல்லாண்டு காலம் இனிது வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல நடராஜப் பெருமான் அருள் கிடைப்பதாக வேண்டுகிறேன்.

**சி.துரைராஜா**
**முன்னாள் ஆசிரியர் (சங்கீதம்)**


**மனிதராகப் பிறப்பவர்கள்**
**புகழைப் பெறாவிட்டால், அவருக்கு அது**
**இவ்வுலகில் தீராப் பழியைத் தரும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மலருக்கு எம் உளம் கனிந்த
நல் வாழ்த்துக்கள்

# தயா வீடியோ சென்ரர் அன் பற்றி சாச்







- தரமான ஓடியோ, வீடியோ CDகள் விற்பனைக்கும், வாடகைக்கும்




- பற்றி சாச் சேவிஸ்



- வீட்டு வயறிங், பைப் லைன்



- மங்களகரமான நிகழ்வுகளுக்கு ஒளி, ஒலி அமைப்பு
- உங்கள் தொலைக்காட்சி பெட்டிகளுக்கு நவீன தொழில்நுட்ப கருவி ஊடாக கேபிள் இணைப்புக்கும்



**அனைத்துக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்**

## தயா வீடியோ சென்ரர் அன் கேபிள் விஷன்

05, காதி அபூபக்கர் வீதி,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம். T.P : 0776102604

இம் மலருக்கு எங்களது நல் வாழ்த்துக்கள்!

KMH

# கஜமுகன் ஹாட்வெயர்

Hardware Merchants, Importers of Building Materials,
Cement, Paints, Electrical Goods, Cycles,
Cycle parts & Accessories

**147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்**

**T.P : 021 2222833**

இம் மலருக்கு எங்களது நல் வாழ்த்துக்கள்!

# E.S.Perampalam & co.

# பேரம்பலம் சக நிறுவனம்

**No: 50, Kasthuriar Road,**
**Jaffna.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமய வாழ்வில் பெண்களின் பணி

உலகிலே அனுட்டிக்கப்படுகின்ற சமயங்களில் **"மேன்மை கொள் சைவ நீதி"** க்கு முதலிடம் உண்டென அனுபவமூலம் அருளாளர்களும் அறிஞர்களும் சாதனைப்படுத்தியுள்ளமையைக் கண்கூடாக அறிய முடிகின்றது. அத்தகைய சைவசமயம் மக்கள் மத்தியில் பணிபுரிய பெண்களின் பங்களிப்பை வேதகாலம் தொடக்கம் காணக்கூடியதாகவுள்ளது. சைவசமய ஆசாரங்களை மக்கள் சமூகத்தில் அனுஷ்டித்த போது நாடும், வீடும் அமைதியாகவும் ஆனந்தமாகவும் காணப்பட்டது. எங்கும் அன்புமயம், எங்கும் இன்பமயம், எங்கும் ஆனந்தமயம், எங்கும் அமைதி மயம், எங்கும் அருள்மயம், எங்கும் கருணை மயம், எங்கும் நீக்கமற இறையருள் வெள்ளமெனக் காணப்பட்டது.

பெரிய புராணத்தில் பெண்கள் சைவசமயத்திற்கு ஆற்றிய பணி அளப்பரியவையாகும். இன்று அவை அருகியதால் எங்கும் துன்பமயமும் அமைதியின்மையையும் காணமுடிகின்றது. மீண்டும் மக்கள் சமுதாயம் சீர் பெற்று ஆனந்தமடையப் பெண்கள் வீறுகொண்டெழ வேண்டும்.

புராணகாலத்தில் பெண்களாற்றிய பெரும் பணியின் பெருமையால் திருமுறைகள் எமக்கு கிடைத்தன. **"தெய்வந் தொழா அள் கொளுநனைத் தொழ தொழுவாள் பெயெனப் பெய்யும் மழை"** என்றங்கு வாழ்ந்த பெண்களில் காரைக்காலம்மையாரும், திலகவதியாரும், மங்கையர்க்கரசியாரும் முதன்மையானவர்கள் எனவே தான் அவர்களின் வரலாற்றுச் சரித்திரமும் அவர்களின் அரும் பெரும் பணிகளும் பெரிய புராணத்தில் சேக்கிழார் பெருமானால் போற்றப்பட்டுள்ளன.

"செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்யலாகதார்" என்றங்கு அவர்களின் பெருமைகளை யாம் பெரிய புராணம் மூலம் அறியக்கிடக்கின்றது. காரைக்காலம்மையாரின் இயற் பெயர் புனிதவதியார். இவரின் சிறுபராய வாழ்க்கை சிவனடியே சிந்தித்துச் சிவனடியார்க்குத் தொண்டு செய்து விளையாடும் போதும், வீட்டு வேலை செய்யும் போதும் சிவநாமம் பயின்ற பெருமையினால் இல்லற வாழ்வில் புகுந்த போதும் சிவனடியாரைப் பூசித்து அதன் பயனால் தெய்வத்தன்மை பெற்றுக் கணவனால் வணங்கும் நிலையை அடைந்தவர்.

கணவன் அனுப்பிய இரு மாம்பழங்களில் ஒன்றைச் சிவனடியாருக்கு அமுதுடன் அளித்தார். பரமதத்தன் இரு மாம்பழங்களையும் கேட்டபோது சிவனடியார் உண்ட மாம்பழமும் இறைவனால் அளிக்கப்பட்ட சந்தர்ப்பத்தையும் அறிய முடிகின்றது.



**"தான் உண்டது மண்ணுண்டது பிறருண்டது சிவனுண்டது."** என இல்லறம் நடத்தும் நங்கையர்க்கு தெய்வீக வாழ்வின் மகத்துவத்தை எளிய முறையில் கற்பித்த புனிதவதியார். கணவனால் வணங்கப்பட்ட தான் **"இனி "ஊனுடலுடன் வாழுதல் கூடாதென்று பேய் வடிவமெடுத்து எம்பெருமானுக்கு ஆளாகி"** எம்பெருமானாலேயே 'அம்மையே' என்று அழைக்கப்பட்டதுடன் எம்பெருமான் காரைக்காலம்மையாரின் பெருமை பற்றி உமாதேவியாருக்கு "வருமிவள் நம்மைப் பேணும் அம்மைகாண் உமையே பற்றிக் பெருமை சேர் வடிவும் வேண்டிப் பெற்றனள்" என்று வின்றை அருகுவந்தனைய நோக்கி "அம்மையே" என்னும் செம்மை, ஒருமொழி உலகமெலாம் உய்யவே அருளிச் செய்தார்.

காரைக்காலம்மையாரும் 'அப்பா' என்று எம் பெருமானை அன்பு பக்தியுடன் அழைத்து அவர் பணி அடைய உனக்கு என்ன வரம் வேண்டுமென? எம்பெருமான் வினாவிய போது **"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் பிறவாமை வேண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும். இன்னும் வேண்டும் யான் மகிழ்ந்து பாடி அறவா நீ ஆடும் போது நின் அடியின் கீழ் இருக்க வேண்டும்"** என்று காரைக்காலம்மையார் எம் பெருமானிடம் கேட்டதாகச் சேக்கிழார் பாடியுள்ளார்.

திலகவதியாரின் ஒரே தம்பி மருள்நீக்கியார். பெற்றோரும் தனக்குத் துணைவனாக நிச்சயிக்கப்பட்ட கலிப்பகையாரும் மறைந்தபின் தம்பிக்காக கைம்மை நோன்பு நோற்று ஆலயத்தில் சரியைத் தொண்டு புரிந்து தவவாழ்வு வாழ்ந்த செம்மணச் செல்வியாகிய திலகவதியார் தனது தம்பி புறச்சமயம் போந்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றறிந்து மிகவும் வேதனை அடைந்தார் எம்பெருமானின் ஆலயத்திற்குப் பொழுது "புலர்வதன் முன் திருவலகு பணிமாறி புனிதகன்ற" நலமலி ஆண் சாணத்தால் நன்கு திருமெழுகிட்டு "மலர் கொய்து கொடு வந்து மாலைகளுந் தொடுத்தமைத்து" பலர் புகழும் பண்பினால் திருப்பணிகள் பல செய்து திலகவதியார் எம்பெருமானை நோக்கித் "தவமென்று பாயிடுக்கித் தலை பதித்து நின்றுண்ணும் அவமொன்று நெறி வீழ்வான் வீழாமே அருளும்" என்று சிவமொன்று நெறிநின்ற திலகவதியார் பரவ, பவமொன்றும் வினை தீர்ப்பார் திருவுள்ளம் பற்றுவார். எம்பெருமானும் திலகவதியாரின் மனக் கவலையின் உள்நோக்கம் அறிந்து "உன்னுடைய மனக்கவலை ஒழி நீ உன் உடன் பிறந்தான் முன்னமே முனியாகிய எமையடையத் தவமுயன்றான் அன்னவனை இனிச் சூலை மடுத்தான்மை" என்று அருளி மருள்நீக்கி யாருக்கு சூலை நோயை எம்பெருமான் உண்டாக்கினார்.

இதனால் மீண்டும் சைவசமயம் வந்த மருள்நீக்கியார் திருமுறைகள் பாடி சூலைநோய் தீர்த்தார். திலகவதியாரின் பணி எமக்கு திருநாவுக்கரசரையும் திருமுறைகளையும் அருளிய பெருமையை சைவ உலகப்பெண்களால் மறக்க முடியுமா? முத்தமிழும் விளையாடி முச்சங்கம் இருந்து தமிழ் வளர்த்த புண்ணிய பூமி மதுரை மா நகரம். கூன்பாண்டியன் காலத்தில் பாண்டி நாட்டிலும் மதுரை நகரிலும் சமணரின் சமயம் பரவியது. இதனால் சமய ஆசாரங்கள், கோவில்களில் நித்திய, நைமித்திய பூசைகள் விழாக்கள் அருகின. சைவ சமய ஆலயங்கள் சமணசமயப் பள்ளிகள் ஆகுந் தன்மையினால் பாண்டியனும் குடிமக்களும் சமண சமயத்தை அனுட்டிக்கத் தொடங்கினர்.

பாண்டிமாதேவியாரும் குலச்சிறையாரும் பாண்டி நாடு முழுவதிலும் சைவசமய சீலர்களாக இருந்தனர். மீண்டும் சைவசமய நீதி தழைக்க பாண்டிமாதேவியார் செய்த அருள் தொண்டின் பெருமையை சேக்கிழார் பெரிய புராணத்திலும் திருமுறைகளிலும் குறிப்பிடுகின்றார். மங்கையர்க்கரசியாரின் தவமும் முயற்சியும் குலச்சிறை நாயனாரின் தொண்டும் பாண்டி நாட்டில் சம்பந்தர் சுவாமிகள் எழுந்தருளி சைவசமயத்தை நிலைநாட்டி கூன்பாண்டியனை நின்றசீர்நெடுமாறன் ஆக்கிய வரலாறுகளைச் சேக்கிழார் சுவாமிகள் பக்தி நனி சொட்டச் சொட்டப் பெரிய புராணத்தில் பாடியுள்ளார்.

இவ்வாறு வளம் படுத்தப்பட்டமையினாலே தான் எமது சமய மக்கள் அன்று போரும் பூசலும் வறுமையும் பிணியுமின்றி, வசியும் வளனும் பெற்று வாழ்ந்தனர். வசி நாம ஒலிகளும் சிவப்பணியும் பெருகியமையால் தமிழ் கூறும் நல்லுலகம் இனிமையாகவே இருந்தது. இன்று நவநாகரீக வாழ்வும் விஞ்ஞான வாழ்வும் மக்களிடையே புகுந்தமையால் வறுமைப்பிணி பெருகப் பெருக புறச்சமயமாகிய கிறிஸ்தவம் சைவ மக்களின் ஆசாரத்தை விழுங்கி தம் ஆசாரத்தைப் பரப்பி நாட்டில் மழையின்மை, நீதியின்மை, இரக்கமின்மை முதலியவற்றைப் பெருகச் செய்து வருகின்றது.

பொதுவாக எல்லா இடங்களிலும் இத்தொற்று நோய் பரவி வருவதைக் காண முடிகின்றது. இதனை இலகுவில் நீக்க வேண்டுமாயின் மேடைப் பிரசங்கத்தை விட சமுதாயத்தில் பணியாற்றும் பெண் தொண்டர்களை உருவாக்க வேண்டும். சுவாமி விவேகானந்தர் சைவசமயப் பெண்களின் பெருமைகள் பற்றி **சிக்காக்கோ, கலிபோர்னியா** போன்ற பல தேசங்களில் கேட்டாரைப் பிணித்துச் செயற்படும் அளவு பிரசங்கம் செய்து சாதனைப்படுத்திய தன்மையினால் **சசோதரி நிவேதிகா** தோன்றிப் பல சமயப்பணி, சமூகப்பணிகளைச் செய்தார்.

உலக போக வாழ்வு என்றும் பயத்தையும் துன்பத்தையும் அமைதியின்மையையும் பெருக்கி வருவதால் நல்ல சமூகம் ஒன்றைக் காணமுடிவதில்லை. ஆத்மீக, ஆன்மீக, தெய்வீக வாழ்வு பயத்தையும் துன்பத்தையும் போக்கி மனத்திற்கு நல்ல அமைதியையும் ஆனந்தத்தையும் தருவதால் ஆத்மீகத் தொண்டைப் பெருக்குதல் வேண்டும்.

சிறுவயது தொடக்கம் பெண்களின் வாழ்வை மலரவைக்கப் பிரார்த்தனை பஜனை, சிவப்பணி முதலியவற்றைப் பெருக்கி வருவதும் செயற்கரிய செயலாகும். செயற்கரிய செயற்பாடுகள் என்பது யாராலும் செய்ய முடியாத செயற்பாடுகளைச் சாதனைப்படுத்துவது பூனை, நாய், போன்ற மிருகங்களைப் போன்று வாழ்ந்து பெரும் பொருளீட்ட முயல்வது. செயற்கரிய வாழ்வன்று. இறை வாழ்விற்காகவும் பிறர்நலத்திற்காகவும் தம் வாழ்வை அர்ப்பணித்து தியாக சீலத்துடன் வாழும் வாழ்வே செயற்கரிய வாழ்வு. அவர்கள் வாழ்வே பொன்னேட்டில் பொறிக்கப்பட வேண்டியது.

**திருமதி. ந. துரைசிங்கம்**
**ஆசிரியை (சைவசமயம்)**

**பெண்கள் எந்தக் குலத்திலே துன்பப்படுகிறார்களோ அந்தக் குலம் நசிக்கும். எந்தக் குலத்தில் மகிழ்ச்சியை அடைகிறார்களோ அந்தக் குலம் மேன்மை அடையும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளி மாணவர்களின் உள சமூக நலனை மேம்படுத்தல்



பிள்ளைகளின் உளசமூக சேமநலனை மேம்படுத்துவதற்கு கல்வி அமைச்சு, தேசிய கல்விநிறுவகம், இலங்கை யுனிசெப் ஆகியன அண்மைக்காலங்களில் இணைந்து பணியாற்றி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

பள்ளி மாணவர்களின் உணர்ச்சிகளை வெளிப்படுத்தல், வாழ்க்கைத்திறன்கள், விளையாட்டு, சகபாடிகளுடனான உறவுகள் என்பவற்றை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் மூலம் உள்ளார்ந்த சக்தியை விருத்தி செய்து அதனை கட்டி எழுப்புவதற்கான ஆலோசனைகள் அண்மைக்காலங்களில் ஆசிரியர்களுக்கு வடிவமைக்கப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு அவர்களுக்கு உதவும் வகையில் உளவியல் அறிவை ஊட்டக் கூடியதுமான ஆக்கச் செயற்பாடுகள் மூலம் பிள்ளைகளின் உள்ளார்ந்த சக்தியையும், சேமநலனையும் மேம்படுத்துவதற்கான ஆதரவை அவர்களுக்கு வழங்குவதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பிள்ளைகளின் ஒட்டுமொத்தமான விருத்திக்கு அவர்களின் தேவைகள் நிறைவேற்றப்படுவதும், அவர்கள் பாதுகாக்கப்படுவதும், அவர்களின் கல்வி மற்றும் கற்றலுக்கான வாய்ப்பு என்பன கிடைக்கப் பெறுவதும், தங்களை வெளிப்படுத்த வயதுக்குப் பொருத்தமான முறையில் விளையாட்டுகள், செயற்பாடுகள் என்பவற்றுடனான சமூகமயமாதலும் தேவைப்படுகின்றன.

ஆசிரியர்கள் பாடசாலைச் சூழலில் தமது நாளாந்த செயற்பாடுகள் மூலம் பிள்ளைகளின் விருத்தி, பாதுகாப்பு என்பவற்றுக்கு ஆதரவு வழங்கி பூரணத்துவம் நிறைந்த மனிதனாக்க முடியும்.

எல்லா வயதுப்பிள்ளைகளும் விளையாட்டு, மற்றும் செயற்பாடுகள் என்பவற்றினூடாக தங்களை தாங்களாகவே வெளிப்படுத்துகின்றனர். தங்களைப் பற்றி கற்றுக் கொள்ளுகின்றனர். மற்றும் அவர்கள் வாழும் உலகத்தைப்பற்றி கற்றுக் கொள்ளுகின்றனர். தாங்களாகவே மகிழ்ச்சியாக இருப்பதற்கு வேண்டிய வாய்ப்பைக் கொடுக்கின்றது. நம்பிக்கையை ஏற்படுத்தும் உறவுகள், உரித்துடைமை மற்றும் சமூக ஒன்றிணைவு போன்ற உணர்வுகளை விருத்தி செய்கின்றது. எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை புதுப்பிக்கின்றது.

ஒவ்வோர் பிள்ளையும் வித்தியாசமானவர் எனவே சகல பிள்ளைகளையும் ஒரே மாதிரியாக நடத்தாது, தனியாட்களின் தேவைகளுக்கு ஏற்ப பிரதி விளைவை காட்ட வேண்டிய தேவையுண்டு. மாணவர்களின் உளநலம் மேம்பட ஆசிரியர் சில வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும்.

உதாரணமாக மாணவர் செயற்பாடுகளின் போது சகல விடைகளையும், எந்தவித கருத்துக்களையும் கூறாது ஏற்றுக்கொள்ள வேண்டும். இது பிள்ளைகள் உண்மையில் என்ன சிந்திக்கின்றார்கள், எதனை உணருகிறார்கள் என்பதை வெளிப்படுத்துவதற்கு அனுமதித்தல் சம்பந்தமானது, பிள்ளைகளின் வயதுக்குப் பொருத்தமான விளையாட்டையோ அல்லது பயிற்சியில் ஈடுபடும் போது குழுவின் ஆக்கத் திறனையோ குறைத்து மதிப்பிடத் தேவையில்லை. பிள்ளைகளே தமது முன்னேற்றத்தை வகுத்துக் கொள்ளலாம். உ+ம் வரைதல், கைவேலை.

பிள்ளைகள் தமது சிந்தன்னகளையும் மற்றும் கருத்துக்களையும் வெளிப்படுத்துவதற்காக திறந்த வினாக்களை கேட்பதுடன், சகல விடைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக்கொள்ள வேண்டும். மாணவரிடம் சரியானவை, பிழையானவை என விடைகள் பற்றிய கருத்துக்களைக் கூறுவதற்கு முயற்சிக்கக்கூடாது.

விளையாட்டு எவ்வாறு விளையாடப்பட வேண்டுமென விளக்குவதிலும் பார்க்க அது எவ்வாறு விளையாடப்படுகிறதெனச் செய்து காட்டல் மூலம் பிள்ளைகளையே தொடர்ந்து விளையாட்டை மேற்கொள்ள அனுமதிக்க முடியும். விளையாட்டு எதற்காக விளையாடப்படுகிறதெனக் கூறாது, முடிவில் விளையாட்டு எதற்காக விளையாடப்பட்டது என்றும், அதிலிருந்து என்ன கற்றுக் கொள்ளப்பட்டது எனவும் குழுவை வினாவ வேண்டும்.

பிள்ளைகள் நன்கு தெரிந்து கொண்ட பிரதேசம் அல்லது கலாச்சாரத்திற்குச் சிறப்பான விளையாட்டுக்களுடன் ஆரம்பிக்கலாம். மாணவர்கள் தங்களுடைய மூச்சுவிடுதல் பற்றி விழிப்புணர்வு பெற ஆசிரியர் ஊக்குவிக்கலாம். பல ஆழமான, மந்தகதியில் மூச்சுவிடுமாறும், நான்கு எண்ணும் வரை மூச்சை உள்ளெடுத்து, நான்கு எண்ணும் வரை வெளிவிடுமாறும் கேட்டுக் கொள்ளலாம். வயிற்றின் அடிப்பகுதி வரை மூச்சை உள்ளெடுக்குமாறு, அவர்களை ஊக்குவிக்கலாம். ஆழமான, தளர்வான மூச்சுவிடுதலானது, மார்பு அல்லது தோள்பட்டைப் பகுதிகளைப் பார்க்கிலும் முக்கியமாக வயிற்றுப்பகுதி உயர்ந்து தாழ்வதற்குக் காரணமாயிருத்தல் வேண்டும் என உணர்த்தல் வேண்டும்.

பிள்ளைகள் தங்களை சுயாதீனமாக வெளிப்படுத்துவதற்கும், கதாபாத்திரங்களை ஏற்று நடிக்க வேண்டுமென்பதைத் தீர்மானிக்கவும், இடமளிக்கவும் ஆசிரியரின் வகிபங்கு ஆதரவு வழங்கலும், வழிகாட்டலுமாகும். இளம் பிள்ளைகளைப் பொறுத்த வரையில் தங்களது கருத்துக்களை வெளிப்படுத்தவும், காட்சி நிலைகள் மற்றும் வெளிப்பாடுகள் பற்றி கலந்துரையாடுவதற்கும் கூடுதலான நேரத்தை செல விடுதல் அவசியம் ஆகும். வயது கூடிய பிள்ளைகள் மற்றும் கட்டிளமைப்பருவத்தினர் தொடர்பான கலந்துரையாடலை சுருக்கமாக வைத்துக் கொண்டு தாங்கள் விரும்பிய வழிகளில் விருத்தி செய்வதற்கு அனுமதிக்கலாம். ஒவ்வோர் காட்சி நிலையை நடித்த பின்னரும் என்ன நடந்தது என்பது பற்றிய கலந்துரையாடலை ஆசிரியர் மேற்கொள்ளலாம். நாடகத்தில் பங்கு கொள்ளாத மாணவர்கள் இருவரை தெரிவு செய்து இவர்கள் எவ்வாறு நடித்தனர் என அவதானித்து கருத்துக் குறிப்புக்களைக் கூறி முன்னேற்றத்துக்கான ஆலோசனை வழங்க முடியும்.

சில மாணவர்கள் தனிமையாக இருக்க விரும்புவார்கள். அவ்வாறாயின் அம் மாணவர்களிடம் அப்பொழுது, எதனைச் சிந்திக்கிறார்கள் என வினாவி, உமது கருத்துக்களை கவிதைகளாக எழுதவும் எனக் கேட்கமுடியும். உணர்ச்சிகளை விபரிக்கும் பல சொற்களைக் கூறுமாறு மாணவர்களைக் கேட்கலாம். உ+ம் சந்தோசம், துக்கம், சோம்பல், களைப்பு, பயப்படல், விரக்தி போன்றன. மாணவர் களிடம் பல பலூன்களைக் கொடுத்து அவற்றை ஊதி அவற்றின் மீது பல்வேறு மனவெழுச்சிகளைக் காட்டும் முகங்களை வரையுமாறு கேட்கலாம். பின்னர் மாணவரிடம் இவ்மனவெழுச்சிகளை அனுபவித்த நேரம் இவ்வுணர்விற்கு காரணம் என்ன? என்பன கலந்துரை யாடலில் இடம்பெறலாம். நீங்கள் கோபிக்கும் போது யாரேனுமொருவருக்கு அடிப்பது சரியான செயலா? நீங்கள் வேறு எதனைச் செய்வீர்கள்? என எழுதுமாறு கேட்டுக்கொள்ளலாம்.

மாணவர்கள் சிலரை விரும்பலாம் இந்நிலையில் பெட்டியொன்றைக் கொண்டு வருமாறு கூறி, அதை அலங்கரிக்குமாறு முதலில் கூறவேண்டும். பின்னர் தற்போது மாணவர்களுடன் இல்லாத விசேட நபரை நினைக்குமாறும், அந்நபர் வேறு கிராமமாக இருக்கலாம் அல்லது வெளியிடமாக இருக்கலாம். அந்த நபரை ஞாபகப்படுத்தும் யாதேனுமொன்றை அப்பெட்டியினுள் வைக்குமாறு மாணவரிடம் கூறலாம். உதாரணமாக படம், விரும்பும் உணவு, நிறம் தொடர்பான பொருள், இறுதியாக அந்தக்குழுவில் உள்ள ஏனையவர்களுக்கு தங்களது ஞாபகார்த்த பெட்டி பற்றி கூற விரும்புகிறீர்களா? எனக் கேட்கலாம். (மாணவர்கள் விரும்பினால் மட்டும்) பின்னர் அப்பெட்டியை அவர்களையே எடுத்துச் செல்லுமாறு வலியுறுத்த வேண்டும்.

இறுதியாக தொகுத்து நோக்குகையில் மேற்கூறிய விடயங்களை பாடசாலை மட்டத்தில் நாம் மேற்கொள்ளுவோமாயின் மாணவர்களின் உள, சமூக வளர்ச்சி மற்றும் சாமர்த்தியம் மூலமாக அவர்கள் பெறக்கூடிய அனுகூலங்கள் ஏராளமாகும்.

மூலம் : உள, சமூக ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம்

**திருமதி. கமலாம்பிகை தேவமகேஸ்வரன்**
ஆசிரியை
(வழிகாட்டலும், ஆலோசனையும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகைநிலை, தொகாநிலைத் தொடர்கள்

சொற்கள் பொருள் உணர்த்த வல்லன. அவை தனித்து நின்றும், தொடர்ந்து நின்றும் பொருள் உணர்த்தும். ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து நின்று பொருளை உணர்த்துமேயானால் அதனை சொற்றொடர் என அழைப்போம். இச் சொற்றொடர் தொகைநிலைத் தொடர், தொகாநிலைத் தொடர் என இரண்டு வகைப்படும். வேற்றுமையுருபு முதலியன தொக்கு (மறைந்து) நிற்கச் சொற்கள் தொடர்வது தொகைநிலைத் தொடர் எனப்படும்.

பெயர்ச் சொல்லோடு பெயர்ச்சொல்லும், பெயர்ச் சொல்லோடு வினைச்சொல்லும் தொடர்ந்து வருகின்ற போது அவற்றின் இடையில் வேற்றுமை உருபுகள், உவமை உருபுகள், வினை உருபுகள், உம் எனும் இடைச்சொல் போன்றன மறைந்து வர சொற்றொடர் அமையுமேயானால் அதனை தொகைநிலைத்தொடர் என அழைப்பர். இது ஆறுவகைப்படும்.

1. **வேற்றுமைத் தொகை:** உருபினையுடைய இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரையான ஆறு வேற்றுமை உருபுகளும் மறைந்து வர சொற்கள் தொடர்ந்துவருவதே வேற்றுமைத் தொகை எனப்படும்.

உ+ம்

i. வீடு கட்டினான் - **இரண்டாம் வேற்றுமைத் தொகை**
ii. கைதொழுதேன் - **மூன்றாம் வேற்றுமைத் தொகை**
iii. இராமன் நண்பன் குகன் - **நான்காம் வேற்றுமைத் தொகை**
iv. இலங்கை வடக்கு இந்தியா - **ஐந்தாம் வேற்றுமைத் தொகை**
v. என் புத்தகம் - **ஆறாம் வேற்றுமைத் தொகை**
vi. குன்றக் குமரன் - **ஏழாம் வேற்றுமைத் தொகை**

மேலே கூறப்பட்ட வேற்றுமைகளின் உருபுகள் மறைந்து வருதலால் வேற்றுமைத் தொகையாக அமைகின்றது.

2. **வினைத் தொகை :** இரு சொற்களுக்கிடையில் காலங் காட்டும் இடைநிலை, பகுதி என்பன மறைந்து நிற்கவரும் பெயரெச்சங்களே வினைத் தொகை எனப்படும்.

**உதாரணம் : ஊறுகாய், கொல்யானை**

3. **பண்புத் தொகை :** பண்பை விளக்கும் ஆகிய, ஆன எனும் உருபுகள் மறைந்து வருதல் பண்புத் தொகையாகும்.

உதாரணம் : கருங்குதிரை (கருமை ஆகிய குதிரை)
வட்டப்பலகை (வட்டம் ஆன பலகை)
வன்சொல் (வன்மை ஆன சொல்)

4. **உவமைத் தொகை :** உவமைச் சொற்களின் இடையில் போல, போன்ற, அன்ன, அனைய போன்ற உருபுகள் மறைந்து வருவது உவமைத் தொகையாகும்.

உதாரணம் : மான்விழி - (மான் போன்ற விழி)
பவளவாய் - (பவளம் அனைய வாய்)

5. **உம்மைத் தொகை :** இருசொற்களின் இடையில் "உம்" என்னும் இடைச் சொல் மறைந்து வருவது உம்மைத்தொகை ஆகும்.

**உதாரணம் : சேரர் சோழர் பாண்டியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. **அன்மொழித் தொகை :** வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத் தொகை, உம்மைத்தொகை, எனும் ஐந்து தொகைகளுக்கும் புறத்தில், அவை அல்லாத வேறு உருபோ சொல்லோ மறைந்து நின்று பிறபொருளைப் புலப்படுத்தலே அன்மொழித் தொகை எனப்படும்.

உதாரணம் : கயல்விழி வந்தாள்.

கயல் போன்ற விழியை உடைய பெண் வந்தாள். கயல் போன்ற விழி என்னும் உவமைத் தொகையை சார்ந்து பிறந்ததனால் உவமைத்தொகை புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை எனப்படும்.

பெயர்ச் சொல்லுடன் பெயர்ச்சொல்லும், பெயர்ச் சொல்லுடன் வினைச்சொல்லும் தொடர்ந்து வரும் பொழுது அவற்றின் இடையே உருபுகளோ சொற்களோ தொக்கு (மறைந்து) நிற்காமல் வெளிப்படையாக தொடர்ந்து வருவதே தொகாநிலைத் தொடராகும். இது ஒன்பது வகைப்படும்.

i. எழுவாய்த் தொடர் :
உதாரணம் : கடம்பன் சிரித்தான்

ii. விளித் தொடர் :
உதாரணம் : கண்ணா வா

iii. பெயரெச்சத் தொடர் :
உதாரணம் : அழுதபிள்ளை

iv. வினையெச்சத் தொடர் :
உதாரணம் : வந்து போனான்


v. வினைமுற்றுத் தொடர் :
உதாரணம் : கண்டான் அனுமான்

vi. வேற்றுமைத் தொடர் :

| | | |
|---|---|---|
| உதாரணம் | காட்டை அழித்தான் - | இரண்டாம் வேற்றுமை |
| | ஓலையால் வேய்ந்தான் - | மூன்றாம் வேற்றுமை |
| | ஏழைக்கு கொடுத்தேன் | நான்காம் வேற்றுமை |
| | ஊரில் நின்று நீங்கினான்- | ஐந்தாம் வேற்றுமை |
| | வேந்தனது வீடு - | ஆறாம் வேற்றுமை |
| | மேசை மேல் உள்ளது - | ஏழாம் வேற்றுமை |

vii. இடைச் சொற்றொடர் :
உதாரணம் : மற்றொன்று, இனிவருவேன்

viii. உரிச்சொற்றொடர் :
உதாரணம் : சாலச்சிறந்தது
உறுமீன்



ix. அடுக்குச் சொற்றொடர் :
உதாரணம் : பாம்பு பாம்பு
நன்று நன்று

மேலே குறிப்பிட்ட ஒன்பது சொற்றொடர்கள் தவிர இன்னும் பல மரபுச் சொற்றொடர்கள் தமிழில் வழங்கப்பட்டு வருகின்றன.

திருமதி. அனந்தரூபி. ஆனந்தராஜா
ஆசிரியை (தமிழ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய் நீக்கும் மூலிகைகள்

ஆரோக்கியமற்ற ஒரு சமுதாயத்தால் ஒரு புதிய சமுதாயத்தை படைத்திட முடியாது. இன்றைய நெருக்கடி மிக்க சூழ்நிலையில் மேலும் பல்வேறு துன்பங்கள், துயரங்கள் எம்மை நோக்கி வரலாம். இவை எல்லாவற்றுக்கும் ஈடுகொடுத்து எமது சொந்தக் காலில் நின்று பிடித்து நாளை ஓர் ஆரோக்கியமான சமுாயத்தை நாம் உருவாக்கிடவேண்டும்

பசியும் நோயும் தாக்கும் வேளை நின்று பிடித்தல் பெரும் போராட்டமாகும். இந்தப் போராட்டத்தில் கைகொடுக்கும் 'ராக்கெட்டுக்கள்' மூலிகைகள். இவை உணவாகவும் மருந்தாகவும் எம்மைக் காக்கும். எனவே மூலிகைகளின் பயன்களை அறிந்து கொள்வது தற்காப்பு முறையினைத் தெரிந்து கொள்வதாகும்.

## துளசி :

துளசியை புனிதமான முறையில் மக்கள் போற்றுகின்றனர் வீடுகளில் மட்டுமன்றி ஆலயங்களிலும் இச்செடியைப் பயன்படுத்துகின்றனர். துளசிக்கு நோய் தீர்க்கும் சக்தி அதிகம். இது விஷக்கிருமியைப் போக்கும் துளசியில் படிந்து வரும் சுத்தக் காற்று ஆரோக்கியத்தையும் தீர்க்காயுளையும் கொடுக்குமென மக்கள் நம்புகின்றனர். துளசியில் கருந்துளசியின் இலைகளும், காம்பும் கருமை கூடியதாயிருக்கும். இலட்சுமித்துளசி பசுமையாக இருக்கும்.

துளசியின் காற்றைச் சுவாசிப்பதால் சளி, இருமல் போன்ற சீதள நோய்கள் நீங்கும், பச்சிளம் குழந்தைகளுக்கு கஸ்தூரி மாத்திரை கொடுக்கும் போது துளசிச்சாற்றில் கலந்து கொடுப்பது வழக்கம், துளசி சாற்றினைச் சிறிது சூடுகாட்டி தேன் கலந்து கொடுத்தால் இருமல் சளி தொண்டைக்கரகரப்பு போன்ற நோய்கள் குணமாகும். துளசிச்சாறு சுரத்தின் கடுமையைத் தணிக்கும் துளசிச்சாற்றையும், ஆடாதோடை இலைச்சாற்றையும் கலந்து இரண்டு, மூன்று வேளை உட்கொண்டால் சலதோஷம் நீங்கும்.

## அகத்தி :

**வேறு பெயர் :-** அகத்தியம், அச்சம், நுளி, முனிவிருட்சம், வக்ரபுஷ்பம்

வான்த்தில் அகத்திய முனிவரின் நட்சத்திரம் தோன்றுகின்ற காலகட்டத்தில் அகத்திமரம் பூக்கத் தொடங்குவதால் இதற்கு அகத்தியம் என்றும் முனிவிருட்சம் என்றும் வடமொழியாளர் பெயரிட்டழைக்கின்றனர். இதன் பூவானது வளைந்து வக்கரித்து அரிவாள் போன்று காணப்படுவதால் வக்ரபுஷ்பம் என்னும் பெயரும் வழங்கப்படுகின்றது.

**இதன் குணம்:-** கொழுப்பைக் குறைக்கும், மலம் இளக்கும் நாக்குப் பூச்சியைக் கொல்லும், சூட்டைத்தணிக்கும் தேக ஊறலை நீக்கும், வாய் நாற்றத்தைப் போக்கும், வாய்ப்புண்ணை நீக்கும், சொறி, சிரங்கு அரிப்பு முதலிய தோல் நோய்களைக் குணமாக்கும், நரம்புகளை வலுவடையச் செய்யும், கண்பார்வை மிகும், இளமையுண்டாகும், பெண்களுக்கு சூதகவலியை நீக்கும்.

## கற்பூரவல்லி :

குழந்தைகளுக்கு ஏற்படும் செங்கிரந்திக்கு கற்பூரவல்லி இலையைப் பிழிந்து சாறு எடுத்து அதில் குன்றிமணி இலைச்சாறு, வெங்காயச் சாறு ஆகியவற்றைச் சேர்த்துக் கலக்கி காலை, மாலை கொடுத்து வர நோய் குணமாகும். கசம் இருமல், கபம், வாதம் போன்ற நோய்களுக்கும் கற்பூரவல்லி மருந்தாகப் பயன்படுகிறது.

## அரைக்கிரை

**வேறு பெயர் :-** அறுகீரை, அரக்கிரை, கிள்ளுக்கீரை

**இதன் குணம் :-** பித்தசுரம் போக்கும், குளிர்காய்ச்சலைக் குணமாக்கும், உடல் வலிகளை நீக்கும், சலதோஷம் சன்னி, வாதசுரம் சளி, இருமல் ஆகியனவற்றைக் குணமாக்கும் உடலுக்கு வலுவூட்டும், நரம்புத் தளர்ச்சியைப் போக்கும் மண்டைப் பீனசத்தை நீக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூவரசன்

பூவரச மரத்தின் இலை, பூ, காய், பட்டை அனைத்துமே மருத்துவப் பயன்பாட்டுக்குரியன. இதன் பூவை அரைத்து சிரங்கு நோய்க்குப் பூசிவர குணமாகும். பூவரச மரத்தின் இலைகளை காயவைத்து அதனை நெருப்பிலிட்டு சாம்பலாக்கித் தூள் செய்து தேங்காய் எண்ணெய்யில் கலந்து சொறி, சிரங்குகளுக்கு பூச்சாக பூசி வந்தால் நோய் குண்மாகும். உடலில் காணப்படும் வீக்கங்களுக்கு பூவரச இலையை அரைத்து வேகவைத்து களிபோல கிண்டி தினசரி காலை, மாலை, பூசிவர வீக்கம் குறையும்.

## முருங்கை

**வேறு பெயர் : சிக்குரு, கிரஞ்சனம், கிளவி, சோபாஞ்சனம், பிரம்மவிருட்ஷம்**

முருங்கை மரம் இலை முதல் அடிவேர் வரை சிறந்த உணவுப் பொருளாகவும், மருந்துப் பொருளாகவும் பயன்படுகிறது. இதில் உயிர்ச்சத்துக்களும், சுண்ணாம்புச் சத்துக்களும், இரும்புச்சத்துக்களும் நிறைந்திருக்கின்றன.

**இதன் குணம்** :- உடலுக்கு வெப்பத்தை கொடுக்கும் கண்ணெரிச்சலை நீக்கும், தாதுக்கள் பலப்படும், கை, காலசதி போக்கும், எலும்புகளை உறுதியாக்கும், மலக்கட்டை ஒழிக்கும்.

## தூதுவளை

**வேறு பெயர்** :- தூதுளை, தூதுணம், அலர்க்கம், சுங்கவல்லி.

**இதன் குணம்** :- பசியை உண்டாக்கும், வாய்வைக் கண்டிக்கும் உடலுக்கு வலிமையூட்டும், காதுமந்தம் போக்கும் ஆஸ்துமாவைத் தணிக்கும், அறிவு வளர்ச்சியைப் பெருக்கும், கபக்கட்டுவிலகும், காசம் போக்கும், சீரணத்தை ஒழுங்காக்கும், மாதவிலக்கை ஒழுங்காக்கும், மலச்சிக்கலை நீக்கும்.

## பப்பாசி

உயிர்ச்சத்துக்கள் நிறைந்தவை. இலை மருந்தாகப் பயன்படுகிறது. சிலரது தேகத்தில் ஒரு வகைப்படை தோன்றும் இது வரவரப்படர ஆரம்பிக்கும். சில வேளைகளில் உடல் முழுதும் படரக்கூடும். இதற்கு பப்பாசி இலையைத் தட்டிச் சாறுபிழிந்து படர்தாமரை மேல் பூசிவிட்டு பின்னர் கழுவிவிடலாம். தினசரி காலை, மாலை, ஏழு நாட்கள் இவ்வாறு செய்து வர நோய் குணமாகும்.

## ஆடாதோடை

**வேறு பெயர்** :- ஆட்டுசம், வைத்தியமாதா, வாசாதி, வாசை ஆடாதோடை, சிங்கம், நெடும்பா

கசநோயினாலும், கபத்தினாலும் அவதியுறுவோருக்கு இலையைச் சுத்தம் செய்து பொடி பொடியாக நறுக்கி கைப்பிடியளவு எடுத்து நீர்விட்டுச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி காலை, மாலை தேன் சேர்த்து குடித்து வந்தால் கசரோகம் படிப்படியாகக் குணமடையும்.

**இதன் குணம்** :- பூச்சியைக் கொல்லும், சிறுநீர் பெருக்கும், கபத்தை வெளியேற்றும், மூச்சுத் திணறலை நீக்கும் ஆஸ்துமாவைக் குணமாக்கும், கண்வலி போக்கும் வாய்வுக் கோளாறுகளை நீக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்னாங்காணி

**வேறு பெயர் :-** பொன்னாங்கண்ணி, சீதை
இது கற்பக மூலிகையென மருத்துவர்களால் கருதப்படுகிறது.

**இதன் குணம் :-** கண் நோய்களைப் போக்கும் வாததோஷம் நீக்கும், மூல நோயைக் குணமாக்கும், உடற்சூட்டைத்தணிக்கும், உடலைப் பொன்னிறமாக்கும். பொன்னாங்காணிக் கீரையை தினந்தோறும் சாப்பிட்டால் வாய் நாற்றம், வாய்ப்புண் போன்றவை நீங்குவதோடு ஈரல்நோய், மூல ரோகம், கைகால் எரிச்சல், வெள்ளைபடுதல், வயிற்றெரிச்சல் போன்றனவும் குணமாகும்.

## நொச்சி இலை

இதன் இலை மாவிலை போன்ற வடிவமுடையது. இதில் இருவகையுண்டு ஒன்று வெண்ணொச்சி மற்றையது கருநொச்சி.

முக்கியமான மருந்துத் தயாரிப்புக்கு **கருநொச்சியே** பயன்படுகிறது. கருநொச்சியின் குணம் வாதக்கடுப்பு, பீனிசம், தலைவலி, மண்டைக் குடைச்சல் ஆகியவற்றைப் போக்கும். **வெண்நொச்சியிலை** வாதம், நாசிப்பிணி, அழற்சி, கசம் போன்றவற்றைப் போக்கும்.

## ஆடு தீண்டாப் பாளை

**வேறு பெயர் :-** ஆடு தீண்னாப்பாளை, பங்கம் பாளை, மறியுண்ணாமூலி, ஆடு தொடாப்பாளை, ஆவேகி.

ஆடுகள் எத்தகைய பச்சிலைகளையும் தின்று வாழ்பவை. ஆனால் அவை இந்த மூலிகையை முகர்ந்து கூடப் பார்ப்பதில்லை. இதன் பெயரே இதனை விளக்குகிறது. ஆடுதீண்டாப்பாளை தரையோடு கொடியாகப் படர்ந்து வளரும் கொடி இனத்தைச் சேர்ந்தது. இதன் இலைகள் சாம்பல் பூத்த கரும்பச்சை நிறத்துடனும் சுருக்கத்துடனும் வளைவாக இருக்கும். இதன் பூக்கள் கருநீல நிறமுடையன. இதை உணவாகப் புசிப்பதில்லை ஏனெனில் இதைத் தின்றவுடன் குமட்டல் ஏற்படும் எனவே இதனை மருந்தாகப் பயன்படுத்துகின்றனர். இதன் இலை, பூ பட்டை, வேர், ஆகிய அனைத்துமே மருந்துகள் செய்வதற்குப் பயன்படும்.

**இதன் குணம் :-** குடற்புழுக்களைக் கொல்லும், வாத நோய்களைக் குணமாக்கும், சரும நோய்களை நீக்கும், கணைச்சூடு நீக்கும், சூதகத்தடை போக்கும், பாம்புக்கடி, பூச்சிக்கடி விஷங்களை நீக்கும்.

## கரிசலாங் கண்ணி

**வேறு பெயர் : கையார்ந்த கீரை, கரிக்கண்டு, பொற்றிழைக் கரிப்பான், மஞ்சள் பாவை, கையாந்தகரை.** இதில் நான்கு வகையுண்டு நீலம், சிவப்பு, மஞ்சள், வெள்ளை நிறங்களில் பூக்கும்.

**இதன் குணம் :-** கண் நோய்கள் நீங்கும், தோல் வியாதிகளைப் போக்கும், உடலுக்கு உரம் ஊட்டும், இருமல் நீக்கும் காதுவலி போக்கும், மூலவியாதி தீரும், மலச்சிக்கலைப் போக்கும், மஞ்சட்காமாலை மாற்றும்.

இதன் இலையையும், தண்டையும் கொண்டு பல் துலக்கினால் பல்லில் ஏற்படும் முரசு வீக்கம், பல்வலி போன்றவற்றை இது குணப்படுத்தும். இதன் இலையை வேகவைத்து ஆவிபிடிக்க மூலவியாதி குணமடையும். இக்கீரைச் சாற்றிலிருந்து கண்மை தயாரிக்கப்படுகிறது. காது வலிக்கும் இதன் சாறு சிறந்த மருந்தாகும்.

**ஆக்கம் - M. மகாலெட்சுமி**
**விஞ்ஞான ஆசிரியை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய் தீர்க்கும் தாவரங்களின் தாவரவியல் பெயர்கள்

| தாவரப் பெயர் | தாவரவியல் பெயர் | குடும்பம் |
|---|---|---|
| 1. அகத்தி | Sesleania Grandiflora Pew | Papili Onaceae |
| 2. ஆகாயத்தாமரை | Ficus Glomerata Roxb | Moraceae |
| 3. அறுகம் புல் | Cynodon Dactylon Pers | Eramineae |
| 4. ஆடாதோடை | Adhatoda Vasica Nees | Acantha Ceae |
| 5. ஆடையொட்டி | Pupalia Orbi Culatawt | Amaranta Ceae |
| 6. ஆமணக்கு | Riccinus Communis Linn | Euphorbia Ceae |
| 7. இஞ்சி | Zingibees Offiuinales Zofa | Zingiberaceae |
| 8. இலந்தை | Zizyphus Juiub Lamk | Rhamna Ceae |
| 9. இலுப்பை | Bassia Longifolia Linn | Sapota Ceae |
| 10. உருளைக்கிழங்கு | Solanam Tuberosum Linn | Solana Ceae |
| 11. உழுந்து | Phase Olus Radiatus Linn | Papiliona Ceae |
| 12. எலுமிச்சை | Citrus Acidia Roxb | Ruta Ceae |
| 13. கண்டங்கத்தரி | Solanum Xanthocar Pumschrod | Solana Ceae |
| 14. கற்பூரவள்ளி | Anisochlius Carnosus Wall | Labia Tae |
| 15. கள்ளி | Euphorbia Tirucalli Linn | Euphorbia Ceae |
| 16. கொடிக்கள்ளி | Sarcostemms Brevistigmawea | Asclepiaola Ceae |
| 17. கற்றாளை | Alocvera Linn | Lilia Ceae |
| 18. சிறுகுறிஞ்சா | Cymnema Sylevestre Br | Asclepic Daceae |
| 19. கொத்தமல்லி | Coriandrum Sativam Linn | Umbelli Ferae |
| 20. கொய்யா | Pisidiam Guaiuva Linn | Mytiba Ceae |
| 21. சூரியகாந்தி | Heli Anthes Annuus Linn | Campositae |
| 22. செவ்வரத்தை | Hebi Scusrosa Sinensis Linn | Malva Ceae |
| 23. துளசி | Ocimaum Sanctum Linn | Labiatae |
| 24. தென்னை | Cocos Nucifere Linn | Palmae |
| 25. நர்கதாளி | Opuntia Dillinji Hawv | Cacta Ceae |
| 26. பிரண்டை | Ciss us Quadrangularis Wall | Ampelida Ccae |
| 27. மாதுளை | Punica Granaturn Linn | Panica Ceae |

தொகுத்தவர் :- திருமதி. வசந்தி சத்தியபாலன்
ஆசிரியை (விஞ்ஞானம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்கியல் எண்ணக்கருக்கள் / கோட்பாடுகள்

# Accounting concepts

## I தொழில் முழுமைக் கூற்று எண்ணக்கரு

### The Busines Entity Concept

கணக்கியலில் எல்லா நிறுவனங்களும் அதன் உரிமையாளர்களிலிருந்து வேறுபட்ட கூறுகளாக அல்லது தனி நிறுவனங்களாகக் கருதப்பட்டு கணக்குகள் பராமரிக்கப்படுகின்றன. எனவே உரிமையாளர்களுக்கு மூலதனக் கணக்குகள் பராமரிக்கப்படுவதுடன், அவர்கள் பற்றிக் கொள்ளும் பொருட்களுக்கும், பணத்திற்கும் பற்றுக் கணக்குகள் பராமரிக்கப்படுகின்றன. அதாவது எந்த வியாபார அமைப்பாயினும் **நிறுவனம் வேறு அதன் உரிமையாளர் வேறு** என்றே கணக்கியலில் கருதப்படும்.

## II பணம் ஒரு பொதுத் தொகுதிக் கூற்று எண்ணக்கரு

### Money as Common Denominator concept

கணக்கியலில் தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்கள் பணத்தின் அளவினிலேயே குறிப்பிடப்படுகின்றன. **பணத்தால் அளவிட முடியாத எதனையும் கணக்கியலில் குறிப்பிட முடியாது** என்பதையே இவ் எண்ணக்கரு வலியுறுத்துகிறது. இலாபநட்டக் கணக்கின் விபரங்களாயினும் ஐந்தொகையிலுள்ள விபரங்களாயினும் பண அளவை வைத்தே விபரிக்கப்படுகின்றன.

## III பணத்தின் உறுதித் தன்மை எண்ணக்கரு:

### Currency Stability Concept

கணக்கியலில் **பணத்தின் உறுதித்தன்மை என்றும் மாறாது என்னும் கருதுகோளின் அடிப்படையிலேயே கணக்குகள் பராமரிக்கப்படும்** ஆனால் பணவீக்கத்தினாலும், பணச் சுருக்கத்தினாலும் பணத்தின் கொள்வனவு வலு மாறுபடும் ஆயினும் இப் பெறுமதிக்குறைவு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

## IV தொடர்ந்து செல்லும் நிறுவன எண்ணக்கரு

### Going Concern Concept

கணக்கியலில் **ஒரு வியாபாரம் தொடர்ந்து நிச்சயமற்ற கால எல்லைக்குச் செயற்படும்** எனும் கருதுகோளின் அடிப்படையிலேயே அந் நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன. இவ் எண்ணக்கருவின் அடிப்படையிலே ஐந்தொகையில் நிலையான சொத்துக்கள் கொள்விலை, திரண்ட தேய்மானம், தேறிய பெறுமதி என வகைப்படுத்தி நீண்டகாலத் தகவல்கள் வழங்கப்படுகின்றன. கணக்குகளின் நிலுவைகள் முன்கொண்டு செல்லப்படுவதற்கும் இவ்வெண்ணக்கருவே காரணமாய் அமைகின்றது.

## V இயைவு எண்ணக்கரு / வருமானங்களை செலவுகளோடு ஒத்துப் பார்த்தல் எண்ணக்கரு

### The Matching of Incom With Expenditure Concept

ஒரு நிதியாண்டிற்கான இலாப நட்டத்தினைக் கணிக்கும் போது அந்த **ஆண்டிற்கான விற்பனை போன்ற வருமானங்கள் அவ் ஆண்டில் ஏற்பட்ட செலவுகளோடு ஒத்துப் பார்த்தே இலாப நட்டம் கணிக்கப்பட வேண்டும்** என்பதை இவ்வெண்ணக்கரு வெளிப்படுத்துகிறது. இவ்வெண்ணக்கருவை ஆதாரமாகக் கொண்டு வியாபாரக் கணக்கின் மொத்த லாபம் அல்லது நட்டம் கணிக்கப்படுகிறது. (விற்பனையையும் விற்பனைக் கிரயத்தையும் ஒப்பிட்டுக் கணிக்கப்படும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VI இரட்டை விளைவுக் கோட்பாடு

### Dual Aspect Concept

இது கணக்கியலின் முக்கிய கோட்பாடாகும். வியாபாரக் **கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும் இரு விளைவுகளை ஏற்படுத்துகின்றன.** ஒருவிளைவு சொத்து மற்றைய விளைவு அச் சொத்திற்கு எதிரான உரிமையாகும். என்பதை வெளிப்படுத்துகிறது.

## VII தேறல் எண்ணக்கரு / கைக்கெட்டிய எண்ணக் கருதுகோள்

### Realisation Concept

**கணக்கியலில் ஒரு நடவடிக்கை நடந்ததும் வருமானம் ஈட்டியதாகக் கருதப்படுகின்றது** நிறுவனம் ஒன்றின் பொருளாயின் அது விற்கப்பட்ட நாளிலும் சேவையொன்றாயின் அது வழங்கப்பட்ட நாளிலும் வருமானம் தேறி உள்ளதாகக் கருதி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்க இவ்வெண்ணக்கரு ஆதாரமாகக் கொள்ளப்படுகிறது.

## VIII அட்டுறுக் கோட்பாடு / சேர்தல் கோட்பாடு

### Accrual Concept

நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதன் மூலம் **செம்மையானதும் நியாயமானதுமான செயற்பாட்டுப் பெறுபேற்றைக் கணிப்பதற்கு இவ்வெண்ணக்கரு ஆதாரமாகக் கொள்ளப்படுகிறது.** பணமாகச் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படாத அனைத்துச் செலவினங்களும் செலவீடுகள் எனக் கருதி இலாபநட்டக் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும். அதேபோன்று பணமாகப்பெறப்பட்ட அல்லது பெறப்படாத குறித்த காலத்திற்குரிய (நிதியாண்டு) அனைத்து வருமானங்களும், இலாப நட்டக் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டும் எனக்குறிப்பிடப்படுகிறது.


## IX கிரயக் கோட்பாடு

### Cost Concept

இக் கோட்பாட்டின் படி ஒரு **வியாபாரத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் கொள்விலையிலேயே பதியப்படும்.**

உ+ம் ஒரு சொத்தின் கொள்வனவுப் பெறுமதி ரூ.1500/= அதன் உண்மைப் பெறுமதி ரூ.3000/= எனின் புத்தகத்தில் அதன் கொள்விலைப் பெறுமதியான 1500/= வில் தான் பதியப்பட வேண்டும்.

**செல்வி. ஜெயந்தி ஐயாத்துரை**
**ஆசிரியை (வர்த்தகம்)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அபிவிருத்திச் சங்கம் - 2007



இடமிருந்து வலம் :-

01. திருமதி. க. தேவமகேஸ்வரன் (பொருளாளர்)
02. திரு. வி. உதயகுமார்
03. திரு. ப. குகதாஸ்
04. திரு. சு. நடராஜலிங்கம் (தலைவர்)
05. திருமதி. ச. பரமநாயகம் (செயலாளர்)
06. திருமதி. ந. ஜெகதீஸ்வரன்
07. திருமதி. ச. தங்கவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மலரை வாழ்க வாழ்கவென
வாழ்த்துகின்றோம்



# புதிய அம்பாள் நகைமாடம்

# New Ambal Nagi Maadam

தங்கப்பவுண் நகை வியாபாரம்

கிளை
Main Street,
Chankanai.

T.P : 0776141061

191, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



இம் மலரை வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்

கல்யாணப் புடவைகளின் கைராசி
நிறுவனம்

# ராசி சில்க்ஸ்



70, 71A, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 2225571



# RASI SILKS

Specialist in Wedding Sarees, Shalwar Kameez
& Ladies, Gents & Children Wear.

70, 71A, Modern Market, Jaffna. Tel : 021 2225571



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்!

சீமாட்டி புடவைக்கடல்



அனைத்துப் புடவைகளின் மொத்த சில்லறை வியாபாரிகள்

**SEEMATI**

Dealers in Textiles & Fancy Goods

No. 122, Power House Road, Jaffna.

Tel : 021 2222196, Fax : 021 2222102

Branch: Mangal Silks, Modem Market.

No. 15, Power House Road, Jaffna.

இம் மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்!

பெஷன் ஹவுஸ்

**FASHION HOUSE**

T.P: 021 222 3034, 021 222 2197

No. 203,(65), K.K.S. Road, Jaffna.

**ROLEX**

PRODUCT

*ROLES BAKE MART*

118, Kasthurar Road, Jaffna.

**KANESAN STORES**


WHOLESALE &

RETAIL DEALERS

TEXTILES

SPECIALIST IN

WEDDING SAREES.



201, K.K.S.Road, Jaffna, Sri Lanka.

Tel No : 021 2830

இம் மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்!

**ஜி.என். லிங்கநாதன்**

&co புடைவை மாளிகை



பெரியகடை வீதி,

யாழ்ப்பாணம்.

இம் மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்!

செந்தூம் பாமசி

456, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

இம் மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்!

**ஸ்ரீலங்கா புத்தக நிலையம்**



K.K.S. Road, Jaffna.

இம் மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்!



**NEW CITE BOY TAILORS**

நியூ சிற்றி போய் ரெயிலேர்ஸ்

NCBT

181, SivanPannai Road, Jaffna.

*Proprieror : Thayalan*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இசைக் கருவி உருவாக்கமும் அதன் பயன்பாடும்

இசைக் கருவியில் நாதத்தை உண்டாக்கி அதில் இசையை வளப்படுத்தி வெளிப்படுத்துவதே இசைக் கருவியாகும். இக் கருவிகளை ஆக்குவதற்கு மரங்கள், தோல்கள், உலோக வகைகள், தந்தம், கொம்பு, மண் போன்றன பயன்படுத்தப்படுகின்றன. இசைக்கருவிகளை உருவாக்கும் மரங்கள் இறைவனது ஆலயச் சூழலில் வளர்ந்தவை சிறப்பானது என்பர். இதற்குப் பயன்படும் மரங்கள் பலா, கருங்காலி, சந்தனமரம், வேம்பு, மூங்கில், பிரம்பு, சுரக்காய்புலி, சில்வர் நாக, பைன், மேப்பிள், சிரகமோர், சிடர், ஸ்பரூஸ், பிரேசில், ஸ்நேச், பிச் என்பவையாகும்.

**இசையும் தமிழும் ஒன்றிணைந்தவை**

**"பண்ணும் பதமேழும் பலவோசைத் தமிழவையும்"**
**"இசைமலி தமிழ்.....** என்று சம்பந்தரும்,
**"தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்...."** என்று நாவுக்கரசரும்,
**"நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பு"**
**"ஏழிசையில் தமிழால் இசைந் தேத்திய பக்திமையும்"**
என்று சுந்தரரும் பாடியுள்ளனர்.



இசைக்கருவியில் நெளிவு சுளிவுகளைப் பயன்படுத்தி இசையில் கமகங்கள், கால்சுரங்கள் மூலம் சொருபத்தையும், தனித்தன்மையையும் வெளிப்படுத்த தோற் கருவிகளுக்கு ஆட்டுத்தோல், எருமைத்தோல், மாட்டுத்தோல், கன்றின்தோல், மான்தோல், உடும்புத் தோல், எனப் பலவகைகளைப் பயன்படுத்த முடியும். கனவாத்தியங்களுக்கு செம்பு, வெள்ளி, பித்தளை போன்ற உலோகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மிருதங்க வாத்தியத்திற்கென மகனீசியம், தாமிரம், இரும்பு போன்றவையும் பயன்படுத்தப்படுகின்றன.

அழகு வேலைப்பாடுகளுக்கு தந்தம், மான்கொம்பு, உலோகக் கம்பிகளும், கடத்திற்கு மண்ணும், வயலின் வில்லுக்கு குதிரைவால் உலோகமும் பயன்படுத்தப்படு கின்றன.

கி.பி. 2ம் நூற்றாண்டில் சிலப்பதிகாரப் பாடலில் பாடல்களோடு வேய்குழல், தன்னுமை, யாழ் போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டதை அறிவோம். கோயில்களில் மாந்திரமன்றி இசைக் கருவிகளைப் போர்க் காலங்களிலும் பயன்படுத்தினர். பாசறைகளில் முரசு, சங்கு, கொம்பு போன்ற வாத்தியங்கள் பயன்படுத்தப்பட்டன.

**தெய்வீக அம்சங்களும் இசைக்கருவிகளும்**

இறைவன் கையில் உடுக்கை அசைத்து தம்து தாண்டவத்துக்கு பயன்படுத்துகிறார். விஸ்ணு கையில் சங்கையும், சரஸ்வதி வீணையையும், நாரதர் தம்புராவையும் இசைத்துக் கானமழை பொழிகின்றனர். தமிழர்கள் இசைக் கருவிகளை நான்காக வகுப்பர். அவையாவன, தோல், துளை, நரம்பு, கஞ்சம் என்பவையாகும். கர்நாடக இசையில் ஊதுவாத்தியங்களில் சங்கு, மகுடி, புல்லாங்குழல் நாதஸ்வரம் என்பவை அடங்குகின்றன.

**திருமதி. உ தயந்தி கனகராஜா**
**ஆசிரியை (இசைக் கலைமாமணி )**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# School Curriculum context in Teaching English as a second Language

School Curriculum Unit plays the vital role in designing the curriculum to suit the needs of the younger generation. In designing the syllabus following factors are considered for joyful learning atmosphere in the classroom.

## 1.0 Introduction

In designing this syllabus the following factors have been considered.

1. **Curriculum Content**
   (a) A balanced view in the selection of content with both local and global relevance. A thematic approach is adopted to bring about this relevance.
   (b) No particular language teaching approach is recommended. There is instead a variety of classroom techniques and procedures which have evolved over the years and which could be effectively used to achieve the syllabus objectives.
   (c) Maintaining a balance between the knowledge of language structures and the use of communicative expressions. The importance of both **form** and **meaning** is emphasized through themes.
   (d) Providing learning material which promotes thinking, interpretation and discussion.
   (e) Integration with other subject areas relevant to the themes.
   (f) Providing extra reading material which further develops students' knowledge and understanding of the text materials.

2. **Pedagogical Action**
   The extent to which the objectives of the syllabus are realized in the classroom depends on a large range of contextual factors such as:
   (a) Classroom context
   The immediate classroom context will have a powerful effect on what teachers and learners do and how they do it. Some of these factors affect the nature and quality of what goes in the classroom. These will include personality, attitudes and skills of the teacher and students, how they relate to one another, the class size and the physical conditions.
   (b) Social context
   This includes the resource allocation, timetabling, organization of subject related activities, subject teacher interactions, parental interests etc.
   (c) Teacher quality
   The teacher quality in both rural and urban sectors is considered. The textbook provides additional support to improve teachers' knowledge of language structures organized in each lesson. The Teacher's Guide and the Workbook provide further support.

3. **National Goals and Basic Competencies**
   The aims and objectives stated in the syllabus are in accordance with the National Goals and Basic Competencies set out in the sessional paper v 1992 of the National Education Commission.
   Not all these educational expectations can be achieved through mere classroom teaching. It is essential that suitable co- curricular activities be organized in the school to complement classroom learning. It is also essential that a suitable variety of strategies, capable of accommodating the whole range of learning objectives be employed to assess learning.
   Hence this syllabus document also includes sections entitled 'TeachingStrategies', 'School Policy and Programmes', 'Assessment' and ' Suggested number of Periods of Teaching.' in addition to the Syllabus proper.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Basic Competencies

**a. Competencies in Communication**

This first set of competencies is made up of three subjects. Literacy, Numeracy and Graphics. Literacy includes: Listen attentively, Speak clearly, Read for meaning and Write accurately and lucidly.

Numeracy includes: Use numbers for Things, Space and Time, Count, Calculate and Measure systematically.

Graphics includes: Make sense of line and form, express and record details, Instructions and ideas with line, form and colour.

**b. Competencies relating to the Environment**

This set of competencies relates to the Environments- Social, Biological and Physical Environments.

Social Environment: Awareness, sensitivity and skills linked to being a member of society, social relationships, personal conduct, general and legal conventions, rights , responsibilities, duties and obligations

Biological Environment: Awareness, sensitivity and skills linked to the Living World, Man and the Ecosystem, the Trees, Forests, Seas, Water, Air and Life, Plant, Animal and Human Life.

Physical Environment: Awareness, sensitivity and skills relating to Space, Energy, Fuels, Matter, Materials and their links with Human Living, Food, Clothing, Shelter, Health, Comfort, Respiration, Sleep, Relaxation, Rest, Waste and Excretion.

Included here are the skills in using tools to shape and form materials for living and learning.

**c. Competencies relating to ethics and religion**

This third set of competencies is laden with values and attitudes. It is essential for individuals to assimilate values, so that they may function in a manner consistent with the , ethical, moral and religious modes of conduct, rituals, practices in everyday living, selecting that which is most appropriate.

**d. Competencies in play and use of leisure**

This fourth set of competencies links up with pleasure, joy and such human motivations. These find expressions in play, sports, athletics and leisure pursuits of many types. These are essential for realising mental and physical well being. These also link up with such values as cooperation, team work, healthy competition in life and work. Here are included such activities as are involved in aesthetics, arts. drama, literature, exploratory research and other creative modes in human living.

**e. Competencies relating to learn to learn**

This fifth set of competencies flows directly from the nature of a rapidly changing, complex and crowded world. Whatever one learns, that learning will need updating and review. This requires that one should be aware of, sensitive and skilful in sustained attention and be willing to persevere and attend to details that matter in a given situation. These are the basics in the competence "Learn to Learn' throughout life. Further, the information revolution makes this an imperative.

**f. Competency relating to the personality development**

competency develops one's own personality traits and development to adopt him / her in the society. "Behavioural and attitudinal changes would be developed through personality.

**g. Competency based on to prepare the child for the world of work.**

Through this competency child will able to get the knowledge and stand on his / her own feet. to get the suitable sources of Income earnings for life. Independently learns the skills in schools and apply for their life situation (would of work)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# National Goals

(i) The achievement of National Cohesion, National Integrity and National Unity.

(ii) The establishment of a pervasive pattern of social service.

(iii) The evolution of a Sustainable Pattern of Living, a Sustainable Life Style which is vital for the year 2000 and beyond when, for the first time in history of mankind even air and water cannot be taken for granted.

(iv) The generation of Work Opportunities, that are, at one and the same time, dignified, satisfying and self- fulfilling.

(v) In the above framework, the institution of a variety of possibilities for All to participate in Human Resources Development leading to cumulative structures of growth for the nation.

(iv) The active partnership in Nation Building Activities should ensure the nurturing of a continuous sense of Deep and Abiding Concern for One Another.

(vii) In a rapidly changing world, such as we live in today, it is imperative to cultivate and evolve elements of adaptability to change- learn to adapt to Changing Situations. This must be coupled with the competencies to guide change for the betterment of oneself and of others.

(viii) The cultivation of a Capacity to cope with the Complex and the unforeseen, achieving a sense of security and stability.

(ix) The development of those competencies linked to Securing an Honourable Place in the international community.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ELEVEN FACTORS FOR EFFECTIVE SCHOOLS

| | | |
|---|---|---|
| 1. | Professional leadership | Firm and purposeful<br>A Participative approach<br>The leading professional. |
| 2. | Shared Vision and goals | Unity of purpose<br>Consistency of practice<br>Collegiality and collaboration. |
| 3. | A learning environment | An orderly atmosphere<br>An attractive Working environment. |
| 4. | Concentration on teaching and learning | Maximisation of learning time<br>Academic emphasis<br>Focus on achievement |
| 5. | Purposeful teaching | Efficient organisation<br>Clarity ofpurpose.<br>Structured lessons<br>Adaptive practice. |
| 6. | High expectations | High expectations all round<br>Communicating expectations<br>Providing intellectual challenge. |
| 7. | Positive reinforcement | Clear and Fair discipline<br>Feed back. |
| 8. | Monitoring progress | Montoring pupil performance<br>Evaluating school performance. |
| 9. | Pupil rights and responsibilites | Raising pupil self - esteem<br>Positions of responsibilites<br>Control Work. |
| 10. | Home - School partnership | Parental invol vement in their Childern's learning. |
| 11. | A learning organisation | School - based Staff development. |

**Mr.P. Ramakrishnan**
Teacher of English



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையிலை மட்டுமா எரிந்தது



தாயுடன் கொஞ்சி மகிழ்ந்து விளையாடுகின்ற நாய்க்குட்டிகளுக்கு குறையேது. கரம்பொன் கிராமத்தில் இறைவன் அளித்த இயற்கை கொடைகளில் இதுவும் ஒன்றா என எண்ணத்தோன்றுகின்றது. காவேரியின் வீட்டு முற்றத்தில் கவலையே அற்று தன் கால்களுக்கு இடையில் தான் ஈன்ற ஏழு குட்டிகளை வைத்து இன்னும் நித்திரையில் இருந்து விழித்துக் கொள்ளாமல் உறங்கியது அவள் வீட்டு வளர்ப்பு நாய்.

காவேரியோ அசதியாக இருந்த தன் உடலின் அலுப்பையும் பாராது நித்திரையில் இருந்து எழுந்தாள். எழுந்தும் ஒவ்வொரு கோலங்களாக படுத்துறங்கும் தன் பிள்ளைகளையும், கணவனையும் பார்த்ததும் சிரிப்பும் வேதனையும் ஒன்றாகவே கலந்து வந்தது.

கிழிந்த போர்வைக்குள் கால்களை குடக்கி கொண்டு கிடக்கும் தன் மூத்த மகனையும், பெண் பிள்ளைகளுக்கே உரிய தன்மையுடன் நித்திரை செய்யும் தன் இரண்டாவது பெண் பிள்ளையையும், படுக்கையை நனைத்து விட்டு ஈரப்போர்வையுடன் கிடந்தது அவளது மூன்றாவது உற்பத்தி. நீரினாலே நிலத்தினுள் கோலம் போட்டபடி ஏணைக்குள் இருந்து புழுவைப்போல அசைந்தது அவளது நான்காவது வாரிசு. என்ன வகையாலும் உயர்வோ உவமையோ கூறமுடியாத மனிதன் தான் காவேரியின் கணவன் மாணிக்கம். பெயரிற்கும் குணத்திற்கும் எவ்விதத்திலும் பொருத்தமற்றவன். எவ்வித வேலையும் செய்யாமல் சும்மா இருப்பதே சுகம் என நினைத்து இருப்பதால் இவன் நித்தராதேவியின் நெருங்கின சொந்தக்காரன்.

"தம்பி மோகன் எழும்பப்பு. நான் தேத்தண்ணி கொண்டு வந்து தோட்டத்தில் தாறன். நீ கொஞ்ச நேரம் போய் போயிலைக்கு தண்ணியை ஊத்து என்ர ராசா எல்லா" எனப் பக்குவமாக தனது மூத்த மகனை எழுப்பினாள் காவேரி. அவனும் கண்களைக் திறக்க மிகுந்த கஸ்ரப்பட்டபடி எழுந்து கொட்டாவி விட்டபடி வேகமாக தோட்டத்துக்கு போனான்.

காவேரியும் பனையின் கொக்கறைகளை வைத்து அடுப்பை மூட்டித் தேத்தண்ணியை ஊத்தத் தொடங்கினாள். A - 9 மூடியபின்பு இலவச நிவாரணத்திற்கு கொடுத்த சீனி இன்னும் முடியாமையிலே தான் எவ்வித சிக்கலும் இன்றி தேத்தண்ணி ஊற்ற முடியுது. அதுவும் நாளையுடன் சரி என மனதுள் எண்ணிக் கொண்டாள். முதல் நாள் பொழுதுபடும் வரையும் குந்தியிருந்து போயிலைக்கன்றுகளின் இலைகளைக் கட்டியதால் அவளது முழங்காலும், நாரியும் பச்சைப்புண்ணாக நொந்தது. எவ்வித வருத்தத்திற்கும் இடம் கொடாது தேத்தண்ணியை ஊற்றி பெண்பிள்ளையிடம் தனது கணவனுக்கு கொடுத்துவிட்டு. மூத்த மகனிற்கும் ஒரு செம்பில் ஊற்றி அடுப்பின் பக்கத்தில் சுட்டபடி இருப்பதற்காக வைத்துவிட்டு மிகுதியை நன்றாக ஆத்தி சூப்பிக்குள் ஊற்றி தனது கடைசிக்குப் பருக்கினாள். வெறும் தேநீரையே மிகவும் ஆவலாய்க் குடிக்கும் தனது கடைசிப்பிள்ளையை நினைக்க மனதிலே சொல்லமுடியாத இறுக்கம் நெஞ்சை மூட்டிக் கொண்டு வந்தது.

தேத்தண்ணியைக் குடித்த மாணிக்கம் தனது பொக்கற்றைத் தடவி பீடியை எடுத்து தனது பெண்பிள்ளையிடம் "இந்தா மாலா இதை ஒருக்கா மூட்டிக் கொண்டு வா" என்றான் மாலாவும் எதுவுமே பேசாது பீடியை மூட்டி கொண்டு வந்து கொடுத்தாள்.

இண்டைக்கோ, நாளைக்கோ குமராகப் போகின்ற பிள்ளையைக் கொண்டு ஒரு அப்பன் பீடி மூட்டுகிறானே என்றதை காண காவேரிக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. பிள்ளைகளுக்கு முன்னால் இந்த விடியவே சண்டை பிடிக்க கூடாது என நினைத்து பொறுமையாக இருந்தாள் இப்படியான ஒரு புருஷனை நம்பி நான்கு பிள்ளைகளைப் பெற்றேனே என்பதை நினைக்க அவளுக்கே அவள் மீது எரிச்சல் ஏற்பட்டது.

முதல் நாள் இரவு சமைத்த மிகுதிச் சோற்றைப் பிழிந்து கல்லுச்சட்டிக்குள் போட்டு. சம்பலையும் அரைத்துப் பிசைந்து ஒவ்வொரு உருண்டைகளாக ஆக்கி மூடிவைத்துவிட்டு வெங்காயத்தையும் உரித்து வைத்துவிட்டு. "மாலா நீயும், தம்பியும் பள்ளிக்கூடத்திற்கு வெளிக்கிடுங்கோ அண்ணாவும் வந்த உடன் பழஞ்சோறு குழைச்சு வைச்சிருக்கிறன் சாப்பிட்டுப் போங்கோ" எனக்கூறி விட்டு இடுப்பிலே தனது கடைசியையும் தூக்கிக்கொண்டு கையிலே தேத்தண்ணிச் செம்பையும் எடுத்தபடி வேகமாக நடந்தாள். மூத்த மகனைப் பள்ளிக்கூடம் விடோணும் பிறகு வடக்கு றோட் பஸ் போயிற்றா அவன் நடந்து தான் எவ்வளவோ நேரத்துக்குப் பிறகு பள்ளிக்கூடம் போகோணும் என்ரபிள்ளை பாவம் இந்த வயசில் என்னோட சேர்ந்து எவ்வளவோ பாடுபடுது என்பதை நினைக்க கவலையும் அழுகையும் வந்தது. பீடியைக் குடித்துவிட்டு திரும்பி படுத்து நித்திரை செய்யும் கணவனை நினைக்க அருவருப்பாக இருந்தது. அவளுக்கு இப்படி ஒரு பொறுப்பற்ற புருஷனா? கெதியா போயிலைகளுக்கு தண்ணி ஊத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். என்ற வேகம் மோகனின் மனதில் இருந்தது, அவன் விரைவாகச் செயற்பட்டாலும் நீர் ஊறும் வேகம் கிணத்துக்கு இருக்கவில்லை.

கக்கத்தில் இருந்த தனது கடைசியை பூவரசின் கீழ் இருத்திவிட்டு "தம்பி மோகன் இந்தா நீ தேத்தண்ணியைக் குடி நான் மிச்சக் கண்டுகளுக்கு தண்ணீர் ஊத்துறன்" எனக்கூறிவிட்டு காவேரி மோகன் நீர் ஊற்றி விட்டு விட்ட மிகுதிக் கன்றுகளில் இருந்து தண்ணி ஊத்தத் தொடங்கினாள்.

வேகமாக போன தனது மகனை பிறத்தால கூட்பிட்டு தம்பி "அப்பா ஏதும் கத்தினால் நீ ஒன்றும் பறையாமல் சாப்பிட்டுவிட்டுப் போ அப்பு" என விடை கூறி அனுப்பினாள் தந்தையின் நடவடிக்கைகளால் மோகன் மனம் நொந்து போவதை பல தடவை காவேரி கண்டிருக்கிறாள், "தோளிற்கு மிஞ்சினால் தோழன்" என்ற பழமொழி கூட அவளை அடிக்கடி பயமுறுத்த தொடங்கியது.

பூவரசின் கீழ் இருந்து விளையாடும் தன்ரை கடைசியையும் அடிக்கடி தன் கண்ணால் பார்த்துக் கொண்டு போயிலைக்கு தண்ணி ஊற்றினாள். கிணற்றிலும் தண்ணீர் ஊற இன்னும் கொஞ்சம் நேரம் இருக்கு எனவே கிணறு இரங்கி நீர் ஊறி அள்ளும்வரை மிச்சக்கண்டுகளின் இலையைக் கட்டுவம். என நினைத்துக் கட்டத்தொடங்கினாள். ஒவ்வொரு புகையிலைகளின் பசுமையையும், விசாலத்தையும் பார்க்க மனதிலே ஒரு பூரிப்பு. தனது ஐந்தாவது பிள்ளை என நினைத்து ஒவ்வொரு புகையிலைகளாகத் தடவிப் பார்த்தாள். ஒவ்வொரு புகையிலைகளின் மீதும் அவளின் மூத்த மகனின் முகம் தெரிவது போன்ற ஒரு பிரமிப்பு அவளுக்கு.

என்ர பிள்ளை படிக்கிற, விளையாடுகிற, நேரத்தில் என்னபாடு படுது. எப்பதான் ஒரு விடிவுகாலமோ இன்னும் நாலு மாதத்தில் சோதினை எழுதிற பிள்ளை இப்படி வெய்யில் குளிக்கிதே கடவுளே என நினைத்துக் கொண்டாள்.

தீவகத்தின் சிறப்பு மிக்க பணப்பயிரில் புகையிலை தான் முதல் ராணி. அதுவும் தீவுப் போயிலை என்றாலே ஒரு தனி மவுசுதான் எல்லோருக்கும். காவேரியின் தந்தை பெரிய பேர்போன புகையிலை வியாபாரி. லட்சக்கணக்கான புகையிலைக் கன்றுகளை நட்டு பல வேலையாட்களை வைத்து தோட்டம் செய்து ஓகோ என்று வாழ்ந்தவர். காவேரியும் முன்பு ஒரு குட்டி ராணியாகத் தான் இருந்தாள். தன் தந்தையுடன் இருந்த போது நன்மை, தீமைகளை பகுத்து ஆராயத் தெரியாத பருவவயதில் மாணிக்கத்தின் மீது காதல் கொண்டு அவனை நம்பி கூடவே அவனுடன் ஓடி வந்ததால் தான் படும் சீரழிவை அடிக்கடி நினைத்து காவேரி கண்ணீர் வடிப்பதும் உண்டு.

இரண்டாயிரம் புகையிலைகளை நட்டு கூலி கொடுக்க வசதியோ அல்லது மனமோ இல்லாமையால் காவேரியும் அவள் மகன் மோகனும் தங்களது இரத்தத்தை வியர்வையாக்கி போயிலைக்கு உரமாக்கிக் கொண்டு இவ்வளவு தூரம் வளர்த்து விட்டார்கள். "கண்டுக் குத்தகையாக குடுத்தால் கொஞ்சம் தான் லாபம் வரும் எண்டபடியால் நீ உலர்த்தி வில்லு காவேரி" என ஆலோசனை கூறினார் பக்கத்து வீட்டு பொன்னையா அப்பு. அவர் அனுபவம் உள்ள ஒரு தோட்டக்காரன். காவேரியின் அப்பாவிடம் போயிலைத் தோட்ட தொழிலாளியாக கனகாலம் வேலை செய்தவர். இதனாலே காவேரியிலோ அல்லது அவளின்ர பிள்ளையளிலோ அவருக்கு ஒரு தனி விருப்பம்.

எப்பவும் கள்ளுத்தவறணையே கதி என்றும், தன்ர மனிசி பிள்ளையளில எந்தவிதமான அக்கறையும் இல்லாம ஊர்ச்சோலியை விலைக்கு வாங்கி ஒவ்வொரு நாளும் ஆரோடயாவது சண்டைக்குப் போய் அடிபட்டு வாறதும் அநதக் கோபத்தை வீட்டை வந்து காவேரியையோ அல்லது பிள்ளையளையோ அடிப்பதிலோ தீர்த்துக் கொள்ளும் மாணிக்கத்தை பொன்னையாண்ணை எப்பவும் ஒரு அற்ப பிராணி மாதிரி தான் நினைப்பார்.

எப்படி இருந்த காவேரி இண்டைக்கு இவனைக்கட்டி இப்படிக் கொடுமைப்படுதே என நினைத்து நினைத்துக் கலங்குவார். தனக்கு ஒரு மகள் இருந்தாள் எப்பிடிப் பாசமாக இருப்பாரோ அப்படியே பொன்னையாண்ணையும் இருந்தார்.

ஆரம்பத்தில் நல்ல மனிதனாய் இருந்த மாணிக்கம் ஏதோ தனக்கு நாலாவதாய் பிறந்த பெட்டை பிள்ளைதான் கூடாது என நினைத்து நல்லாக குடிக்கத் தொடங்கினான். குடிப்பதற்கு சிலர் இப்படித்தான் ஒவ்வொரு சாட்டைத் தேடிக்கொள்வார்கள். புகையிலை நட்டு வளர்த்து இன்று உலர்த்தும் வரைக்கும் ஒரு சிறிய உதவி கூட மாணிக்கம் அவர்களுக்குச் செய்யவில்லை. காவேரி தனக்கு குடிக்க காசு கேட்டால் தரமாட்டாள். போயிலைக்கு மருந்தடிக்க காசிருக்கு தானே. எனவே இவளுக்கு ஒரு வேலையும் செய்யக்கூடாது என நினைத்துக் கொண்டான் மாணிக்கம்.

உதவி செய்யவந்தால் உவத்திரம் தான் அதிகமாகும். தானே கடன் வாங்கி புகையிலைக்கு மருந்து வாங்கி மிசினில்லாமல் கைகள் கொப்புளிக்க தண்ணி அள்ளி ஊற்றி கஸ்ரப்படும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கத்தின் சாராயத்திற்கு காசிற்கு காவேரி எங்கே போவாள்? எனவே வீணாகச் சண்டை பிடித்து மரியாதைக் கேடு ஆகக் கூடாது என நினைத்தாள் காவேரி.

நாளை புகையிலை உலர்த்துவதற்கு தேவையான மட்டைகள் ஊமல்கள் எல்லாவற்றையும் குடிலின் அருகே கொண்டு வந்து வைத்து விட்டாள் காவேரி. தன்னுடைய இரக்கத்தில் கூலியே இல்லாமல் விலைக்கு விற்பதற்கான ஒழுங்கும் செய்வதாக கூறிய பொன்னையாண்ணையை நினைக்க காவேரிக்கு கையெடுத்துக் கும்பிட வேணும் போல கிடந்தது.

இரவு முழுவதும் நித்திரையில்லை போயிலையை விக்கோணும். வாங்கின கடன் குடுக்கோணும். பிள்ளையாளுக்கு நல்ல உடுப்பு வாங்கோணும், வீடு மேய வேணும் என எண்ணியபடியும் பல ஆசைகளையும் வளர்த்தபடி இருந்தாள். நீணடகாலம் பிள்ளை இல்லாது இருக்கும் தாய் பேறுகாலத்தை மகிழ்ச்சியுடன் எதிர்கொள்வதைப் போன்று இருந்தது காவேரிக்கு.

அன்று மோகனும் பாடசாலை செல்லவில்லை. புகையிலை உலர்த்தும் பொன்னையாண்ணைக்கு அவன் தான் கையுதவி. முக்கியமான பெரிய ஒப்பிரேசன் செய்யும் டொக்டரை போன்ற கவனத்துடன் பொன்னையாண்ணை போயிலை உலர்த்தியபடி இருந்தார்.

மாணிக்கத்தின் நீண்டநாள் சிநேகிதன் ஒருவன் பல நாட்களின் பின் மாணிக்கத்தை வீதியில் சந்திச்சு சிநேகிதம் கொண்டாடினான். அவனுடைய அன்பான பரிசாக மதுபான நிலையத்தில் நல்ல விலை உயர்ந்த சாராயத்தை வாங்கிக் கொடுத்து புதுசா வெளிநாட்டு லைட்டர் ஒன்றும் கொடுத்தான். இப்படியான சந்தர்ப்பம் எனியும் வருமோ என்ற ஐயத்தில் மாணிக்கமும் நல்லாக வார்த்துக் கட்டினான். உயர்ரக மதுபானம் போதை விஷம் என மளமளவென்று தலைக்கேறியது நண்பனிடம் விடைபெற்று தள்ளாடிய படி வீடுவந்து சேர்ந்தான்.

இன்று உடலிலும், மனதிலும் புது வித ஒரு உணர்வு அவனுக்கு. போயிலையை உணர்தியபடி இருந்த பொன்னையாண்ணையிடம் தனது வீரத்தைக் காட்ட நினைத்தான். “டேய் நீ இருக்கிற தைரியத்தில தானடா அவளுக்கும் அளவின்ரை குத்தியனுக்கும் திமிர் வைச்சிற்று நீ என்ன அவளுக்கு மாப்பிள்ளையாடா...” என வார்த்தைகளை நெருப்பாக கொட்டியபடி பொன்னையாண்ணையை காலால் உதைந்தான். இன்னும் போதை அவனை விடவில்லை புது லைட்டரை புகையிலைக் குடில் கூரையில் ஒத்திகை பார்த்தான். புகையிலைக் குடில் குபீரென்று தீப்பற்றியது. மோகனும் காவேரியும் எதுவும் செய்யத் திரானியற்று ஐயோ! ஐயோ! எனக் கத்தினார்கள்.

மாணிக்கத்தின் போதை இன்னும் தலைக்கேற அருகில் இருந்த உலக்கையை தூக்கியபடி காவேரியை நோக்கி தள்ளாடியபடி வந்தான் மாணிக்கம். விபரீதத்தை உணர்ந்த மோகனால் எதுவும் செய்யமுடியவிலலை. தாயைக் காக்கும் நோக்குடன் தந்தையை தள்ளி விட்டான் மோகன்.

அளவு கடந்த போதையினாலும், கோபத்தினாலும் தடுமாறிய நிலையில் நின்ற மாணிக்கம் தேங்காய் உரித்துவிட்டு நிமிர்ந்த நிலையில் கிடந்த மண்வெட்டியின் மீது விழுந்தான். கூரான மண்வெட்டி முனை மாணிக்கத்தின் தலையில் அரைவாசி உள்ளே சென்றது அவனது ஆவி வெளியே சென்றது.

எரிந்து கொண்டிருக்கும் புகையிலைக்குடிலைப் பார்த்து தனது ஐந்தாவது பிள்ளைகள் எரிந்து விட்டனவே என்று அழுவதா, தனக்காக உதவிசெய்ய வந்து இன்று உயிருடன் போராடும் பென்னையாண்ணையை நினைத்து அழுவதா? தனது கணவனை நினைத்துக் கதறுவதா? ஐயோ! கொலைகாரன் என்ற பட்டத்துடன் நிற்கும் தனது மகனைப்பார்த்துக் கதறுவதா? எனத் தெரியாது கொடிய சுனாமியால் அள்ளிச் செல்லப்பட்ட மனநிலையில் வாய் ஊமையாகி இருந்தாள் காவேரி.

தந்தையை தள்ளிவிடாவிட்டால் இன்று தனது தாய்க்கு தான் கொள்ளி வைக்க வேண்டி இருந்திருக்கும். தாய் இருந்தால் தனது சகோதரர்களாவது பசியாறி மகிழ்ச்சியாய் இருப்பார்கள் என நினைக்க மோகனுக்கு ஒரு வகையில் ஆறுதல்.

மோகன் செய்தது கொலையா? அவனது இன்றைய நிலைக்கு சமூகத்தில் என்ன காரணம்? பாடசாலை வாழ்வை விட்டு சிறைச்சாலைக்கு செல்லும் நிலையை யார் உருவாக்கினார்கள்? மோகனுக்கு தூக்குத்தண்டனை தீர்ப்பு எழுதப்படுமா? அவனுக்கு தீர்ப்பு எழுதும் நீதிபதிகளின் பேனைகள் எழுத்துக்களை பிரசவிக்குமா? எரிந்து போனது அவர்களின் புகையிலை மட்டுமா? இல்லை அக்குடும்பத்தின் வாழ்வும் எதிர்கால ஆசைகளுமல்லவா?

**திருமதி. கஜநந்தினி வரதலோஜன்**
**(முன்னாள் தொண்டர் ஆசிரியை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசல் 22 கரட் தங்கத்தில்
நவீன காலத்திற்கேற்ப
புதிய டிசைன்களில்
தங்க நகைகளைச்
செய்து பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்





# சிறி கருமாரி நகையகம்

தங்கப் பவுண் நகை வியாபாரம்
205/6, கஸ்தூரியார் வீதி,
(ராஜா தியேட்டர் கட்டடம்), யாழ்ப்பாணம்.



இம் மலர் சிறப்புற
எங்களது நல் வாழ்த்துக்கள்

# சிறி ராஜன் பான்சி ஹவுஸ்

அன்பளிப்புப் பொருட்கள் பாடசாலை
உபகரணங்கள் விற்பனையாளர்


65/66, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மலர் தொடர்ந்தும் வெளிவர
எங்களது வாழ்த்துக்கள்!

# சாரங்கா நகைமாடம்





உறுதியும்
உத்தரவாதமும்
உள்ள 22 கரட்
தங்க வைர
நகைகளைப்
பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்

157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இம் மலருக்கு எம் உளம் கனிந்த
நல் வாழ்த்துக்கள்

B.Sripathan
Proprietor

# Harini Hardware & Motors

HHM

*Motor,Cycle & Spare Parts,*
*Land masters Battery,*
*Tare, Tube,*
*Gas, &Gas Cookers*




164, Stanley Road,
Jaffna, Sri Lanka.

Phone / Fax
0094 - 21 2222850





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் 01
மாணவர்களுக்கான
கற்பித்தற்
செயற்பாட்டில்
ஆசிரியர்.

தரம் 03
மாணவர்களுக்கு
பாடவிளக்கம்
அளிக்கும் ஆசிரியர்.





தரம் 03
மாணவர்களின்
குழுச் செயற்பாட்டில்
ஆசிரியர்
வழிகாட்டுகிறார்.

குழுச்
செயற்பாட்டில்
ஒழுங்குபடுத்தப்பட்ட
வகுப்பறையில் தரம்
4 மாணவர்கள்.



ஆரம்பக் கல்வி வகுப்பறை கற்றல் கற்பித்தல் செயற்பாடு,
(செயற்பாட்டுடனான வகுப்பறைகள்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் சிறப்புற வாழ்த்துவோர்

**லிங்கன் கூல் பார்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

**முருகன் புடவையகம்**
6, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

**திரு.ப.கிரிதரன்**
**கிரிஷன் வீடியோ**
யாழ்ப்பாணம்.

**தணிகாசலம் சதீசன்(H.N.B)**

**யசி வர்த்தக நிலையம்**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**ம.ஆனந்தக்குமரன்**
கில்னர் லேன், யாழ்ப்பாணம்.

**பென்சி ஹவுஸ்**
275, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**லிங்கன் செரமிக்**
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**அன்னராஜா களஞ்சியம்**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ முத்துமாரி அம்மன் ரேடர்ஸ்**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**ப.நோ.கூ. சங்கம்**
புங்குடுதீவு.

**ஸ்ரீ சக்தி ஸ்ரோர்ஸ்**
310A ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**அனுஷன் வீடியோ சென்ரர்**

**நயினை அம்மன்**
**நகைத் தொழிலகம்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**யாழ்ப்பாண வணிக**
**நிலையம்**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**காந்தி ஸ்ரோர்ஸ்**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**வீ.பாலச்சந்திரன் (பாய்க்கடை)**
**M.குணசேகரம் (பாய்க்கடை)**
**ச.ஜெகதாஸ்**

**ஈசன் பல்பொருள் வாணிபம்**

**சி.சிவகுமார்**
**(வெற்றிலைக்கடை)**
**க.சிவரூபன்**

**நா.பாலச்சந்திரன்**
ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி.

**திருமதி.ஜினிதா சுயேந்திரராஜ்**
**(லண்டன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மலருக்கு எம் உளம்
கனிந்த
நல் வாழ்த்துக்கள்

## ஸ்ரீ சக்தி ஸ்ரோர்ஸ்

310A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இம் மலருக்கு எம் உளம் கனிந்த
நல் வாழ்த்துக்கள்

## ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலை

235, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

இம் மலர் தொடர்ந்தும்
வெளிவர எங்களது
வாழ்த்துக்கள்!

## இளவரசி சேலைச் சோலை

இல.57, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 2503

## வினோ நகைப் பூங்கா

தங்க வைர நகை வியாபாரம்
உரிமையாளர் : சடாச்சரம் புவிச்சந்திரன்
அசல் 22 கரட் தங்க நகைகள்
உத்தரவாதத்துடன் குறித்த தவணையில்
செய்து கொடுக்கப்படும்.

185, 177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



T.P : 021 2225394
Fax : 021 2222824

## கோபிகா டெக்ஸ்

*Specialist in Wedding Sarees,*
*shalwar Kameez & Ladies Gents*
*& Childrens wear*

No : 5/4(3A), New Market (Inside),
Jaffna.
Tel : 021 2222377

இம் மலர் தொடர்ந்தும் வெளிவர
எங்களது வாழ்த்துக்கள்!

## ரதி பென்ஸி கவுஸ்



53, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

## MAYOORA

Gift Centre

14, New Market, (Out side),
Power House Road, Jaffna.
Tel : 021 222 2084

மயூரா அன்பளிப்பு அகம்

14, நவீன சந்தை, (வெளிப்புறம்),
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
தொ.பேசி : 021 222 2084

## VANAHAM

PHONE CITY

NO : 06, K.K.S.Road,
Jaffna.

Tele Phone No : 077 7238588



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூன்றெழுத்தில் வாழ்க்கை

உலகில் உள்ள **உயிர்** மூன்றெழுத்து உயிரை இயக்கும் **சக்தி** மூன்றெழுத்து சக்தியின் வடிவம் **அன்னை** மூன்றெழுத்து அன்னை காட்டும் **அன்பு** மூன்றெழுத்து அன்பை உயர்த்தும் **அறிவு** மூன்றெழுத்து அறிவை வளர்க்கும் **பள்ளி** மூன்றெழுத்து பள்ளியிற் கற்கும் **கல்வி** மூன்றெழுத்து கல்வியால் உருவாகும் **பதவி** மூன்றெழுத்து பதவியை சிறப்பிக்கும் **இளமை** மூன்றெழுத்து இளமை தரும் **மணம்** மூன்றெழுத்து மணத்தால் இணையும் **மனைவி** மூன்றெழுத்து மனைவியால் உருவாகும் **மழலை** மூன்றெழுத்து மழலைக்குச் செலவாகும் **பணம்** மூன்றெழுத்து பணத்தினைத் தேடும் **கைகள்** மூன்றெழுத்து கைகள் சோரும் **முதுமை** மூன்றெழுத்து முதுமையின் பின் **முடிவு** மூன்றெழுத்து முடிவின் பின் தேவைப்படும் **பெட்டி** மூன்றெழுத்து பெட்டியில் அடங்கும் **பிணம்** மூன்றெழுத்து பிணம் எடுத்துச் செல்லும் **ஊர்தி** மூன்றெழுத்து ஊர்தி செல்லும் இடம் **சுடலை** மூன்றெழுத்து கொள்ளியில் எரிந்த **அஸ்தி** மூன்றெழுத்து அஸ்தி கரையும் **கடல்** மூன்றெழுத்து

**பா. கீர்த்தனா**
**பா. கீர்த்தனி**
**தரம் - 4**

# MY SCHOOL

I am studying at J/ Koddady Namasivaya Vidyalayam. It is located in Jaffna town. It is a mixed school. There are around 447 students. We have big buildings, There are 20 Classrooms. We also have a library, a music room, a canteen and botanical garden. We have a big assembly hall.

Our Principal is Mr. N. Nadarajalingam. He is very kind and perfect man. I am very pround of him. I am happy to study here.

**P. Vinothini**
**Grade – 4**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MY PET

I have a pet dog.
It's name is Jimmy.
It is black in colour
It has two small eye and a tiny black nose
It has a small bushy tail He has white spots on his body
I love to play with Jimmy
I Love my pet dog very much.

**P. Luxana**
Grade - 4

# நான் ஆசிரியரானால்...

மனித வாழ்க்கை வளம்பெற இன்றியமையாத அடிப்படைகள் இரண்டு எனலாம். ஒன்று தனிமனிதன் தனது ஆற்றல்களையும் சிறப்புத்தன்மைகளையும் முழுமையாக வளர்த்துக் கொண்டு செயலாற்றுதல், மற்றையது சமூக முன்னேற்றமாகும் இந்த இரண்டு இலக்குகளும் சிறப்பாக செயற்பட திட்டமிட்ட கல்வி முறை அவசியமாகும். இதனை நடைமுறைப்படுத்துபவர் ஆசிரியராவார்.

அந்த வகையில் நான் ஆசிரியரானால் இன்றைய காலகட்டத்தில் ஒழுக்கம் என்னும் உயரிய பண்பு மாணவர்களிடம் அருகிக் காணப்படுகிறது ''ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப உயிரினும் மேலாகக் கருதப்படும் ஒழுக்கத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்வதுடன் நானும் அவர்களுக்கு முன்மாதிரியாக விளங்குவேன்.

எப்பொழுது ஒரு ஆசிரியர் கற்க மறுக்கின்றாரோ அன்றே தனது கற்பித்தலை நிறுத்திவிட வேண்டும் என்ற கருத்தினை மனதில் கொண்டு மாணவர்களுக்குச் சிறந்த கற்பித்தலை மேற்கொள்ளும் முகமாக, எனது பாடத்திற்கு பொருத்தமான பலவிதமான அறிவியல் நூல்களைக் கற்றுக் கொண்டேயிருப்பேன்.

ஆசிரியர் தொழில் என்பது தற்போது வாண்மைத் தொழிலாகக் கருதப்படுகிறது அத்தகைய வாண்மைத் தொழிலுக்குத் தேவையான தொழிற் தகைமைகளைப் பெற கல்வியைக் கற்பதில் ஆர்வமுடையவனாக இருப்பேன்.

நடைமுறைக்கு வரும் புதிய கல்விச் சீர்திருத்தங்களைப் பின்பற்றி மாணவர்களிடம் சுயகற்றல் முயற்சியினை ஏற்படுத்துவதற்கு பலவகையான கற்பித்தல் முறைகளைப் பின்பற்றி சிறந்த கல்வியறிவினை வழங்கி அவர்களை சமூகத்திற்கும் நாட்டிற்கும் ஏற்ற சிறந்த மனிதனாக உருவாக்குவேன்.

மற்றும் மாணவர்களிடையே பலவிதமான ஆற்றல்களைக் கண்டுணர்ந்து அதனை வெளிக்கொணரும் வகையில் பலவிதமான இணைப்பாடவிதான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வேன்.

மாணவர்கள் தற்காலத்தில் பலவிதமான உளவியல், சமூகவியல் தாக்கங்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர். எனவே அவர்களுக்கு சிறந்த நண்பனாக, வழிகாட்டியாக ஆலோசகருமாக விளங்கி அவர்களை அத்தகைய தாக்கங்களிலிருந்து சகஜமான நிலைக்கு கொண்டு வருவேன்.

''கல்வி என்பது மனிதனின் அடிப்படை உரிமை". ''வாழ்நாள் முழுவதும் கல்வி" என்ற யுனெஸ்கோ கொள்கைகளைப் பின்பற்றி என்னிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்களுக்கு கல்வியின் முக்கியத்துவத்தினை உணர்த்தி அவர்களை தொடர்ந்து கற்றலில் ஈடுபட உழைப்பேன்.

ஆசிரியர் பணி மாணவர்களோடு மட்டும் நின்றுவிடாது பாடசாலை மற்றும் சமூகத்தோடும் தொடர்புடையதாகும். அந்த வகையில் பாடசாலையிலுள்ள ஏனைய ஆசிரியர்களிடம் நல்லுறவினை ஏற்படுத்தி பாடசாலை சமூக முன்னேற்றத்திற்கு ஒற்றுமையாக உழைப்பேன்.

**சி. லாவண்யா**
**தரம் - 5B**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அதிபர்

எங்கள் அதிபர் வருகிறார்
எழுந்து வணக்கம் சொல்லுவோம்
பொங்கும் அவரின் சிரிப்பிலே
புதிய நாளைத் தொடங்குவோம்

பிரம்பு கையில் இல்லையாம்
பேச்சும் ஏச்சும் இல்லையாம்

அரும்பும் கனிவு முகத்திலே
அவர்தான் எங்கள் அதிபராம்

திறந்த வெளியில் ஆடுவோம்
சேர்ந்து அதிபர் பாடுவார்

சிறந்த அறிவு பெற்றிட
செயல்முறையில் பயிற்றுவார்.

ஆக்கம் :- க.பிரியங்கா
தரம் - 6

# A HAPPY DAY IN MY LIFE

My First day in school was a happy day in my life. I got up early in the morning and went to see what my mother was doing. I saw her preparing pongal. My brother was very busy he was laying the table for the morning meal.

I was very excited I brushed my teeth and my mother washed me she gave me a new uniforam then mother fed me with pongal my mother put my school bag, water bottle and sent me by my father's bicycle.

Father took me to school in his new bicycle. We reached J/ Kodday Namasivaya Vidyalayam within ten minutes. There were many children with their parents. I too joined them, Then the principal Mr. N. Nadarajalingam called us one by one. When my name was called I went with my father. I offered him a sheaf of betel. He wished me good luck and he sent me to the new class.

My class teacher was Miss. R. Paramanathan she was very kind to me with sweet smile. She took me to the class and gave me seat in the front row. Some children were crying. I did not cry our teacher targhit us a new song. Later she took us to the play ground. We played during the interval. At about 12"O" Clock my mother came to take me. I went with my mother very happily, it was the happiest day in my life.

**P. Anajan**
**Grade 7B**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக்கு சில தகவல்கள்

- ❖ ஆஸ்திரேலியாவிலுள்ள 'ஐரியஸ் மலை' தினமும் தன் நிறத்தைமாற்றிக் கொள்கிறது.
- ❖ திபெத் நாட்டில் ஓடும் 'யுரோட்சோலேன் ஏரி' 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நல்ல நீராகவும் உப்பு நீராகவும் மாறும்.
- ❖ ஆபிரிக்கா நாட்டில் காணப்படும் "மெய்ருக்" எனும் அரிய விலங்கினை தலைகீழாகப் பிடித்தால் குழந்தை போல் கத்தும்.
- ❖ ஸ்பெயின் நாட்டிலுள்ள "பியோடெனஸ்" ஆற்றின் நீரும் இரத்தம் போல் சிவப்பு நிறமாக இருக்கும்
- ❖ காண்டா மிருகத்தின் கர்ப்ப காலம் 560 நாட்கள்
- ❖ கறையான் ஒரு நாளைக்கு சுமார் 8000 முட்டைகள் வரை இடும்.
- ❖ எறும்புகளால் சர்வசாதாரணமாக 100 நாட்கள் உணவின்றி வாழ முடியும்.
- ❖ மிருகங்களில் குறைந்த நேரம் தூங்குவது கழுதை. இது ஒரு நாளில் 30 நிமிடங்கள் மட்டுமே தூங்கும்.
- ❖ ஒரு சாதாரண பென்சிலைப் பயன்படுத்த 48 km நீளத்திற்கு கோடு போடமுடியும். விண்வெளிவீரர்கள் எழுதுவதற்கு இன்றுவரை பயன்படுத்துவது பென்சில் தான்.
- ❖ முப்பத்தைந்து "ஆஸ்கார்" விருதுகள் பெற்ற ஒரே மனிதர் "வால்ட் டிஸ்னி" தான்.

தொகுத்தவர் :- சீ. றேக்கா
தரம் - 9A

# உலகின் பெரியவை

| | | | |
|---|---|---|---|
| 1. | மலைத்தொடர் | - | எவரெஸ்ட் |
| 2. | பாலைவனம் | - | சகாரா |
| 3. | கண்டம் | - | ஆசியா |
| 4. | சமுத்திரம் | - | பசுபிக் |
| 5. | தீவு | - | கிறின்லாந்து |
| 6. | நூலகம் | - | லெனின் நூலகம் (மொஸ்கோ) |
| 7. | நூதனசாலை | - | பிரிட்டிஷ் நூதனசாலை |
| 8. | விமான நிலையம் | - | யோட்டக் (சவுதி அரேபியா) |
| 9. | ஏரி | - | கிபீரியா ஏரி |
| 10. | மாளிகை | - | வத்திக்கான் மாளிகை |
| 11. | விகாரை | - | பதோபதுர் விகாரை (இந்தோனேசியா) |
| 12. | சுவர் | - | சீனப் பெருஞ்சுவர் |
| 13. | வாவி | - | சுப்பிரியர் வாவி |
| 14. | ஆலயம் | - | புனித பேதுரு ஆலயம் |
| 15. | பாலூட்டி | - | திமிங்கலம் |

சீ. கஸ்ரோகரன்
தரம் - 9A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விவசாய மன்றம்


பிரார்த்தனைக்கு மாணவர்கள் வருகின்றார்கள்.


பிரார்த்தனைக் கூட்டம்


ஆரம்பப் பிரிவு


அழகியல் மன்றம்


தமிழ் மன்றம்


கணித விஞ்ஞான மன்றம்


சமூக மன்றம்


இந்து மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நியூ சன் தையலகம்

இல: 4, ஜிம்மாபள்ளி வீதி,
யாழ்ப்பாணம்.

## New Sun Tailars

No : 4, Jummapalli Road,
Jaffna.

Ptop :
S.Lavan

# Dart Enterprise

## டாட் என்ரபிரைஸ்

Wholesale & Retall Dealers in Watches, Wallcloks, Electronic, Electrical, Gift Items & Fancy Goods.

இல: 11, 12, நவீன சந்தை
உட்புறம், யாழ்ப்பாணம்.

No: 11, 12, New Market inside,
Jaffna.

T.P : 222 3098

# CITY BOY TAILORS

No: 5, K.K.S. Road,
jaffna.



## சிற்றி போய் ரெயிலேர்ஸ்

இல.5, கே.கே.எஸ்.வீதி,
சத்திரச்சந்தி அருகாமை,
யாழ்ப்பாணம்.

(வேறு கிளைகள் இல்லை)

திருமண கூறைச் சாரி வகைகள்,
பிளவுஸ் துணி வகைகள்
சல்வார் கமீஸ் மற்றும் சாரி
வகைகள் சகல விதமான
ஆடைகள் பெற்றுக்கொள்ளலாம்.

# இலக்கியன் ரெக்ஸ்



இல: 29, நவீன சந்தை
(உட்புறம்), யாழ்ப்பாணம்.

T.P : 0777917675

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மலருக்கு எம் உளம் கனிந்த
நல் வாழ்த்துக்கள்

# கபிலா காலணியகம்

# KABILA

## SHOE PALACE

24, Kasthureyar Road,
Jaffna



24, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Colombo
T.P : 4612736

☎ 222 3097

இம் மலருக்கு எம் உளம் கனிந்த
நல் வாழ்த்துக்கள்

# குகன் ஸ்ரோர்ஸ்

## (பலசரக்கு வாணிபம்)

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி நூறு கேளு!

ஏன் என்று கேளு?
எதற்கு என்று கேளு?
வீண் என்ற நினைத்திடாமல்
வினாக்கள் பல கேளு?

இரவு பகல் தோன்றல்
எப்படி என்று கேளு
இரவு நிலா பகலில்
எங்கே என்று கேளு?

பூமி சூழல்வதேது?
உருண்டையானதேது?
கடலுக்கென்ன கோபம்
அலைகள் பற்றி கேளு?

மின்னல் இடியும் ஏது?
மேகம் என்பதேது?
நீலவானம் தோன்ற
வானவில்லும் ஏது?

கேளுதம்பி கேளு?
கேள்வி நூறு கேளு?
ஆளும் வளர்தல் போலே
அறிவும் வளரக் கேளு?

நீரில் வாழும் மீன்கள்
நிலத்தில் வாழ்வதில்லை
நீரில் என்ன வசதி?
நிலத்தில் என்ன அவதி?

நீரில் நிலத்தில் தவளை
நின்று வாழ்வதென்ன?
சொல்லு என்று கேளு?
சொல்லும் விடையைக் கேளு?

அன்னை தந்தையைக் கேளு?
ஆசானையும் கேளு?
தன்னை உயர்த்திக் கொள்ள
தம்பி கேள்வி கேளு?

தப்பாய் இருந்தால் கூட
தவறே இல்லை தம்பி
எப்போதும் நீ கேளு
எல்லோரிடமும் கேளு?

**க. கபிலேஷன்**
**தரம் - $9^B$**

# விஞ்ஞானமும் வாழ்வும்

இன்று இருபத்தோராம் நூற்றாண்டினை மிக நெருங்கி நின்று கொண்டிருக்கின்றோம். இயந்திரயுகமும் அவசரகதியும் வாழ்வாகிப் போய்விட்டன. மண்ணின் மைந்தர் நாம் விண்வெளியில் பயணித்துத் தண்மதியில் குதித்துவிட்டோம். தலைநிமிர்ந்து நின்று கொண்டோம். தொழில்நுட்பம், பொறியியல், மருத்துவம், இலக்கியம், மொழி, அறிவு எதிலும் வெற்றிக் கொடி நாட்டியபடி மானுடம் பயணம் செய்கின்றது. இவ்வளப்பரிய சாதனைகளின் அடித்தளமாக அமைந்திருப்பது விஞ்ஞானமே. இவ் விஞ்ஞானம் வாழ்வோடு கொண்ட தொடர்புகளையும் நயநட்டங்களையும் சற்றே சீர்தூக்கிப் பார்ப்போம்.

விரிந்து பரந்த உலகை அடக்கியாளும் அளவிற்கு மானுடம் தழைத்ததற்குக் காரணம் விஞ்ஞானமே ஆகும். அன்றைய நாட்களில் ஆதி மனிதன் விலங்கோடு விலங்காய் பேதமற்று வாழ்ந்தான். காலப் போக்கில் சிந்தனை வடிவில் விஞ்ஞானச் சுடர் ஏற்றிவைக்கப்பட்டது. செயலார்வங்களும், சிந்தனைத் திருப்பங்களும் சேர ஏற்றிவைத்த அகல் பிரகாசிக்கத் தொடங்கியது. விலங்கு நடத்தையிலிருந்து மனிதன் வேகமாய் விலகத் தொடங்கினான்.


இன்று விஞ்ஞானம் வானத்துக்குக்கு பூமிக்குமிடையே விரிந்து பரந்து கிடக்கின்றது. விஞ்ஞானச் சுடர் ஒளி பரவாத இடம் தான் எது? போக்குவரத்துத்துறையில் விருத்தி பெற்றது, மருத்துவத்தில் முன்னேற்றம் பெற்றுள்ளது, விவசாயத்துறையிலும் என பல துறைகளில் முன்னேற்றம் பெற்றுள்ளது. பெற்றமகன் தந்தையை வழிப்படுத்துவது போல விஞ்ஞானமே இன்று மனிதனை வழிகாட்டி ஆள்கின்றது. அளவோடு எரிந்தால் அது விளக்கு, அளவுக்கு மீறினால் அது நெருப்பு, தீயைத் தகுந்த வழியில் பயன்படுத்திப் பயன்பெறுகிறோம். அதுபோல் விஞ்ஞான அறிவையும் விருத்தி தரும் வழியில் பயன்படுத்துவோம். வளம் பல பெறுவோம்.

**கு. அபிலாஷா**
**$11^B$**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுக்கு அமுதென்று பெயர்



கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றியது மூத்த தமிழ் என்பர் அறிஞர். தமிழானது செந்தமிழ், வண்டமிழ், இன்தமிழ் என்ப பலவாறு அழைக்கப்படுகிறது. எனினும் தமிழ் இனியது. தமிழுக்கு அமுதென்று பெயர் என பாராதிதாசன் பாடியுள்ளார். அமுதம் உண்பவர்கள் இறப்பதில்லை. அதனால்தான் போலும் தமிழர்கள் உலகெங்கும் பரந்து காணப்படுகின்றனர் இத் தமிழ்மொழி எமக்கு என்றென்றும் பெருமையை தருகிறது.

''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதானது எங்கும் காணோம்''. என்றும் 'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாமல் பரவும் வகையில் செய்தல் வேண்டும்' என்றும் பாரதியார் அன்று வேண்டுகோள் விடுத்தார். ஆனால் இன்று எம்மில் எத்தனை பேர் அத்தமிழை வளர்க்க முன்வருகிறார்கள்? என்பது கேள்விக் குறிதான். தமிழ் அணங்கு தென்றல் தோறும் தவழ்ந்து வருபவள், தேன்மொழி மலையிலே தோன்றியவள், தென் மதுரையிலே சங்கம் அமைத்தவள், தித்திக்கும் தீம்பால் நூல்களை எமக்குத் தந்தவள் இந்த அமுதத்தை நாம் சுவைக்காது விடுதல் மடமையேயாகும். அதன் பெருமையை உணர்ந்து தமிழை வளர்த்து நாமும் வாழ நினைத்தல் வேண்டும். தமிழில் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் வளர்க்கப்பட்டுள்ளது. பழமையும் தொன்மையும் வாய்ந்த தமிழை நாம் கால வெள்ளத்தில் அழிய விடலாமா? ''செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே'' என்றும் தமிழ் வழங்கும் நாடு என்றும் அதனைச் சொல்லும் போது காதினிலே தேன் பாய்கிறது என்றும் மகாகவி கூறுகிறார். இவ்வாறான தேனைப் பருகுவதற்கு தமிழர்கள் ஆகிய நாம் மறப்பது முறையாகுமா?

தமிழில் உள்ள ஐம்பெரும் காப்பியங்கள், இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்கள் படித்துச் சுவைப்பதற்கு மட்டுமன்றி அரிய பல கருத்துக்களையும் வாழ்க்கையின் விழுமியப் பண்புகளையும் எடுத்தியம்புகின்றது. அமுத கலசங்கள் போன்ற இவற்றை இன்றும் கண்களால் கூட காணாத பலர் நம்மில் இருக்கத்தான் செய்கிறார்கள். தமிழ்மொழி மிகப் பரந்தது பிறமொழிச் சொற்களை தன்னிடத்தே உள்வாங்கி ஆதரித்து தன்னை வளர்த்துக் கொண்டுள்ளது.

இவ்வாறான தமிழ்மொழி ஆற்றலை வளர்த்து அதனை வாழ வைப்பது எமது கடமையன்றோ அமுதம் கிடைப்பதற்கு அரிதானவை ஆனால் அதை அடைய முயலுவோருக்குக் கிடைக்கத்தான் செய்யும்.

''கற்றது கை மண்ணளவு
கல்லாதது உலகளவு'' என்பார்கள்

தமிழ்மொழியை உலகளவு கற்கமுடியாது போயினும் நாம் ஓரளவுக்காக வேணும் கற்று தாய்மொழிப் பற்றும் தமிழ்மொழிப் பரீட்சயமும் உடையவர்களாகத் திகழ்வோம்.

வாழ்க தமிழ்மொழி
வளர்க தமிழ்

அருணா
தரம் - 10 B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணாய்ப் பிறந்துவிட்டால்

பெண்ணொருத்தி பிறந்து விட்டால்
பெற்றவர்க்குத் தொல்லை என்பர்
பெண் பிறக்கவில்லையெனில்
தாய்க்குப் பெண் பொருத்தமில்லை என்பர்

ஊழ்வசத்தால் ஒரு பாவை
ஊன் உடல் பெற்றுவிட்டால்
உதவாக் கரை என்றே
ஒதுக்கி வைப்பர் வாழ்வெல்லாம்

பெண் கொஞ்சம் படித்துவிட்டால்
செருக்கேறி விட்டதென்பர்
படிக்காமல் இருந்திடிலோ
பட்டிக்காடு என்றிடுவர்

பாதையிலே சென்றிடுங்கால்
பாவையவள் சிரித்து விட்டால்
அடக்கமில்லாப் பெண் என்றே
அடுத்தவர்க்கு இயம்பிடுவர்

ஆணோடு அவள் கொஞ்சம்
அண்டியே பழகி விட்டால்
அடக்கம் இல்லை என்றே
அடுத்தவர்க்கு இயம்பிடுவர்

பெண் கொஞ்சம் துடுக்காக
பேசிவிட்டால் போதும்
வாயாடி என்றே வசை
வந்திடுமே அவளுக்கு

நாலுபேர் மத்தியிலே
பாவை நாணங்கொண்டுவிட்டால்
நாகரீகம் தெரியாத
நங்கையவள் என மொழிவர்

நெடுங்காலம் பெண்ணொருத்தி
மணம் இன்றி இருந்துவிட்டால்
பெரியதொரு சுமையன்றே
பெற்றவரும் கூறிடுவர்

விபத்தொன்றில் கொண்டவனை
பறிகொடுக்க நேர்ந்துவிட்டால்
விதவை என்ற விருதொன்று
பாவைக்குக் கிடைத்துவிடும்

மணமாகிப் பல நாளாய்
பெண் தாய்வரம் இல்லையெனில்
மலடி என்றே பட்டமிட்டு
அமங்கலமாய் ஒதுக்கிடுவர்

பெண்ணாகப் பிறந்து விட்டால்
பேதைபெறும் பெயர் பலவே
ஏனிந்த நிலையென்று - பெண்
எனக்கே புரியவில்லை.

ப.லாவண்யா
தரம் - 10B

✧இலியற், ஒடிசி என்ற இரண்டு மாபெரும் கிரேக்கக் காவியங்களைப் படைத்த 'ஹோமர்' ஒரு பார்வையற்ற கவிஞர்.

✧உலகின் மிகப் பிரபல ஓவிய மங்கை மோனாலிசாவின் உண்மைப் பெயர் 'லிஸா கியாகோண்டா'.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியே அழியாச் செல்வம்



மனிதர்களாலே தேடற்படலான செல்வம் இரண்டாகும். ஒன்று கல்விச் செல்வம் மற்றையது பொருட்செல்வம். கல்வியானது கற்றற்குரிய நூல்களை தக்கோரிடத்துக் கற்றுத் தெளிதலாகும். கல்வியானது அறிவு, ஆற்றல், பண்பாடு ஆகியவற்றை விருத்தி செய்து மக்களின் பூரணவாழ்வுக்கு வழிவகுப்பதாகும். கல்வி ஒன்றே விலை மதிப்பற்ற விழுமிய செல்வமாகும். இதனை வள்ளுவப் பெருந்தகையார் தனது செய்யுள்களில் பின்வருமாறு கூறியுள்ளார்.

**''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு**
**மாடல்ல மற்றுப் பிற''**

பொருட் செல்வம் சிறந்ததாயின் பிறருக்கு கொடுக்கும் தோறும் குறைந்து கொண்டே போகும். கள்வராலும், அரசர்களாலும், தீயாலும் வெள்ளத்தாலும் அழிந்து ஒழிந்து போகும். செல்வத்தை சம்பாதித்தல், காப்பாற்றல், பேணல் ஆகியவற்றால் பெருந்துன்பம் கொடுக்கும். பலரை பகைக்க வைக்கும். கல்விச் செல்வமோ!

**''வெள்ளத்தால் அழியாது வெந்தழலால் வேகாது**
**வேந்தராலும் கொள்ளத்தான் முடியாது**
**கொடுத்தாலும் நிறைவின்றிக் குறைவுறாது - கள்ளர்க்கோ**
**கள்வர்க்கோ பயமில்லை காவலுக்கோ மிக எளிது''**

எனவே பொருட் செல்வத்திலும் கல்விச் செல்வமே சிறப்புடையது. முடியுடைய மன்னனுக்கு தன்தேசத்தில் மட்டும்தான் சிறப்பிருக்கும். ஆனால் கல்வியைக் கசடறக் கற்றவர்களுக்கு தன் தேசம் மட்டுமல்லாத அவர்கள் செல்லும் தேசமெல்லாம் சிறப்பிருக்கும். இதனை ஔவைப் பிராட்டியார் தனது செய்யுளில் அழகாகக் கூறியுள்ளார்.

**''மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்**
**மன்னனில் கற்றோன் சிறப்புடையோன் - மன்னனுக்கு**
**தன் தேசமல்லால் சிறப்பில்லை கற்றோனுக்கு**
**சென்ற இடமெல்லாம் சிறப்பு''**

மற்றும் வருந்தி நாம் கற்கும் கல்வியானது இப் பிறப்புக்கு மாத்திரமல்ல ஏழு பிறப்பும் தொடர்ந்து வரும். உயர்குலமும், அழகும், செல்வாக்கும் உடையவரேனும் கல்வியறிவு இல்லாதவராயின் முருக்கம் பூவிற்கு சமமாவர். அறிவில்லாதவரின் அழகு மண்ணால் புனைந்த அழகான பாவைக்கு சமமாகும். கல்வியழகு ஒன்றே உயர்ந்தது இதனை நாலடியார்.

**''குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து**
**நல்லம்யாம் என்னும் நடுநிலைமையால்**
**கல்வி யழகே அழகு''**

என்று தனது பாடலில் கூறியுள்ளார். கல்லா ஒருவன் குணநலன் பேசுதல் நெல்லிப் பிறந்த பதராகுமே என்றார். நன்னெறி தந்த அதிவீர பாண்டியரை பெற்றெடுத்த தாய் கூட தம் பிள்ளைகளில் கற்றவனையே பெரிதும் விரும்புவாள். அவ்வாறே சமுகமும்

**''எக்குடிப் பிறப்பினும் யாவராயினும்**
**அக்குடியில் கற்றோரே மேல் வருக''** எனக்கூறும்

கல்வியறிவு இல்லாதவருக்கு நுட்பமான அறிவு சிற்சில நேரங்களில் தோன்றினாலும் அதனை உயர் அறிவாக பெரியோர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். இதனை வள்ளுவர், ஔவையார், நாலடியார் போன்றோர் தனது செய்யுள்களில் அழகாகக் கூறியுள்ளனர். இத்தகைய பெருமை வாய்ந்த கல்வியை கசடறக் கற்று தேறவேண்டியது மாணவராகிய நம் கடமையாகும். ''இளமையில் கல்வி சிலையில் எழுத்து'' என்ற ஔவையின் கருத்துக்கு இணங்கவும் ''இளமையில் கல்வியை இழந்தவன் எல்லாம் இழந்தவனே'' என்னும் பொன் மொழிக்கு ஏற்ப நாம் இளமையில் கல்வியைக் கற்றுத் தேற வேண்டும். நுனிப்புல் மேய்தல் போல் கற்காது ஆழமாகக் கற்க வேண்டும். நாள்தோறும் சிரமம் பாராது கற்றல் வேண்டும்.''தலை குனிந்து படிப்பதெல்லாம் தலை நிமிர்ந்து வாழ்வதற்கே'' என்றும் கல்வி எனும் பயிருக்கு கண்ணீர் எனும் மழை வேண்டும்'' எனும் மொழிக்கேற்பவும் நாம் கல்வியை வருந்திக் கற்க வேண்டும். நல்லாசிரியரின் குறிப்பின் படி ஒழுகி தண்ணீர்த் தாகம் உடையவன் நீரை ஆர்வத்துடன் பருகுவது போல நாமும் ஆர்வத்துடன் கற்க வேண்டும்.

கல்வியை கருத்தூன்றிப் படி, ஆழமாகப்படி, வாழ்வதற்காகவே படி, படிப்பதற்காகவே வாழ், படிக்க வேண்டியதை மட்டும் படி படித்ததை சிந்தித்து உணர்ந்து கற்றதன் படி ஒழுகு. ஏனெனில் கல்வியின் குறிக்கோள் நல்வாழ்வு வாழ்வதே.

**''பாடை ஏறினும் ஏடது கைவிடேல்''**

**வ. தயாளன்**
**10B**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மலருக்கு எம் உளம் கனிந்த
நல் வாழ்த்துக்கள்

PEOPLE'S BANK

# மக்கள் வங்கி

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.





# சிறி நதியா நகை மாளிகை

56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.





# Sree Nathiya Nakai Maaligai

56, Kasthuriyar Road, Jaffna.
Tel : 021 222 2709


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மலருக்கு எம் உளம் கனிந்த
நல் வாழ்த்துக்கள்

HNB

ஹற்றன் நஷனல் வங்கி
(வரையறுக்கப்பட்டது)

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Natton National Bank (Ltd)

Hospital Road, Jaffna.

இம் மலருக்கு எம் உளம் கனிந்த
நல் வாழ்த்துக்கள்

எஸ்.எஸ்.தரன் பான்சி





இல.28, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
(வாழைப்பழக்கடைக்கு அருகாமை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசி

ராகவன் ஒன்பதாம் தரத்தில் கல்வி கற்கும் ஒரு அமைதியான மாணவன் ஒரு நாள் வகுப்பறையில் தமிழ் பாட வேளை. மல்லிகா ரீச்சர் கோவலன், கண்ணகி கதையைச் சுருக்கமாக விளம்பிக் கொண்டிருந்தார். முன் வரிசையில் இருந்த ராகவன் எதையோ கூற எழுந்த வேளை சடார் என்று மயக்கம் போட்டு மேசையின் முன்புறமாக கீழே விழுந்தான். வகுப்பறையில் ஒரே கூச்சல். அதிபரின் அறையில் இருந்து கட்டளையும் வந்தது. மாணவ மாணவிகள் செய்வதறியாது கலங்கினர். மல்லிகா ரீச்சர் குமாரை அனுப்பி தண்ணீர் எடுத்து ராகவனின் முகத்தில் மெதுவாக தெளித்தார். ராகவன் எழுந்தான் அவனது தொண்டை வரண்டது. எதையோ கூறுவதற்கு எத்தனிக்கிறான் அவனால் முடியவில்லை.

மல்லிகா ரீச்சர் அவனது நிலையை அறிந்து கொண்டார். ராகவன் மீண்டும் பழைய நிலையை அடைய ஒரு மணிநேரம் எடுத்தது. அதற்குள் மல்லிகா ரீச்சர் ராகவனின் சூழல் பற்றி அறிய விரும்பினார். உடனே ராகவனின் வீட்டிற்கு அருகே உள்ள அவனது நண்பன் குமாரிடம் விபரமாகக் கேட்டார். ராகவன் தந்தையை இழந்த அப்பாவி பையன் அவனுக்கு நான்கு சகோதரிகள் வீட்டில் யாரும் வேலைக்குச் செல்வதில்லை அரசாங்கத்தினால் வழங்கப்படும் உலர் உணவு நிவாரணமே அவர்களது வயிற்றுப் பசியை தீர்த்து வந்தது. அதுவும் இப்போது ஏதேதோ காரணங்களுக்காக வழங்கப்படுவதில்லை என்று கலங்கியபடி குமார் முடித்தான். உடனே மல்லிகா ரீச்சர் தனது பணப்பையை எடுத்து இருப்பது ரூபாவை ராகவனிடம் கொடுத்து கன்ரீனில் ஏதாவது வாங்கிச் சாப்பிடும்படி கூறினார். ராகவனின் இவ்வேளை பசி தீர்ந்தது. ஆனால் அடுத்த வேளை பசி....?

த.ஜீவனா
தரம் - 11 B

# நாடுகளும் நாணயங்களும்

| நாடுகள் | நாணயம் |
|---|---|
| 01. ஆர்ஜென்டினா | ஒஸ்ரல் |
| 02. அவுஸ்ரேலியா | டொலர் |
| 03. ஆஸ்திரியா | ஷில்லிங |
| 04. பஷ்ரைன் | பகிறேன் டினார் |
| 05. பெல்ஜியம் | பிராங் |
| 06. பிரேசில் | குறுசடா |
| 07. கனடா | கனடா டொலர் |
| 08. ஜப்பான் | ஜென் |
| 09. குவைத் | தினார் |
| 10. ஜேர்மன் | யூரோ |
| 11. சவுதி அரேபியா | சவுதி ரியால் |
| 12. அமெரிக்க ஐக்கிய நாடு | அமெரிக்க டொலர் |
| 13. ஐக்கிய இராச்சியம் | இஸ்ரேலிங் பவுண் |
| 14. பிரான்ஸ் | யூரோ |
| 15. இத்தாலி | யூரோ |
| 16. கொலம்பியா | பீசோ |
| 17. இந்தோனேசியா | ரூபியா |
| 18. தென்கொரியா | வொன் |
| 19. குவைத் | குவைத் டினார் |
| 20. சிங்கப்பூர் | சிங்கப்பூர் டொலர் |
| 21. சுவிட்சர்லாந்து | யூரோ |
| 22. வெனிசுலா | பொலிவர் |
| 23. பீரு | சோல் |
| 24. பிஜி | பிஜியன் |
| 25. எகிப்து | எகிப்திய பவுண் |
| 26. பிலிப்பைன்ஸ் | பெஸோ |
| 27. நெதர்லாந்து | கில்டர் |

By: ம. சோதிருபன்
10B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனாதைச் சிறுமியின் கதை

**நா**ன் பிறக்கும் பொழுதே அநாதை என்ற முத்திரையைக் குத்திக் கொண்டு பிறக்கவில்லை. எனக்கும் தாய் தந்தை இருந்தது உண்மைதான். 'செல்லக் கிளியே', 'சித்திரமே', 'பொன்விளக்கே' என்று என்தாய் என்னையும் தொட்டிலில் இட்டுத் தாலாட்டித் தான் வளர்த்தாள். என் தந்தை என்னை அன்போடு முத்தமிட்டு தமது மார்பிலும் தோளிலும் இட்டுச் சீராட்டிப் பாராட்டத் தவறியதில்லை உங்களைப் போலவே நானும் பள்ளி சென்று அரிச்சுவடி தொடங்கி 8ம் வகுப்பு வரை படித்ததையும் மறந்து விடவில்லை ஆனால்......

இன்று நான் அநாதையாய் அலைகடல் துரும்பாய் ஆதரிப்பார் இன்றி கந்தலாடையும் கண்ணீர் மாலையும் தரித்தவளாய் கால் வயிற்றை நிரப்ப காதவழி நடக்க நேர்ந்துள்ளமைக்கு எனது விதிதான் காரணம் என்று அதன் மீது பழிபோடவும் தயாரில்லை. நான் பிறந்த நாடு, பிறந்த காலம், வாழ்ந்த சூழல் என்பவை தாம் அடிப்படைக் காரணங்கள். இதுதான் உண்மை.

**''ஈழ மணித்திரு நாடெங்கள் நாடே - இந்த**
**இனிய வுணர்ச்சிபெற் றாலின்ப வீடே''**

என்று என் ஆசிரியர் இசையோடு பாடி எங்களையும் பாடவைத்து மகிழ்ந்த நாட்கள் இன்றும் எனது மனத்திரையில் நிழலாடுகின்றன. அன்று ஈழம் என்றால் இலங்கை என்று அவர் பொருளும் கூறுவார். ஆனால் தமிழர் வாழும் வடக்கு கிழக்கோடு கூடிய ஈழத்தையும் உள்ளடக்கியது இலங்கை என்றும் அது தமிழருக்கு வாழ்வழியாது பெரும் பான்மையினராகிய சிங்களவருக்கு மட்டுமே வாழ்வழிக்கும் என்றும் அதற்காக தமிழருக்கு என்ன கொடுமையும் செய்யத் தயங்காது என்றும் நான் அறிந்த பொழுது அந்த அறிவைப் பெற எனது பெற்றோரையே குருதட்சணையாக வழங்க நேர்ந்த பொழுது...... என் அநாதைத் தனத்துக்கு நான் பிறந்த நாடுதான் வழிவகுத்தது என்று உணராமல் இருக்க முடியுமா? ஏனெனில் நான் ஒரு தமிழிச்சி.

நான் பிறந்தது மட்டக்களப்பில் என் தந்தையார் சின்னத்தம்பி. அவர் பயிற்றப்பட்ட தமிழாசிரியர். என் தாய் கண்ணம்மை. நான் அவர்களுக்கு ஒரே மகள். எனக்கு மூத்தோன் ஒருவன் பிறந்து இரண்டு வயதாய் இருக்கையில் இறந்து போனான். அவன் அதிர்ஷ்டசாலி. இதன் பிறகு நான் எனக்குப் பின் தாயின் மணிவயிறு வாய்க்கவில்லை. என்னை என் பெற்றோர் எவ்வளவு செல்லமாய் வளர்த்திருப்பார்கள் என்று நினைத்துப் பாருங்கள். கவலையோ, தேவைகளோ ஏற்படாதவாறு அவர்கள் கண்ணின் மணியாக என்னைக் காத்து வந்தார்கள்.

1990 ஜீலை 10ம் திகதி ... எல்லா நாளும் போல அந்நாளும் விடிந்தது. ஆனால் என் பெற்றோர்களுக்கோ அந்த நாளே அந்திம நாளாக, இறுதி நாளாக விடிந்தது. பேரினவாதத் தகரக் கழுகுகள் குண்டுவீச்சு விமானங்கள் எங்கள் ஊரவர்கள் மேலாக விரைந்து பறந்து வந்தன, சரிந்தன, கரணமடித்தன. எங்கள் ஊரார்கள் இந்த வீர சாகசங்களை இரசிக்கவோ ஆற அமரப் பார்த்து மகிழவோ வாய்ப்புக் கிடைக்கவில்லை. மாறாகக் காது செவிடுபடும் பேரோசையோடு குண்டுகள் மழையாகப் பொழிந்தன. எங்கள் வீடும் அயல் வீடுகள் சிலவும் தரைமட்டமாயின. அவலக் குரல் அங்கும் இங்கும் எழுந்தன. பயத்தினால் நான் மயங்கித் தரையிலே சாய்ந்து விட்டேன்.

மயக்கம் நீங்கி நான் எழுந்திருந்த வேளையில்.... எங்கள் வீட்டு முற்றத்தில் என் தந்தையும் தாயும் இரத்த வெள்ளத்தில் பேச்சற்ற பெரு மௌனத்தில் ஆழ்ந்து போய்க் கிடக்க கண்டேன்.

அம்மா, அப்பா, ஐயோ!! என் தொண்டைக்கு இந்த மூன்று சொற்களையும் வெளியிடும் சக்தி இல்லை.

மீண்டும் மயங்கிப் போய் என் பெற்றோர்க்குச் சற்றுத் தொலைவில் நானும் ஓர் பிணமாக கிடந்தது தான் எனக்குத் தெரியும். சில நிமிடங்கள்.. ஆனால் பல யுகங்கள்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் எழுந்திருந்த பொழுது என் பக்கத்தில் ஆழ்ந்த அனுதாபத்தோடு பெரு மூச்சு விட்ட வண்ணம் அடுத்த வீட்டு மாமி நிற்கக் கண்டேன்.

''பிள்ளை.... உன்ரை அப்பா அம்மா உனக்கில்லை. என்ரை புருஷன் பிள்ளைகள் எனக்கில்லை. இந்த ஊரே பிணக் காடாய்க் கிடக்குது. இனியும் இங்கை நாங்கள் இருக்கக் கூடாது. தப்பிப் பிழைக்க சனங்களொடு சேர்ந்து நாங்களும் காட்டுக்கை ஓடித் தப்புவம்"

நான் பேசவில்லை.... பேசத்தான் என்ன இருக்கின்றது? மாமி இயக்க நானும் இயங்கி என் பெற்றோரைக் கடைசி முறையாகப் பார்த்து ஒரு பாட்டம் அழுதேன்.

ஆனால் நான் இனியும் இந்தப் பாழ்மனையில் நிற்கக் கூடாது அது எனக்கு நல்லதல்ல. மாமிக்கும் நல்லதல்ல இருவரும் வீதியில் இறங்கினோம். எங்களைப் போலவே உயிர் தப்பிய அநாதைக் கூட்டம் காயங்களுடனும், ஊனங்களுடனும் வீதியில் ஊர்ந்து கொண்டிருந்தன. பேச்சில்லை... அழுகை... அழுகை... அழுகையே தான்.

நாங்களும் அவர்களைத் தொடர்ந்தோம். காட்டிலே பசியைக் கைகோர்த்து, நோயை அரவணைத்து, பயத்தையே வழிகாட்டியாக்கி ஒரு மாதம் வரை அங்கே மரங்களின் கீழ் கிடந்தோம். இலை, குலைகள், காய் கனிகள் தான் எங்கள் உணவு. நாகரீக மாந்தராய் வாழ்ந்த நாம் ஒரு சில நிமிடங்களிலே ஆதிவாசிகளாகிக் காடுறைய நேர்ந்தது. எங்கள் சூழலிலே மரணம் தனது பயங்கர நிழலை அடிக்கடி வீழ்த்தியது. பசியால் அலைந்து வெய்யிலில் உலர்ந்து பனியாய் கொடுகி மீண்டும் பயம் துரத்த நடந்தோம்..... நடந்தோம்... தொடுவானத்துக் கடலின் எல்லையைக் குறி வைத்துச் செல்லும் உடைந்த மரக்கலத்தின் பயணம் எங்கள் பயணமாய் அமைந்தது. கடைசியில் அகதி முகாம் எங்களுக்குப் புகலிடமாயிற்று. நான் இன்று அனாதை மட்டுமல்ல அகதியும் கூட..... என் போன்றவர்களின் எதிர்காலம்...? ஓ! கடவுளே! நீதான் பதில் சொல்ல வேண்டும்.

த. மாலினி
10B

* நம்மை புறஊதாக் கதிர்களிலிருந்து பாதுகாக்கும் 'ஓசோன் மண்டலத்தை' ஓட்டையாக்குவது ஃபிரிஜ், ஏயார்கன்டிஷன் போன்றவற்றிலிருந்து வெளியேறும் குளோரோ ஃப்ளூரோ காபன் 'என்ற வாயு

* மிக அதிக மொழிகள் உள்ள நாடு பாப்புவா நியூகினியா இதன் அரசு மொழி ஆங்கிலம். ஏனைய மொழிகள் 715க்கும் அதிகம்.

* எரிமலையிலிருந்து தூக்கி வீசப்படும் தூசி மற்றும் சாம்பல் வளிமண்டலத்தில் ஐம்பது கிலோமீற்றர் வரை பரவக்கூடியவை.

* நாம் தினமும் அருந்தும் பால் வெண்மையாக இருப்பதற்கு அதில் கெசின் (Kesin) என்ற புரோட்டின் சத்து இருப்பதே காரணம்.

* விஞ்ஞானிகள் தங்கள் கண்டுபிடிப்புக்களை பொது நலத்திற்கு பயன்படும் வகையில் சேமித்து வைக்கும் அமைப்பின் பெயர் - காப்புரிமை அமைப்பு. (Patent office)

* ஒவ்வொரு இரண்டு வாரத்திற்கும் உலகத்திலுள்ள மொழிகளில் ஒன்று அழிந்து போகிறதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

நல்லூர் என்றுமே இலங்கையில் வரலாற்றுப் புகழ், சமயப்புகழ், இலக்கியப்புகழ் கொண்ட ஊராக விளங்கி வருவது யாவரும் அறிந்ததே. அந்த நல்லூரிலே சைவசமயத்தையும் தமிழையும் காக்க 1822ம் ஆண்டு கந்தப்பிள்ளை, சிவகாமி ஆகியோருக்கு பிறந்தவரே ஆறுமுகநாவலர். இவருடைய இயற்பெயர் ஆறுமுகம் என்பதாகும்.

ஆரம்பத்தில் தனது தந்தையாரிடமும் பின்னர் நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயர், நல்லூர் வேலாயுதமுதலியார் ஆகியோரிடமும் ஆரம்பக்கல்வி கற்ற இவர் நல்லூர் ம.சரவணமுத்து புலவரிடம் தமிழ் கற்றார்.

இவரது பன்னிரெண்டாவது வயதில் பீற்றர் பேர்சிவலை அதிபராகக் கொண்ட ஆங்கிலப் பாடசாலையில் நான்கு ஆண்டுகள் பயின்று பட்டை தீட்டப்பட்ட வைரமாக ஜொலித்தார். ஏற்கனவே தமிழ், சமஸ்கிருதம் இருமொழிகளிலும் சிறந்த புலமை பெற்ற நாவலர் அதே ஆங்கிலப் பாடசாலையில் ஆங்கிலம், தமிழ் கற்பிக்கும் ஆசிரியராக 16வது வயதில் நியமிக்கப்பட்டார். அத்துடன் நில்லாது அதிபர் பேர்சிவல் பாதிரியாருக்கும் தமிழ். சமஸ்கிருதம் பயிற்றுவிக்கும் ஆசானாகவும் திகழ்ந்தார். அதேவேளையில் 1841ம் ஆண்டு கிறிஸ்தவ வேதநூலை (பைபிளை) பேர்சிவர் பாதிரியாரின் வேண்டுகோளுக்கிணங்க தமிழில் மொழி பெயர்த்தார்.

31ம் மார்கழித் திங்கள் 1847 ல் ஆறுமுகநாவரின் முதல் பிரசங்கம் இடம்பெற்றது. சைவசமய பற்றாளராகிய இவரது பிரசங்கம் நடைபெற்ற நாள் வெள்ளிக்கிழமை என்பது குறிப்பிடத்தக்கது. அதனைத் தொடர்ந்து பிரதி வெள்ளி தோறும் யாழ்.வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய வசந்த மண்டபத்தில் இவரது பிரசங்கம் நடைபெற்றன.

சைவசமயத்தில் வெறிகொண்டவராகத் திகழ்ந்த நாவலர் சைவத்தமிழ் மாணாக்கர்கள் கல்வி கற்க வேண்டுமென விரும்பி தமது இல்லத்தில் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய பாடங்களை கற்பித்து வந்தார். இவர் 1848ல் சைவப்பிரகாச வித்தியாசாலையை வண்ணார் பண்ணையில் அமைத்து மாணவர்கள் பயன்பெறச் செய்தார். இலவசக்கல்வி, இலவச நூல் விநியோகம் என்று தமிழுக்காகவும் சைவசமயத்துக்காகவும் தொண்டாற்றிய பெருந்தகை நாவலர் அவர்களே.

திருவாவடுதுறை ஆதினத்தில் தங்கியிருந்த வேளை அறிஞர்கள் இவரை ''சைவசித்தாந்தப் பொருள்'' பற்றிப் பிரசங்கம் செய்யுமாறு அன்புரிமையுடன் வேண்டிக் கொண்டனர்.

யாழ்ப்பாண மண்ணுக்கே உரித்தான செந்தமிழ், எளிய இனிய நடை ஆற்றொழுக்கான தமிழ் உச்சரிப்பு, அகமஞானம் என்பவற்றுடன் சைவ பக்தியுடன் கூடிய சைவம் பற்றிய பதி, பசு, பாசம் என்ற தலைப்பிலே ஆறுமுகம் உரையாற்ற அவையே மெய்மறந்து அந்த உரையில் உறைந்திருந்தது.

அன்றுதான் ஆதீனத்தலைவர் அம்பலவாணதேசிகர் ஆறுமுகத்தை அரவணைத்து ஆனந்தக் கண்ணீர் மல்க 'நாவலர்' என்ற பட்டத்தை வழங்கினார். இதுவே ஆறுமுகம் 'ஆறுமுகநாவலர்' என பெயர் மாற்றம் பெறக் காரணமானது. அந்தப் பெயர் தமிழ் வாழும் வரை நிலைத்து நிற்கும்.

இவை மட்டுமன்றி இவர் அச்சியந்திரங்களை நிறுவினார் ''வித்தியாநுபாலன யந்திரசாலை'' எனும் பெயரில் சென்னையிலும், யாழ்ப்பாணத்திலும் அச்சகங்களை தாபித்து நூல்களை வெளியிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நாவலர் பதிப்பு' சுத்தமானது என்று தமிழறிஞர்கள் கருதத்தக்க வகையில் மிகுந்த பொறுப்புணர்வுடன் பதிப்புத்துறையில் இவர் ஈடுபட்டார். முதன்முதல் திருவாசகம், திருக்கோவையார் ஆகியவற்றை பரிசோதனை செய்து தமது மாணவரான சதாசிவம் பிள்ளையின் பெயரால் வெளியிட்டார். 'சூடாமணி', 'நிகண்டு', 'நன்னல் விருத்தியுரை', 'திருக்குறள் பரிமேலழகர் உரை' போன்ற நூல்களையும் இன்னும் பல நூல்களையும் நாவலர் பதிப்பித்தார்.

நாவலரின் பணிகளில் பத்திரிகை தொடர்பான பணியுமொன்று நாட்டுப் பிரச்சனைகளை மக்கள் முன் கொணர்ந்து அவை தொடர்பான தனது கருத்துக்களை ''உதயதாரகை', 'இலங்கை நேசன்', 'இலங்காபிமானி' போன்ற பத்திரிகைகளில் எழுதினார்.

'உரைநடையின் தந்தை' 'வசனநடை கைவந்த வல்லாளர்' என்று போற்றப்படும் இவர் காலத்தின் தேவையையும் மக்களின் பயன்பாட்டையும் கருத்திற் கொண்டு உரைநடையை புதியபாதையில் செல்ல வைத்தவர்.

நாவலர் வாழ்ந்த காலத்தில் கிறிஸ்தவ மதம் ஆட்சியாளரது சமயமாக இருந்ததால் அதில் குறை காண்பதற்கும், எதிர்ப்பதற்கும் தயங்கிய சைவர்களிற்கு உற்சாகம் கொடுத்தவர் நாவலர். கிறிஸ்தவர் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய ''சைவதூஷண பரிகாரம்'' என்ற பிரசுரத்திற் காணப்படும் வாசகங்கள் நாவலரின் துணிவுக்கும் சைவ உணர்விற்கும் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

சி.வை.தாமோதரம்பிள்ளை 'நல்லை நகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே...?' என்ற பாடல் மூலம் இவரைச் சிறப்பித்தார். எஸ். சோமசுந்தரப் பாரதியார் ''முன்னே பல பாகங்களிலும் தமிழகத்திலிருந்து தான் பெற்ற சில சிறு நன்மைகளை வட்டியுடன் பெருக்கி ஒரு காலத்து ஒரு முகமாகப் பழங்கடனைத் தீர்த்து'' என்றுஞ் ''தீர்க் கொணாதவாறு தமிழகத்தை ஈழநாட்டிற்குக் கடமைப்படுத்திய பேருபகாரி'' நாவலர் என்றும் கூறியுள்ளார். இவ்வாறு அறிஞர் பெருமக்கள் போற்றும் வகையில் ஆறுமுகநாவலரின் பணிகள் 19 ஆம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வளர்ச்சியிலும் சமய வளர்ச்சியிலும் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது.

தமிழ் வளர்த்த பெருமகன் என்று இவரைப் புகழ்ந்த ஈழமக்கள் 1969ம் ஆண்டு அவருக்கு சிலை எழுப்பி விழா எடுத்தனர். இத்தகைய நாவலர் 1879இல் தனது 57 வது வயதில் இயற்கை எய்தினார்.

தமிழும்.... சைவமும் வாழும் வரை நமது நாவலர் வாழ்வார்.

**சி.சுகந்தினி**

**தரம் - 10A**

- ✪ அதிக வருத்தத்தோடு உன்னைப் பெற்று வளர்த்த பிதா, மாதாக்களை, நீ என்ன வருத்தப்படினும், மறந்தும், கைவிடாமலும் அன்போடு காப்பாற்று.
- ✪ ஈஸ்வர பக்தியும் நல்லொழுக்கமும் உள்ள பிதா மாதாக்களை உடைமையே பெரும் பாக்கியம்.
- ✪ இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முக்தி இன்பம் பெறும் பொருட்டேயாம்.
- ✪ நம்முடைய குற்றங்கள் இவைகளென்று நமக்குத் தெரிவித்து அவைகளை நீக்கி நடக்கும் நெறியை நமக்குப் போதிக்கின்றவர்களே நமது உத்தம சிநேகிதர்கள்.

-நாவலர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்களும் பண்புள்ளவர்களா...?

அது ஒரு மலைப் பிரதேசம் பல இன மக்கள் தொழில் புரியும் இடம் அங்குதான் அனி எனும் ஆங்கிலேயப் பெண் வாழ்ந்து வந்தாள். அவளுடன் தாய் தங்கைகள் ஆகியோரே இருந்தனர். இவளின் அக்காவான வயலெட் என்பவள் திருமணம் முடித்து வாழ்ந்து வந்தாள். அனியின் குடும்பத்தில் மொத்தமாக ஐந்து பேரே அடங்கியுள்ளனர். தந்தை இறந்தபின் தாயின் உழைப்பிலேயே வளர்ந்தனர். அனியின் தாய் மலை நாட்டில் இருந்தாலும் தாதியாகக் கடமை ஆற்றினாள்.

பின்பு தாய் நோய் வாய்ப்பட்டதும் வீட்டுப் பொறுப்பு அனைத்தும் மூன்றாவது மகளாகிய அனியையே சார்ந்தது. இரண்டு தங்கைகளையும் படிப்பித்து ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வர வேண்டும் என்ற ஆசையுடன் வேலைக்குச் செல்லத் தயாரானாள். அனி பேருக்கு ஏற்ற மனமும் குணமும் உடையவள் பெரியோருக்குப் பணியும் தன்மை, வேண்டியளவு பொறுமை. அடக்கம் என்பன கொண்ட இவளை இவளின் தாய் மிகவும் நல்ல நிலையிலே படிப்பித்து விட்டிருந்தாள். அனிக்கு சங்கீதம் என்பது மிகவும் பிடித்த பாடமாகும். இதனால்தான் என்னவோ அவள் பாடுவதில் சிறந்து விளங்கினாள் அனி தனது படிப்புக்கு ஏற்ற வேலையையே தெரிவு செய்திருந்தாள். வங்கியிலே கணக்காளராகக் கடமையாற்றினாள்.

வங்கியில் கடமை ஆற்றும் இவளுக்கு மலை நாட்டிலிருந்து வந்து செல்வது மிகவும் கஷ்ரமாக இருந்தது. அனியின் வீடானது மிகவும் அழகான வீடாக இருந்தது. வீட்டைச் சுற்றி பசுமையான புல் வெளிகளும் பூக்கன்றுகளும் பச்சை பசேலென தேயிலைத் தோட்டமுமாக காணப்பட்டது. அனி தனது வாழ்வில் முதல் சாதனையை படைத்தாள். ஆனால் அது சில காலம் தான் நிலைக்கும் என்று அவளுக்கு எங்கே தெரிந்தது ஆம் அனி தனது மூத்த தங்கையை பல்கலைக்கழகம் வரை அனுப்பிவிட்டாள். இவளின் சந்தோசத்துக்கு அளவேயில்லை. பல்கலைக்கழகம் படித்துக் கொண்டிருந்த அனியின் தங்கையான கனி நான்கு மாதங்கள் பல்கலைக்கழகத்தில் படித்தாள்.

பின் இவளின் சொந்த நாடான அமெரிக்காவில் கனியின் அத்தையின் மகனுக்கு தாயின் விருப்பப்படி திருமணம் செய்து வைத்தார்கள். நாட்கள் யாருக்காவும் காத்திராமல் நகர்ந்தது. அன்று திங்கட்கிழமை விடிந்ததும் அனியின் மனதில் ஏதோதோ பல கூடாத கற்பனைகள் வந்து நிழலாடின. அவ்வாறு இருப்பது எதற்காக என்று அறியாத அனி வேலைக்குப் புறப்பட்டாள். மதியம் 12.00 மணியளவில் அனிக்கு அமெரிக்காவிலிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது என்று பியோன் அறிவிக்க தனது தங்கை என்று அவளுடன் ஓடிச் சென்று போனைக் காதில் பொருத்தியவளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

தொடர்பு கொண்டது அவளின் தங்கை அல்ல அது அனியுடன் சிறுவயதிலிருந்து உடன் படித்த, அன்புத் தோழி லில்லி அவள் எடுத்தது. சந்தோசமாக இருந்தாலும் சொன்ன செய்தி தனது தலையில் பல உலக்கை ஒன்றாக விழுவது போலிருந்தது. அச் செய்தி அனியின் பாசத் தங்கையான கனியின் மறைவுச் செய்தியாகும். ''மூன்று குத்து விளக்குகளில் ஒன்று அணைந்த நாள். தனது தங்கையின் திடீர் மறைவுக்கான காரணத்தைக் கேட்டதும் அனியின்மனதில் ஒரு பெரும் புயல் அடித்தது போலிருந்தது தனது தங்கையின் சாவுக்கு காரணம் அத்தையின் மகனே என்பது ஆகும்.

தனது தங்கையை அத்தையின் மகன் ஈவு இரக்கம் அற்ற முறையில் குத்திக் கொன்றான் என்பதாகும். இச் செய்தியைக் கேட்ட அனிக்குத் தான் சிறு வயதில் இருந்து பார்த்த இவனா இவ்வாறு செய்தான்? என்று இருந்தது. அனி தனது நோய்வாய்ப்பட்டிருக்கும் தாய்க்கு எவ்வாறு இதைச் சொல்வது என்ற யோசனையுடன் வீடு சென்று கொண்டிருந்த போது தனது கடைசித் தங்கையின் அழும் குரலைக் கேட்டு அதிர்ந்தாள். என்ன நடந்தது என்று அறிய தனது நடையை வேகப்படுத்தினாள் அப்போது எதிர் வீட்டில் வசிக்கும் மூதாட்டி அனியைக் கண்டதும் ஓடிச்சென்று விசயத்தைச் சொன்னாள் ஆம் கனியின் மரணச் செய்தியை கேட்ட தாய் அதிர்ச்சியினால் இறந்து விட்டார். இதைக் கேட்ட அனிக்கு தனது அத்தையின் மகன் மீது அளவில்லாத கோபமும் வெறுப்பும் ஏற்பட்டது.

பின்பு தனது தாயின் இறுதிக் கடன்களை எல்லாம் முடித்து விட்டு தனது கடைசித் தங்கையே உலகம் என்று வாழத் தொடங்கினாள். ஒரு நாள் வேலை நிமித்தமாக அமெரிக்காவுக்குச் செல்ல நேர்ந்தது. தனது தங்கையையும் அழைத்துக் கொண்டு அங்கு சென்றாள். அப்பொழுது அவளின் தங்கை இறந்து ஒரு வருடங்கள் ஆகிவிட்டிருந்தது அமெரிக்காவில் தனது வேலையை முடித்துக் கொண்டு நாடு திரும்புவதற்காக விமான நிலையத்துக்குச் சென்றனர். அங்கு சென்ற இவர்களை யாரோ அழைத்தது போலிருந்தது. அது வேறு யாருமல்ல அவளுடைய அத்தை மகன் தான்.

அவன் பல அநியாயங்களைச் செய்தவன். இப்பொழுது அதற்கான தண்டனையையும் அனுபவிக்கிறான். இவன் பலரை அநாதை ஆக்கியவன். இப்பொழுது தண்டனையாக ஒரு காலை இழந்தும் கை வழங்காது HIV எனும் கொடிய தொற்று நோயினால் பீடிக்கப்பட்டிருந்தான் இதைப் பார்த்த அனிக்கு தான் சிறு வயதிலே படித்த பழமொழிகளுள் 'அடாது செய்தவன் படாது படுவான்'. 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்பன ஞாபகம் வந்தது. இதற்காக மூத்தோரை மனதினுள் வாழ்த்தியவாறு சென்ற இவளை, கடைசித் தங்கை பார்த்து இவரும் பண்புள்ளவரா? என்று கேட்டாள் தனது தங்கையின் இந்தக் கேள்விக்கு பதிலளிக்க முடியாமல் தவித்தபடி விமானத்தில் ஏறினார்கள். விமானம் தனது இலக்கை நோக்கி சிட்டாகப் பறந்தது.

**த்.சுதர்சனா**
**தரம் - 11**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மலருக்கு எம் உளம் கனிந்த
நல் வாழ்த்துக்கள்

K. Klatharan
Proprietor

# Thirumurugan Com Net

*Communication & computer Systems*

WESTERN UNION
Money Transfer

Office
259.K.K.S Road,
Jaffna.
Hot Line 0777 554528

FedEx
Express

Tel - 021 222 7835  Fax - 021 222 7836

E.mail :- thirumuruglan@lycosmail.com

இம் மலர் தொடர்ந்து வெளிவர எங்கள்
நல் வாழ்த்துக்கள்

# அம்பாள் ரேட் சென்றர்
# இரும்பு வாணிபம்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மலருக்கு எம் உளம் கனிந்த
நல் வாழ்த்துக்கள்

நியூ ஜென்ஸ் கோணர்

இல.45, நவீன சந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.



New
Gents
Corner

No. 45, Modern Market (Inside),
Jaffna.

021 - 222 7659



இம் மலருக்கு எம்
உளம் கனிந்த
நல் வாழ்த்துக்கள்

அஸ்விதா ரெக்ஸ்



No. 27, New Market ,
Jaffna.

இல.27, நவீன சந்தை ,
யாழ்ப்பாணம்.

தொ.பே. 021 222 7659

இம் மலருக்கு எம் உளம் கனிந்த
நல் வாழ்த்துக்கள்

சிவகணேசன் ரெக்ஸ்



SIVAKANEESAN TEXTILES

# 41 Grand Bazaar,
Jaffna., Sri Lanka.
Tel No : 2222063



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மலர் மென் மேலும் வளர
வேண்டுமென்று வாழ்த்துகிறோம்

# கரன் நகை வாணியம்

நகை வைர வியாபாரம்

ஓடர் நகைகள்
குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன்
22 கரட்டில் செய்து
கொடுக்கப்படும்.



50, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.



இம் மலர் மென் மேலும் வளர வேண்டுமென்று
வாழ்த்துகிறோம்

# பிரபா பலசரக்கு வாணிபம்

224, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மலர் மென் மேலும் வளர வேண்டுமென்று வாழ்த்துகிறோம்

J.S.Alex Nixon

# ASEER VANICA NILAIVAN

202A,K.K.S.Road, Jaffna.

**Branch:**

## ASEER VANICA NILAIVAN

**61, GRAND BAZAAR,**
**HOSPITAL ROAD,**
**JAFFNA.**

**T.P : 021 222 2842, 0777 - 721740**

**FAX : 021 222 2842**

இம் மலருக்கு எம் உளம் கனிந்த
வாழ்த்துக்கள்

# பூபாலசிங்கம் புத்தக நிலையம்

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நகரிலேயே சகல விதமான ஒவ்(f) செற் வேலைகளையும்
நவீன முறையில் செய்து கொள்ள

# தயா அச்சகம்

## Daya Computer Offset Printers

- ஒவ்(F) செற் பிறின்ட்.
- கணனி மூலம் தமிழ், ஆங்கில தட்டச்சு.
- றோணியோ. ஸ்கிறீன் பிறின்ட்.

- பாடசாலைக்குரிய சகல விதமான அச்சு வேலைகள்.
- தனியார் நிறுவனங்களுக்கு வேண்டிய பில் புத்தகம், லேபில் வகைகள்.
- வைபவங்களுக்குரிய அழைப்பிதழ்கள்.
- நினைவஞ்சலி, நினைவு மலர்கள்.

**மற்றும் சகலவிதமான அச்சுவேலைகளும் வேண்டிய வர்ணத்தில் உங்கள் விருப்பத்திற்கேற்ற வகையில் சிறந்த முறையில் செய்து கொள்ள எம்மை நாடுங்கள்.**

மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

தரம் 5 புலமைப் பரிசில் சித்தியடைய சிறந்த பயிற்சி

பாடசாலைகளில் பிரபல ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட வினாத்தாள்கள்


தயா வெளியீடு

## வெற்றி இலக்கு

பயிற்சிப் பரீட்சை தரம் - 4 , தரம் - 5

வினாத்தாள்களை மலிவு விலையில் வெளியிட்டு வருகிறோம்.
பெறவிரும்பும் பாடசாலைகள் எம்மிடம் தொடர்புகொள்ளவும்

# தயா அச்சகம்




**கொம்பியூட்டர் ஓவ்(f) செற் பிறின்டேர்ஸ்**

138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(நாவலர் பாடசாலை முன்பாக)T.P No. 222 2881.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## STRUCTURE OF THE NATIONAL INSTITUTE OF EDUCATION




KEY : ■ An NIE division under an Assistant Director General (ADG)
● A department under a Director
○ A unit under a Chief Project Officer (C. P. O)

**Mr.P. Ramakrishnan**
Teacher of English



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

**தோன்றாத் துணையாய் எம்மை வழிநடத்தும்**
**பரம் பொருட்கு முதல் நன்றி**
**உளம் கனிந்து, கரம் குவித்து நன்றியினை நவில்கிறோம்.**

## தொடரும் நன்றியறிதலில்,

❋ ஆசி தந்து, வாழ்த்துரை வழங்கிய பெரியோர்கட்கும்,

❋ வேறு பாடசாலை சென்ற போதும் நம்மை மறவாது எமது நூல் சிறப்புற ஆக்கங்கள் வழங்கிய முன்னைய எமது பாடசாலை ஆசிரியர்கட்கும்,

❋ நூலினை மெருகுற ஆக்கும் வகையில் தமது ஆக்கங்களை வழங்கிய ஆசிரியர்கள், மற்றும் மாணவர்களுக்கும்,

❋ நூலினை சிறப்புற அச்சிட்ட தயா அச்சகத்தினருக்கும்,

❋ நட்புடன் உதவிக்கரம் நீட்டிய எம்முடன் இணைந்திருக்கும் யாழ்.அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய அதிபர் K.ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கட்கும்,


❋ எமது 'நடராஜர் கலை அரங்கை' அலங்கரிக்கும் வகையில் பெரியதொரு குத்துவிளக்கினை தமது ஞாபகப் பரிசாகத் தந்த எமது முன்னைநாள் விஞ்ஞான ஆசிரியையான திருமதி.கௌ.கணேசலிங்கம் அவர்கட்கும்,

❋ ஆக்க உணர்வுடன் அள்ளித் 'தனம்' தந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும், பழைய மாணவர்களுக்கும்,

❋ சகல நிகழ்வுகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கும்,

❋ விழா சிறக்க தோளோடுதோள் நின்று உழைத்த அனைத்து ஆசிரியர்கள், ஊழியர்கள், அன்பர்கள், ஆர்வலர்கள் அனைவருக்கும்,

**கரம் குவித்து உளம் கனிந்து நவில்கிறோம் நன்றிகளை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








தயா அச்சகம், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org